
# தமிழரால் முடிந்தால் தமிழால் முடியும்



க.ப. அறவாணன்

# தமிழரால் முடிந்தால்
# தமிழால் முடியும்

க.ப. அறவாணன்

தமிழ்க்கோட்டம்
11, மோகன் நகர்
புதுச்சேரி

முதற்பதிப்பு திசம்பர் 1996

விலை · ரூ 30

சபாநாயகம கணினி அச்சு

சிதமபரம, செனனை

# முடியும் என்றால் முடியும்

எப்போதும் மலர் சிரித்துக் கொண்டுதான் இருக்கும்; கடல் உறங்காது ஆர்ப்பரித்துக் கொண்டுதான் இருக்கும். அணில் ஓடிக்கொண்டுதான் இருக்கும். இப்படி, இயற்கை இயங்கிக் கொண்டே இருக்க

முழுநேரத் தூக்கமும், தேக்கமும் சில சமுதாயங்களில் கால்விரித்து மல்லாந்து படுத்துக்கொண்டுள்ளன. அச்சமுதாயங்களுள் தமிழ்ச் சமுதாயமும் ஒன்றா? இன்றுவரை ஒன்றுதான்.

இனியும் இருத்தலாகாது என்பதற்குத்தான் என் 'சுக்குப் பொடி' எழுத்துகள். கசப்பும் காரமும் கூடுதலாகவே இருக்கும். இருக்கட்டும். அவை நலத்தை நோக்கி நல்கப்படுபவை.

தமிழ், வளம் வாய்ந்தது. தமிழரே வறியர். Tamil is rich; Tamils are poor; மக்கள் உழைப்பவராக இருப்பின், உண்பவராக இருப்பின், பாலையும்

சோலையாகும். உழைப்புணர்வு அற்றவராக இருப்பின் சோலையும் பாலையாகும்.

இசுரேல் என்ற பாலை, சோலையாகிறது; சப்பான் என்ற சமமற்ற மேடுபள்ள மண்ணில், பொன் கொழிக்கிறது. காரணம் நாடும் அன்று; நிலத்தன்மையும் அன்று. மக்களே! மக்களே! அவர்தம் உழைப்பும் உணர்வுமே!

நாடாகு ஒன்றோ? காடாகு ஒன்றோ?
அவலாகு ஒன்றோ? மிசையாகு ஒன்றோ?
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

- சங்ககால அவ்வையார்

தமிழரராலும் இத்தகு சாதனை நிகழ்த்த முடியும். நோபெல் பரிசு பெற்ற மூவருள், இருவர், தமிழர்தாமே! புலம் பெயர்ந்த குடியேற்ற நிலங்களில் கூட வெற்றிக் கொடி நாட்டுபவர் எம் தமிழர்தாமே! 1983 தொடங்கிப் பதின்மூன்று ஆண்டுகளாக, வல்லாண்மை மிக்க ஓர் அரசைத் தமிழ் மறவர் எதிர்த்து உரிமைக்காகப் போராடி வென்று வருவதை ஈழத்தில் பார்க்கிறோமே!

தமிழர் நினைத்தால் முடியும்! யானை தன் பலம் உணர்ந்து காலால் மிதித்துத் துதிக்கையால் பற்றித் தந்தங்களால் குத்தினால், நீர்வாழ் முதலையும் நீர்த்துப் போகும்; கூர் நகச் சிங்கமும் தோற்றுச் சாகும்!

இந்நூல் பல வேறு அரங்குகளில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அண்மை இரண்டு ஆண்டுகளில் அரங்கேறியவை, எனவே, அழுத்தமும் தேவையும் கருதி, ஓரிரு செய்தி, வேறுவேறு இடங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட தடவை இடம் பெற்றிருக்கும். அன்பர்கள் பொறுத்திடுக.

நூல் உருவாக்கத்தில் முனைவர். சிலம்பு. செல்வராசு, ஏழுமலை, அறவேந்தன், என் துணைவி தாயம்மாள் ஆகியோர் அளித்த ஒத்துழைப்பை நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

என் நூல்களை வரவேற்று ஊக்கம் நல்கும் உலக நாடுகளின் தமிழ் வாசகரை என் நெஞ்சம் என்றும் எண்ணும்.

அன்பு

**க.ப. அறவாணன்**

# உள்ளுரை

முடியும் என்றால் முடியும் iii

தமிழ்த்தேசியவியல் 1

தமிழரின் வருங்காலம் வினாவும் வியப்பும் 2

தமிழ் - தமிழனின் சக்தி 6

தமிழர் வாழ்வில் இருட்டும் வெளிச்சமும் 16

தமிழர் வரலாற்றின் இடைக்காலப் போராட்ட முனைப்புகள் 24

தமிழ்த்தேசியம் - தோற்றம் வளர்ச்சி எதிர்காலம் 41

விழித்திடு வெடித்திடு வென்றிடு 83

தமிழ் மதவியல் 91

மொழி - கடவுள் - மனிதன் 92

மக்கள் மன்னன் மதம் 103

தமிழ்ப் பண்பியல் 132

தமிழர் பண்பாடு என்ன ஆனது 133

தேர்தல் 142

எழுத்து 150

திரையுலகம் 165

# 1

# தமிழ்த்தேசியவியல்

"இனங்களுக்கு இடையேயான போர்கள் முடிந்தன; கம்யூனிசம் அல்லாத நாடுகளுக்கு இடையேயான போர்களும் முடிந்தன; இனி வரும் இருபத்தோராம் நூற்றாண்டு மொழி வழித் தேசிய இனங்கள் மீட்டெழும் போர் நடவடிக்கையாகவே இருக்கும்"

– ஜான் லூக்காக்சு

* தமிழ்
* தமிழன்
* தமிழகம்

# I

# தமிழரின் வருங்காலம் வினாவும் வியப்பும்

தமிழ்நாட்டுத் தமிழர் என்ற நிலை மாறி இன்று தமிழர் உலகளாவிய அகதிகளாகவும், அலுவலர்களாகவும் பரவிக் கிடககின்றனர் இவர்களைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்

1. தமிழ்நாட்டில் இருக்கும் தமிழர்
2. ஈழத்தில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்.
3. மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, மொரிசியஸ் ஆகிய நாடுகளில் கணிசமான எண்ணிக்கையிலும், ஏனைய நாடுகளில் சிறுசிறு எண்ணிக்கையிலும் பரவிக் கிடக்கும் தமிழர்
4. ஈழத்திலிருந்து பல நாடுகளில் அகதிகளாகவும், அலுவலர்களாகவும் பரவிக் கிடக்கும் தமிழர்

மேற்கண்ட நான்கு வகையினருடைய வருங்காலம் தமிழருடைய வருங்காலமாக அமைந்திருக்கும்.

வருங்காலம் என்பதை, இன்றிலிருந்து இன்னும் நூறு ஆண்டுக் காலம் (கி பி. 2095) என்று கொள்ளலாம் நூறு ஆண்டு அளவில் அரசியல் பார்வையில் ஈழத்தில், தமிழர் முதல் நிலையிலும், இந்தியாவில் தமிழர் இரண்டாம் நிலையிலும் இருப்பர்.

எட்டுக்கோடித் தமிழர் இருந்தும், அவருக்கென ஒருநாடு இல்லையே என்ற இன்றைய ஏக்கம் வருங் காலத்தில் ஈழத் தமிழரால் போக்கப்பட்டிருக்கும்.

பொருளாதாரப் பார்வையிலும் தமிழ் ஈழம் மேல்நிலை அடைந்திருக்கும். இந்தியத் தமிழ்நாட்டில் பணக்காரர்கள் பெருகி இருப்பார்கள். அதனைப் போலவே ஏழைகளும் பெருகி இருப்பார்கள். சேரிகள் பரவலாக இருக்கும். பிச்சை எடுத்தல், திருட்டு, கடன், கொள்ளை ஆகியன பொருளாதாரப் பொறாமைகளால் இந்தியத் தமிழ்நாட்டில் மேலோங்கி இருக்கும். முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பின்பற்றுவதாலும், கட்டுப்பாடு ஒழுங்குகள் இன்மை யாலும், திரை, சின்னத்திரை, விளையாட்டு, மது, போதை, புகைப்பிடித்தல் முதலாய பழக்கவழக்கங்களுக்கு எளிதே அடிமைப்படுவதாலும் தமிழ்நாட்டுத் தமிழரின் பொதுத் தரம் தாழ்ந்தே இருக்கும்.

சமுதாயப் பார்வையில் தமிழ் ஈழத்தில் சாதிகள் மிக மெலிந்து போய் இருக்கும் பெண் சமத்துவம் உயர் நிலையில் இருக்கும். வரதட்சிணை ஒழிந்து போய் இருக்கும்.

சிங்களப் பௌத்தத்தை எதிர்க்க வேண்டியிருப்பதால் சைவத் தமிழரும், கத்தோலிக்கத் தமிழரும், இசுலாமியத் தமிழரும் தம்முள் கட்டொருமைப்பாடுடன் செயல்படும் காலம் ஈழத்தில் கனிந்திருக்கும்.

இந்தியத் தமிழகத்தில் தற்போது பின்பற்றப்படும் சாதி வழி இட ஒதுக்கீடு, சாதிச் சங்கங்கள், சாதி மாநாடுகள், சாதி வழிச் சலுகைகள் ஆகியவற்றால் சாதி மேலாதிக்கச் சமுதா்யத்தில் தமிழர் சிக்குண்டும், சிதறுண்டும் பிளவுண்டும் கிடப்பார்கள்.

இந்தியத் தமிழர்கள் அயல் மதங்களைக் கண்மூடிப் பின்பற்றுவதாலும், அயல் பண்பாட்டு நாகரிகங்களை எளிதாக ஏற்பதாலும், தமிழ்ப் பண்பாட்டைப் பெரிதும் இழநதிருப்பர்.

சுயமிழந்து, அரசியல் ஒன்றியத்திலும் (Union) வல்லாண்மையும் அதிகாரமும் குவிந்த நடுவணரசு அமைப்பிலும் அகப்பட்டுக் கொண்டதாலும், இந்தியே பெரும்பான்மை மைய அரசின் ஆட்சி மொழி என்ற இந்திய அரசியல் சாசனத்தை ஏற்றுக் கொண்டிருப்பதாலும், தமிழை முழு ஆட்சி மொழியாகவோ, பயிற்று மொழியாகவோ, நீதிமன்ற மொழியாகவோ தமிழ்நாட்டிலும் புதுவையிலும் கொண்டுவர இயலாது எனவே, பெயரளவில் தமிழ் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக இருக்கும், இந்தியின் புழக்கம் கூடியிருக்கும்; கிட்டத்தட்ட தற்போது ஆங்கிலம் அடைந்திருக்கும் இடத்தைத் தமிழ்நாட்டிலும், புதுவையிலும் இந்திமொழி அடைந்துவிடும்; ஆங்கிலமும் ஒழிந்து விடாது. தமிழ் முதுகின் மேல் இந்தியும், ஆங்கிலமும் சவாரி செய்து கொண்டிருக்கும்.

இதற்கு மறுதலையாகத் தமிழ் ஈழத்தில் தமிழ் அனைத்து நிலையிலும் இடம் பெற்றிருக்கும் ஈழத் தமிழரிடம் தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் பேரளவு குடி கொண்டிருக்கும் இந்தியத் தமிழரிடம் அனைத்திந்திய, அனைத்துலகக் கலப்பு மொழிப்போக்கும், கலப்புப் பண்பாட்டுப் போக்கும் மேலோங்கி இருக்கும். தமிழ் தன் எழில் வண்ணம் இழந்திருக்கும்; தமிழர் தம் இன அடையாளம் இழந்திருப்பர்.

# II

# தமிழ் - தமிழனின் சக்தி

ஒவ்வொரு சமுதாயமும் மாறிக் கொண்டே இருக்கும். மாற்றம் சமூக இயல்பு. ஆனால் அம்மாற்றம் ஒரு சமுதாயத்திற்கு முன்னேற்றத்தைத் தந்துள்ளதா என்பதும் முன்னேற்றம் கால அளவை வைத்துப் பார்க்கும் போது போதுமானதா என்பதும் கவனத்திற்குரியன.

முன்னேற்றம் என்பது ஒரு வளர்ச்சி அதாவது நாம் நல்லது, உயர்ந்தது என்று மதிக்கின்ற ஒரு திசையில் ஏற்படும் பரிணாமம் ஆகும் முன்னேற்றம் இரண்டு காரணிகளைக் கொண்டு திகழும்

1 நாம் அடைய நினைக்கின்ற இலட்சியத் தன்மை

2 நாம் இருக்கும் இடத்திலிருந்து அடைய நினைக்கும் இலட்சியம் வரை உள்ள தொலைவு

(M. Ginsberg, The Ideas of Progress. p 42)

இயற்கை நியதியான மாற்றம், முன்னேற்றமாகத்தான் இருத்தல் வேண்டும் என்ற கட்டாயமில்லை பின்னேற்ற மாகவும் இருக்கலாம்; தேக்க நிலையிலும் இருக்கலாம்

## திசைமாற்றம்

ஐரோப்பியக் கண்டுபிடிப்புகளை அனுபவிப்பதில், தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்தவரை முன்னேற்றமா?

பின்னேற்றமா? தேக்க நிலையா? என்பன அடிப்படைக் கேள்விகள். ஐரோப்பியக் கண்டுபிடிப்புக்களைக் கண்ணை மூடிக் கொண்டு அனுபவிப்பதில் முன்னேற்றமும், சாதி, மத, விழா, மூட நம்பிக்கை ஆகியவற்றைப் பின்பற்றுவதில் பின்னேற்றமும், மொழி, பழக்க வழக்கம் முதலானவற்றில் தேக்கமும், தமிழ்ச் சமுதாயத்தில் காணப்பெறுகின்றன.

பாரிங்டன் மூர் (Barrington Moor 1966), குன்னர் மிர்தால் (Gunnar Myrdal 1968) ஆகியோர் ஆராய்ச்சிப் படி, நாம் தீர்க்க வேண்டிய சிக்கல்களைத் தீர்க்க வேண்டிய காலத்திற்குள் தீர்க்காமலேயே இருக்கிறோம். பேராசிரியர் ஆக்பர்ன் என்பார் சமுதாயப் பண்பாட்டைப் ‘பொருள்சார் பண்பாடு, பொருள் சாராப் பண்பாடு’ என இரண்டாகப் பகுக்கிறார் புதிய கண்டு பிடிப்புகள், நவீனக் கருவிகள், அறிவியல் வளர்ச்சிகள் ஆகியன பொருள் சார் பண்பாட்டில் அடங்கும். இந்நவீனக் கண்டு பிடிப்புகள், ஒரு சமுதாயப் பழக்க வழக்கம், நம்பிக்கை முதலானவற்றை மாற்றும்; மாற்ற வேண்டும். ஆனால் தமிழ் (இந்திய)ச் சமுதாயம் தன் பழைய பழக்க வழக்க மூடநம்பிக்கைகளை நிலைநிறுத்த அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திக் கொள்கிறது. சான்று அண்மைக் கண்டு பிடிப்பு, கணிப்பொறி நம்மவர் கண்டு பிடிப்பு, கணிப்பொறி வழி ஜோஸ்யம்; விடியோ வழி ‘ஞான பூமி’ ஒளிநாடாக்கள் இப்படி ஏராளம்! இங்ஙனம் சமூக மாற்றத்திற்குத் தொழில் நுட்பவியல் (Technological Factor) ஒரு காரணமாகக் காட்டப்படினும், நம் தமிழ்ச் சமூகத்திடையே ஒரு குறிப்பிட்ட மாற்றத்தை அது நிகழ்த்தவில்லை; அது நிகழ்த்தாவண்ணம் திசைமாற்றம் செய்விக்கப் பெற்றது!

## பெரியார் இயக்கம்

ஒரு சமுதாயத்தின் போக்கை அரசியல், பொருளாதார, சமுதாயப் பின்புலங்களே நிர்ணயிக்கின்றன இம்மூன்றில் எது முன்னது? எது அடிப்படை? என்பது சமுதாயத்திற்குத் தக வேறுபடும்! பொருளாதாரமே அனைத்தையும் தீர்மானிக் கிறது என்றார் மார்க்சு அது தமிழகச் சூழலுக்கு முழுமை யாகப் பொருந்தவில்லை! அரசியலுக்கே முதன்மை என்றனர் மாக்கிய வல்லியும், சாணக்கியரும், அதுவும் தமிழ்ச் சூழலுக்கு ஏற்றதாக இல்லை! தமிழகச் சூழலில் முன்னிற்பது சமுதாயப்படி நிலைதான்! சமுதாய மாற்றம் இன்றி, இங்கே ஏற்றம் ஏற்படவே முடியாது எனவே சமுதாயத்தை முன்னிறுத்தி அடிப்படையாக்கி ஏனைய பொருளியல், அரசியலை மேலெழுப்ப வேண்டும் இதனை மிகச் சரியாகக் கண்டு கொண்டவர் தந்தைபெரியாரே! எனவேதான், சமுதாயத் தொண்டியக்கமாகப் பெரியார், தம் இயக்கத்தைக் கட்டி எழுப்பினார் இன்று, சரியான திசையை விட்டு, எதிரான அரசியலுக்கு - கட்சி அரசியலுக்கு முதன்மை கொடுக்கிறோம் 'பணமே முதல்' என முதலாளித்துவ நோக்கில் அலைகிறோம் எனவேதான், பெரியாருக்குப் பிறகு தமிழ்ச் சமுதாயம் தேக்க நிலையில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது!

## பிற்படக் காரணங்கள்

தமிழ்ச் சமுதாய மாற்றம், பின் நோக்கியது என்று குறிப்பிடக் காரணங்கள்:

1. தமிழர் தாம் தமிழ்மொழி பேசும் மக்கள்! 'கலை இசை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் உயர்ந்த மக்கள்'

என்ற உண்மையை அறிதற்குப் பதிலாகச் சேரன் குடி, சோழன் குடி, பாண்டியன் குடியினராகப் பிரிந்து அன்று கெட்டனர்.

2. அவரவர் சாதியைக் கூறிப் பிரிந்து கெட்டனர்!

3 சைவன், வைணவன், சமணன், பௌத்தன், இந்து, இசுலாமியன், கிறித்தவன் என மதத்தால் பிரிந்து கெட்டனர்!

4 காங்கிரசு, நீதிக்கட்சி, தி க , தி மு.க., கம்யூனிஸ்ட் எனக் கட்சியாய்ப் பிரிந்து கெட்டனர்; கெட்டு வருகின்றனர்

5. நீ இலங்கையன், தென்னாப்பிரிக்காக்காரன், மொரிசீயசுக்காரன், நான் இந்தியன் என அரசின் செயற்கைக் கோடுகளை ஆண்டவனே போட்டுவிட்டுப் போனதாக நம்பிக் கெட்டனர், கெட்டு வருகின்றனர்!

உலகில், 'நீ யார்?' என்று ஒரு தமிழனைக் கேட்டால், "நான் 'இன்ன சாதி' எனச் சாதியைச் சொல்பவனும், நினைப்பவனும்", "நான் ஓர் இந்து, இஸ்லாம், கிறித்துவர் என மதத்தைச் சொல்பவனும், நினைப்பவனும்', 'நான் இலங்கை, இந்தியா" என்று சொல்பவனும் நினைப்பவனுமே இன்று நம்மிடையே உள்ளார்கள் 'நான் தமிழன்' என்று சொல்பவர் உண்டா?

## மொழிவழி அடையாளம்

ஆனால் அயல் நாடுகளில் உண்டு! பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப் பிரிக்கா வாழ் ஆங்கிலேயர் - வேறுவேறு தொலைதூர

நாடுகளில் வாழ்ந்தாலும், ஆங்கிலத் தாயின் புதல்வர் என்று ஒரே குரலில் ஒலிக்கின்றார்கள் பிரான்சு, கனடா, பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்தில் வாழும் பிரஞ்சுக்காரர்கள்; ஐரோப்பாவிலும், தென் அமெரிக்காவிலும் வாழும் ஸ்பானிஷ்காரர்கள்; சீனா, ஹாங்காக், சிங்கப்பூர், மலேசியாவில் வாழும் சீனர்கள் என அனைவரும் தம்தம் மொழி வழியே அடையாளப்படுத்திக் கொள்ளத் தயங்குவதே இல்லை!

## தமிழர் செய்த தவறு!

தமிழர்கள், தமக்குரிய 'தமிழ் மொழி தம்மை ஒன்றிணைக்கும் ஒரு சக்தி, (Tamil is an energy) என்பதை அறியத் தவறி விட்டனர். தற்போது மட்டும் அன்று. பன்னெடுங்காலமாகவே! சமூகவியல் அறிஞர் எமில்துர்க்கேம் 'சமூகக் கட்டொருமைப்பாடு (Social Solidarity) மிகமிக முதன்மை' என்று கண்டறிந்தார் ஒரு சமூகம், தன்னை அடையாளங்காட்டக்கூடிய சின்னங்களைக் கொண்டிருந்தால், சமூக உறுப்பினர்கள் அதற்கு மதிப் பளித்து, அன்பு காட்டும்போது, சமூகக் கட்டொருமைப்பாடு வளரும்; வலுவுறும். தமிழ், தமிழ்ச் சமுதாயத்தினிடையே, 'நாம் தமிழர்' எனும் கட்டொருமைப்பாட்டை உண்டாக்கி, ஏனைய வேற்றுமைகளை இரண்டாம் பட்சமாக்க வல்ல ஆற்றல்மிகு சக்தியாகும். பண்டைய தமிழர் இதனைக் கண்டறியாமல்தான் 'சேரன், சோழன், பாண்டியன் எனப் பிரிந்திருந்து' களப்பிரர்க்கும்? பல்லவர்க்கும் தமிழக வாசலைத் திறந்து விட்டனர்.

கரி, பெட்ரோல், மின்சாரம், அணு ஆகியன இயந்திரங் களை இயக்கும் சக்தியாக அறியப்பட்டதைப்போல, ஓரினத்தை இயக்க, 'மொழி ஒரு சக்தி' என்பதை உணர்தல் வேண்டும்.

'தமிழ் மானம்' முன்னிற்காமல் 'குடி மானம்' முன்னின்றது; பின்னாளில் 'சைவ வைணவ மானம்' முன்னின்றது. 'தமிழ் மானம்' பின்னின்றது. எனவே பகுத்தறிவு மதங்களான சமணமும் பௌத்தமும் விரட்டப் பட்டன; மதத்தின் பெயரால், 'ஆரியம்' உள்நுழைந்து கூடாரத்தை அடைத்துக் கொண்ட ஒட்டகமாக உட்கார்ந்து கொண்டது. பின்னாளில் 'தமிழ் மானம்', பின்னோட, 'இந்து' என்ற மதமோகம் முன்னோட, 'தெலுங்கு' வந்து ஆளத் தொடங்கியது 'எட்டப்பனா கட்டபொம்மனா?' எனத் தனிமானம் மேலிட்டுத் 'தமிழ் மானம்' பின்னிட்டபோது, ஐரோப்பியர் காலனி ஆதிக்கம் கால்கொண்டது. 'காங்கிரசா? நீதிக்கட்சியா?' என்று கட்சிக் கொடிக்காகச் சண்டையிட்டுப் பதவிக்காகத் தமிழை மறந்த போது, 'வட இந்திய வல்லாண்மை' காலை நீட்டிப் படுத்துக் கொண்டது!

## ஒன்றுபடுத்தும் ஒரே சக்தி தமிழே!

தமிழரை ஒன்றுபடுத்தும் ஒரு பெரும் சக்தி 'தமிழ்' என்பதை இன்றைய தமிழரும் உணர்ந்தாரில்லை! எனவேதான் எத்துணையோ தமிழ்க் குடிகெடுக்கும் கட்சிகள். 'தமிழை ஒரு சக்தி' என்று முதலில் கண்டு கொண்டவர் இளங்கோவடிகள் மட்டுமே! அதுவும் காப்பியக் கற்பனையாகக் கருதப் பெற்றுப் புறக்கணிக்கப் பெற்றது.

இன்னும் 'தமிழை' முன்னிறுத்தி ஏனையவற்றைப் பின்னிறுத்தும் உத்தியை நம் தமிழர் கண்டாரில்லை!

செர்மானியரும் ஆங்கிலேயரும் மதத்தால் பிராட்டஸ்டன்டுகள், ஆனால் ஒன்றாக இல்லை. அராபிய நாடுகள் அனைத்தும் மதத்தால் ஒன்றே! ஆனால் வேறுவேறு ஆகி நிற்கின்றன. பாகிஸ்தானும், பங்களா தேசமும் மதத்தால் இசுலாமிய நாடுகளே! மதத்தைவிட, மொழியே அவர்களை ஒன்றிணைக்கிறது; அல்லது வேறு படுத்துகிறது!

இசுரவேலரும், பாலத்தீனியரும் இனத்தால் செமித்தியர்; ஒன்றாக இல்லை; ஆப்பிரிக்க நாடுகளுள் பல, கறுப்பர் நாடுகளே; ஓரின மக்களே; ஆனால் ஒன்றாக இல்லை. ஐரோப்பியர், காகேசியர் என்ற ஒரே இன மக்களே, ஒன்றாக இல்லை! எனவே, நிலம், மதம், இனம் என்ற அடையாளங்களைவிட 'மொழியே' மிக வலுவான அடையாளமாகும் தமிழ் மொழியை அடையாளப்படுத்தித் 'தமிழ்' ஒரு பெரும் ஒருங்கிணைக்கும் சக்தி என்பதை நாம் முற்றாக உணர வேண்டும்!

'ஜான் லூக்காக்சு' (John Lukacs) எனும் பேராசிரியர், அருமையான நூல் ஒன்றை எழுதியுள்ளார் *

"இனங்களுக்கிடையேயான போர்கள் முடிந்தன. கம்யூனிசம் அல்லாத நாடுகளுக்கிடையேயான போர்களும்

---

* The end of Twentieth century and the end of the Modern Age. Houghton Miffin Ticknor and Fields Hindu dt. (20th June 1993)

முடிந்தன. இனிவரும் 21ஆம் நூற்றாண்டு மொழிவழித் தேசிய இனங்கள் மீட்டெழும் போர் நடவடிக்கையாகவே இருக்கும்!"

என்பது அவர்தம் நூலின்சாரம். இந்தப் பின்னணியிலேயே கிழக்கு ஜெர்மனி-மேற்கு ஜெர்மனி இணைப்பு, சோவியத் ஒன்றியத் தேசிய இனங்கள் பிரிந்து போயினமை, தேசிய இனவழிப் போர்க்களமாக இருக்கும் யூகோசுலாவியா, வடகொரிய-தென்கொரிய இணைப்பு, வடவியட்நாம்-தென்வியட்நாம் இணைப்பு, பங்களா தேசத்தின் பிறப்பு, பஞ்சாப், அசாம், காசுமீரக் கலவரங்கள், இலங்கைப் போராட்டம், கனடாவில் பிரஞ்சுக் குயூபெக்கின் கோரிக்கை முதலானவற்றைக் காணுதல் வேண்டும்

## தமிழை முன்னிறுத்துக!

இந்நிலையில், ‘இந்தியத் தமிழர்களிடம் மொழிவழித் தேசிய உணர்வு உள்ளதா?’ என்பது பெரிய கேள்வி, ‘இல்லை’ என்பதே உரிய விடை! எம் தமிழரிடம் ‘நாம் தமிழர்’ எனும் உணர்வை எப்படிக் கட்டி எழுப்புவது என்பது அடுத்த பெரிய வினா!

உணர்வை உண்டாக்குதல் ஒருபக்கம். மொழி வழியுணர்வு வரவொட்டாமல் தடுக்கும் வழிமறிப்பான் களைத் துண்டாக்குதல் மறுபக்கம் என நம் பணி இருகூறுபட்டதாக இருத்தல் வேண்டும்.

திரைக்கவர்ச்சி, கட்சிக் கவர்ச்சி, சாதிக் கவர்ச்சி, விளையாட்டுக் கவர்ச்சி, தமிழரைத் தன்னிலை உணராது

தடுப்பவை! கட்சி, சாதி, மதம் ஆகிய மூன்றையும் கடந்து, கடவுள் நிலையில் இருப்பது திரைக்கவர்ச்சி! அதன் மறு வடிவமான தொலைக்காட்சி, தொலைப்பெட்டி, பத்திரிகைகள் ஆகியவற்றை நெறிப்படுத்தும் இயக்கங்கள் வர வேண்டும்! "திரையைப் பிடித்து, ஒரே நாளில் நாட்டையே மாற்றுவேன்" என்று திரைச்சேற்றில் இறங்கியவர்கள் எல்லாம், அடையாளமே தெரியாமல் அமுங்கிப் போனார்கள்! (பாப் இசைக் கூத்தாடி ஜாக்சனை உள்ளேயே விட மறுக்கிறது தென்கொரியா. முதல் இந்தியத் தொலைக்காட்சியில் வந்து அவிழ்த்துப் போட்டுக் கொண்டு ஆடு என்கிறது நம்மூர்த் தொலைக்காட்சி; சப்பான் கிரிக்கெட்டையே உள்ளே விட மறுக்கிறது; கிரிக்கெட்டிற்காக விடுமுறை விடுகிறது தமிழக அரசு!)

சாதியை முன்னிறுத்துகிறவரை சாதி வெறியும், மதத்தை முன்னிறுத்துகிறவரை மத வெறியும், கட்சியை முன்னிறுத்துகிற வரை கட்சி வெறியும் ஆட்சி செய்வதைத் தடுத்தல் இயலாது எனவே சாதி, மத, கட்சிகளுக்கு அப்பாற்பட்ட தமிழையே முன் நிறுத்த வேண்டும், மாசே துங் சீனத்தையும், லெனின் உருசியத்தையும், கிட்லர் செர்மானியத்தையும், கமால் பாட்சா துருக்கியத்தையும், முசிபூர் அப்துல் ரகுமான் வங்கத்தையும், ரோமானியர்கள் இலத்தீனத்தையும், ஆங்கிலேயர் ஆங்கிலத்தையும், பிரஞ்சுக்காரர்கள் பிரஞ்சையும், ஸ்பானியர்கள் தென்னமெரிக்க நாடுகளில் ஸ்பானிசையும் முன் நிறுத்தியே இயக்கங்களைக் கட்டி எழுப்பினர்.

தமிழ்ப் பண்பையும், பண்பாட்டையும் மேல் சட்டைகளாகக் கருதும் தமிழர், தம் சாதியையும் மதத்தையும் உடன் பிறந்த தோலாகக் கருதித் தோளில் தூக்கி வைத்தாடுகின்றனர். அவை, தமிழரைக் கூறுபோடுகின்றவை; தமக்குத் தாமே எதிரி ஆக்குகின்றவை என்பதை அறியாது இருக்கின்றனர் விநாயக வழிபாட்டின் மூலம் மீண்டும் மதம் மூக்கை நீட்டுகிறது; சாதிச் சங்கங்களின் மூலம் மீண்டும் சாதிபேதம் பகை மூட்டுகிறது புதிய மத, சாதி அடையாளங்களை வடக்கே அடையாளம் காட்டி மயக்குதல் மூலம், 'தமிழ் மறப்பும்' 'தமிழ் மறுப்பும்' 'தமிழர் மறப்பும்' 'தமிழர் மறுப்பும்' எளிதாக்கப் பெறுகின்றன தமிழரைத் தொடர்ந்து அழித்து வரும் இந்திய மாக்கடலில் தமிழர் வீழ்ந்தழிய வசதிகள் செய்யப் பெறுகின்றன!

இந்நிலையில், தமிழ் ஒன்றே தமிழரை அடையாளங் காட்டும் சக்தி; ஒன்றிணைக்கும் சக்தி; உலகத் தமிழரை ஒருங்கூட்டும் சக்தி என்பதைத் தமிழர் அறிந்தால்தான் - உணர்ந்தால்தான். செயல்பட்டால்தான் தமிழர்க்கு வாழ்வு; இன்றேல் தமிழர் என்றோர் இனம் இருந்தது; தம்மை மறந்ததால் அழிந்தது என்றே வருங்கால வரலாறு எழுத நேரிடும்!

# III

# தமிழர் வாழ்வில் இருட்டும் வெளிச்சமும்

"எண்ணெய் வளம் மிகுதியாக உள்ளது. ஏனைய வளங்களும் நிரம்ப உள்ளன என்றாலும் இந்தோனேஷியா ஏன் ஏனைய நாடுகளைப் போல வளர்ச்சி அடைய வில்லை?" என்ற ஒரு கேள்விக்கு அயல்நாட்டு எதிர்கால இயல் அறிஞர் ஒருவர், 'அங்கே இந்திய இரத்தம் கலந்து விட்டது அதனால்தான்' என்றார். கேரளாவில் உள்ள இடுக்கி மாவட்டம் போதிய அளவு ஏனைய கேரள மாவட்டங்கள் அளவிற்கு வளரவில்லையே என்ற ஒரு கேள்விக்கு, "அது தமிழர்கள் கணிசமான அளவு வாழும் மாவட்டமாக இருப்பதுதான்" என்று விடை அளிக்கப் பெற்றது.

கி பி. 1498இல் தென்னிந்தியக் கோழிக்கோட்டில் இறங்கிய ஐரோப்பிய வாசுகோடகாமாவின் வரவிற்குப் பிறகு, ஐரோப்பியக் காலனி தென்னிந்தியாவிலிருந்து வடஇந்தியப் பகுதிகளை நோக்கி விரிவடைந்தது. ஐரோப்பியரைக் கடைசிவரை எதிர்த்து நின்றவர்கள் பஞ்சாபியச் சீக்கியர்கள் ஆவர் 1845இல் பிரிட்டிஷ் பேரரசின் கவர்னர் ஜெனரல் ஆர்ட்டிஞ்ச், சர் குகா கூப் ஆகிய இருவரும் சீக்கியருடன் பெரும்படையுடன் மோதினர். முடிவு ஆங்கிலேயருக்குத் தோல்வி.

இவ்வரலாற்று நிகழ்ச்சியை அறிஞர் கார்ல்மார்க்ஸ், **"ஆங்கிலேயப் பெரு முட்டாள்கள் தென்னிந்தியப் பெருமக்களை எளிதே அச்சுறுத்தி வெற்றி கொண்டது போலச் சீக்கியப் பஞ்சாபியரையும் அச்சுறுத்தி வெற்றி கொண்டுவிட முடியும் என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டனர்"** என்று எழுதுகிறார்.

மேற்கண்ட குறிப்புகள் தமிழரை அயல்நாட்டாரும் அயல் மாநிலத்தாரும் எவ்வாறு கணக்குப் போட்டு வைத்துள்ளனர் என்பதைக் காட்டும்.

இந்திய விடுதலைப் போரில் கூட முதற்கட்டத்தில் பங்கேற்றுத் தொடக்கி வைத்தவர் பஞ்சாபியரும், வங்காளியரும், மகாராட்டிரருமே இரண்டாவது பின் கட்டத்தில்தான் கணிசமான அளவு திலகர், நேத்தாஜி, லாலா லஜபதிராய், காந்தியடிகள் 'முதலான' வடபுலத்தலைவரைச் சார்ந்து தமிழகத்திலும் விடுதலை இயக்கங்கள் வேர் கொண்டன விடுதலைக்குப் பிறகும் கூடப் பல ஆண்டுகள் இந்திய அரசின் தில்லி மையச் செயலகம் வங்காளியர் கையிலும் பஞ்சாபியர் கையிலும் இருந்து வந்ததே உண்மை போதிய குறைந்த பட்சத் தொலைநோக்கு கூட இல்லாமல்? தமிழர் தம்மொழிக்கும் மொழிபேசும் தமிழர்க்கும் அரசியல் சாசனம் உருவாகும் பொழுதே உரிய பாதுகாப்பைச் செய்து கொள்ளத் தவறினார்கள் என்பதையே, இந்தியத் தமிழக (1947), இலங்கைத் தமிழீழ (1948) இந்தியப் புதுவை (1954) வரலாறுகள் காட்டுகின்றன.

விடுதலைக்குப் பிறகும் (1950) குடியரசுத் தலைவர்கள், தலைமை அமைச்சர்கள், பலவேறு நாடுகளில்

அமர்த்தம் பெற்ற தூதுவர்கள், மாநில ஆளுநர்கள் ஆகியோர் பட்டியலை மேலோட்டமாகப் பார்த்தால் கூடத் தமிழர்க்குரிய பங்கு மிகக் குறைவே என்பது புலப்படும். "தமிழர் என்றாலே சொல்லிக் கொள்ளலாம்; சமாளித்துக் கொள்ளலாம்" எனும் போக்கே தொடர்ந்து கடைபிடிக்கப் பட்டு வந்தது என்பதை அரசியல் பொருளாதார முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. இதன் உச்சம், கிழக்குப் பாகிஸ்தானில் முசிபூர்ரகுமான் தலைமையில் வங்க தேச விடுதலைப் போர் நடந்தபோது இந்திய மைய அரசை, உள்நாடு வெளிநாடு என்ற எல்லையைத் தாண்டி, வங்காளி களால் ஈடுபட வைக்க முடிந்தது; வங்க தேசத்திற்கு விடுதலையையும் பெற்றுத்தர முடிந்தது. அதனைவிடக் கொடுமைகளும் கொடூரங்களும் இலங்கையில் ஈழத் தமிழர்க்கு இழைக்கப்பட்ட போதிலும், இன்றுவரை அவை தொடர்ந்த போதிலும் தமிழர்கள் செயலற்று நிற்பது, உச்ச நீதிமன்றத் தீர்ப்பே கிடைத்த போதிலும் காவிரியில் இருந்து தண்ணீர் பெற முடியாமல் தமிழக நெற்களஞ்சியத்தை மண் களஞ்சியமாக மாற்றியது தமிழருடைய கையாலாகாத் தனத்தைக் காட்டுவனவே ஆக விடுதலைப் போருக்கு முன்னும் பின்னும் தமிழர் வரலாற்றைக் கூர்ந்து கவனித்தால் தமிழர் உரிமைக்குப் போராடுவோர் என்பதைவிடப் போர்க் குணம் இல்லாதவர் என்பதும், தொலைநோக்கு இல்லாதவர் என்பதும், அதிகாரத்துக்கும் கருவிகளுக்கும் அஞ்சும் குணத்தினர் என்பதும், தாழ்வு மனப்பான்மையினர் என்பதும், அயலாரை, அயல் நாகரிகத்தை அயல் பண்பாட்டைக் கண்மூடி வரவேற்றுப் போற்றும் போக்கினர் என்பதும் புலப்படும்.

மேற்குறித்த குறைகளுக்கு உரிய காரணங்களை அடையாளங் காண்பதும் அவற்றிற்கு உரிய தீர்வுகளைக் காண்பதும் இன்றைய தமிழரின் இன்றியமையாத கடமைகள் ஆகும்.

## 1. கூட்டவுணர்வு

ஒரு சமுதாயம் முழு வெற்றி பெற வேண்டுமானால் அது கட்டுக் கோப்பு உடையதாக இருத்தல் வேண்டும். அதற்குத் தகச் சமுதாயத்தின் ஒவ்வொரு தளத்திலும் கூட்டு உணர்வு வளர்க்கப் பெறுதல் வேண்டும் யூதர், சப்பானியர் ஆகியோரிடையே வளர்க்கப் பெற்ற கூட்டுணர்வே அவர் களின் வெற்றிக்குப் பெருங்காரணம் ஆகும் 'தமிழர்', 'தமிழ் மானுடர்' எனும் குவியத்தில் ஒன்று படாமலும் சாதி, மதம், கட்சி வட்டாரம் அடிப்படையில் தொடர்ந்து பிளவுபடுத்தப் பெறுகின்றனர். இப்பிளவு முயற்சி தொடர்ந்து தமிழகத்தில் இன்றும் நிகழ்ந்து வருகிறது. சாதி சமயம் கட்சி ஆகியன அகமுகமாகத் திரும்பித் தமக்குள்ளே கூட்ட உணர்வை மட்டுமே வளர்த்துக் கொள்ளும். அவற்றுக்கு அப்பால் தமிழன் என்பதையும், மானுடன் என்பதையும் முன்னிறுத்தி ஒரு தாய்ப்பிள்ளை உணர்வு வளர்க்கப் பெறுதல் வேண்டும்.

சாதி சமய கட்சி அமைப்புகள் கூட்டு உணர்வுக்குப் பதிலாகக் கூட்ட உணர்வை உரம் போட்டு வளர்ப்பதுடன் தமிழருடைய உடல்சார்ந்த உணர்ச்சிகளைத் தொடர்ந்து தூண்டுவதில் கவனமாக இருக்கின்றன. உணர்ச்சிக் கூறுகள் வளர்க்கப் பெறுவதால் உண்மையை எடை போட்டுப் பார்க்கும் அறிவுக்கூறுகள் மழுங்கடிக்கப்படுகின்றன. எனவே தான் அறிவார்ந்த இயக்கங்கள் தமிழ்நாட்டில் தமிழரிடையே

செழிப்பதில்லை. உடல் உணர்வுக்குத் தீனியிடும் விபச்சார விடுதிகள், திரைப்படங்கள், ஏடுகள் பெருகுகின்றன வாய் உணர்வுக்குத் தீனியிடும் கள், சாராய மது வகைகள், சிகரெட்டுகள் முதலான இறக்குமதித் தீனிகள், குடிப்பான்கள் மிகுதியாகின்றன கண்ணுக்குத் தீனியிடும் திரை/தொலைக் காட்சிப் படங்கள், இதழில் இடம் பெறும் கவர்ச்சிப் படங்கள், சுவரொட்டிகள், வெட்டுருவங்கள் பல்குகின்றன. செவி யுணர்வுக்கு இரைபோடும் கொச்சைப் பாடல்களும் மூக்குணர்வுக்குத் திரைபோடும் பொடி போதை மருந்து வகைகளும் மிகுதியான பழக்கத்துக்கு வருகின்றன ஏனைய பொறிவழி உணர்வுகளைவிடக் கண்வழிப் பொறி உணர்வு மிகுந்த ஆற்றல் வாய்ந்தது என்பதால் தமிழகத்தில் தத்துவக் கட்சித் தலைவர்கள் தலைமை இடத்துக்கு வருவதைவிடக் காட்சித் தலைவர்களே கட்சித் தலைவர்களாக வருகின்றனர். இதில் திரைப்படத்தின் பங்கு மிகப் பெரியதாகும் 1970 களுக்குப் பிறகு தமிழக அரசியலில் திரைப்படச் சோடனைகள் பொய்ப் புனைவுகள் மிகுதியாக இருந்து வருவதற்குக் காரணம் உணர்ச்சி ஊட்டி வளர்க்கப் பெற்றதே காரணமாகும் உணர்ச்சி அறிவை மறைக்கும் உண்மையை மறைக்கும் என்பதால் ஊழல் செய்யும் தலைவர்களின் பொய்க் கோலம் மக்களுக்குத் தெரியாமல் இருக்க உணர்வூட்டம் திட்டமிட்டு வளர்க்கப் பெறுகின்றது

## 2. கர்மவினைப்பற்று

தமிழரைப் பொறுத்தவரை, தம்மை நம்பாமல் அனைத்திற்கும் கடவுளே என நம்பி இருப்பதும் கர்மாவே காரணம் என்று நம்பி வாழ்வதும் இன்றும் தொடர்கின்றன. இவற்றால் தமிழர் தம் முயற்சி மேல் நம்பிக்கை வைப்பது

குறைவாக இருக்கிறது. அதிர்ஷ்டங்களில் நம்பிக்கை வைப்பதும் இலாட்டரிச் சீட்டுகளில் மோகம் கொள்ளுவதும் பெருகுகின்றன. கர்ம/கடவுள் நம்பிக்கை தவறு செய்பவனைக் கர்ம வினை தீர்த்துவிடும்; கடவுள் பாாத்து விடும் என நம்ப வைக்கின்றன தவற்றைத் தட்டிக் கேட்கும் உரிமையைத் தடுத்து விடுகின்றன. உழைப்பிற்கு ஊதியம் கேட்கும் உரிமையையும் ஒடுக்கி விடுகின்றன.

உழைப்பிற்கு ஊதியம், பழி பாவங்களுக்குத் தண்டனை என்ற இரண்டிற்கும் உறுதி (Guarantee). தர இயலாத அரச, சமுதாய அமைப்பில்தான் கர்மத் தத்துவமும் அதீதக் கடவுள் நம்பிக்கையும் மிகுதியாகப் பெருகுகின்றன. இந்நிலையை மாற்றினால் ஒழிய மக்கள் தம் உழைப்பின் மேல் நம்பிக்கை வைக்கும் போக்கை அவ்வளவு எளிதில் கொண்டுவர முடியாது

## 3. தாழ்வு மனப்பான்மை

கடவுள்/கர்ம மேல் வைக்கும் அளவிறந்த நம்பிக்கை கள் தமிழருடைய தன்னம்பிக்கையின் அளவைக் குறைத்து விடுகின்றன. எனவே எதனையேனும் யாரையேனும் சார்ந்திருக்கும் மனோபாவம் வளர்ந்திருக்கிறது. அதுவே தாழ்வு மனப்பான்மையாகப் பரிணமிக்கிறது. அதன் விளைவாகக் கோழைத்தனமும் அஞ்சுதலும் தோற்றம் கொள்ளுகின்றன தாழ்வு மனப்பான்மை எனும் தனிமனித உளவியல் சிக்கல்களே சமுதாயத்தில் பலருக்கும் வந்து விடுவதால் காலப் போக்கில் அது சமூகச் சிக்கலாகி விடுகிறது இதனால் அடுத்தவரை நம்பும் போக்கு அற்று விடுகிறது. எனவே சுயநலம் பெருகி, பொதுநலப் போக்கு

அருகுகிறது. ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கை கொள்ளாத தாலும் ஐயம் கொள்ளுவதாலும் பொது அமைப்புகள் வளர்வதில்லை. உட்குழுக்களால் சிதைகின்றன. இதனால் ஏற்படும் தனி மனிதப் பாதிப்பு தற்கொலையில் முடிகிறது.

இந்தியாவில் தற்கொலை செய்து கொள்ளுவோர் எண்ணிக்கையில் சென்னை நகரம் முன்னிலை வகிக்கிறது. தமிழர் வாழும் புதுவை மாநிலமே முதலிடம் பெறுகிறது. அரசியல் காரணங்களுக்காக நிகழும் தற்கொலைகள் தமிழரி டையேதான் மிகுதியாக உள்ளன. தற்கொலை விகிதாச் சாரத்தின் உயர்வு தாழ்வுபற்றி ஆய்வு செய்த எமில் துர்கேம் எனும் சமூகவியல் அறிஞர் தற்கொலை விகிதாச்சாரம் பெருகும் சமுதாயத்தில் சமூகக் கட்டொருமைப்பாடு குறைவாக இருக்கும் என்று விளக்குவார். இப்பார்வையில் பார்த்தால் தமிழ்ச் சமுதாயம் சமூகக் கட்டொருமைப்பாட்டில் குறைவுள்ள சமுதாயமே என்பது தெளிவாகும்.

மேலே கண்ட தமிழரிடைய உள்ள முதன்மையான குறைகளைப் போக்க நாம் என்ன செய்வது என்பதே நம் முன் உள்ள முதல் அறை கூவல் ஆகும்.

1. சாதி, மத, கட்சி, வட்டாரப் பிளவுகளை முன்னிறுத்தி வளர்க்கும் எந்தப் போக்கையும் நாம் வேரறுத்தாக வேண்டும் தமிழர், மானுடர் என்பனவே முன்னிறுத்தப் பட வேண்டும்.

2. மேற்கண்டவற்றுக்கு நீரூற்றி உயிர் ஊட்டி வருவது தற்போது கடைபிடிக்கப்பட்டு வரும் கட்சி வழித் (சாதி மதவழி) தேர்தல்முறையே ஆகும். இத்தேர்தல் முறைக்கு முடிவு கட்டியாக வேண்டும். எம்.எல்.ஏ,

எம்.பி.க்களைத் தெரிவு செய்யத் திருவுளச் சீட்டு முறையைப் பின்பற்றவது சாதி, மத, கட்சி பிரிவினை யையும் பகையையும் ஒழிப்பதற்கும், பெரும் செலவு களைத் தவிர்ப்பதற்கும் சரியான வழி முறை ஆகும்

3. தனிமனிதன், குழுக்கள் ஆகியவற்றை விடச் சமுதாயமே மிகுந்த ஆற்றல் வாய்ந்ததாகும். ஓரிருவர் அல்லது ஓரிரு குழுக்கள் நல்லனவாக இருப்பதன் மூலம் சமுதாயத்தைப் பேரளவு திருத்திவிட முடியாது. இந்தச் சமூகவியல் உண்மையை நம் சமய அமைப்புகள் கண்டு கொள்ளத் தவறி விட்டன எனவே சமுதாயத்தையே அடிப்படை உயர்நெறிகளைப் பின்பற்றும் வண்ணம் மேலிருந்து கீழாக நாம் மாற்றியாக வேண்டும். தண்டனை முறைகள் அதற்கு ஏற்ப மாற்றப் பெற வேண்டும்.

4. தற்போது நம்மேல் திணித்துள்ள அரசியல் சாசனம் நமக்குத் தேவையான அரசியல், சமுதாயம், பொருளாதாரத் தீர்வுகளுக்கு விடை அளிப்பது அன்று. முற்றுமாகப் புதிதாக அமைக்கப்படும் அரசியல் சாசனத்தின் மூலமே தமிழர் உள்ளிட்ட இந்தியர் நல்வாழ்வை எய்திட முடியும். ஆங்கிலேயக் குளிருக்குத் தைக்கப்பட்ட உடை நம்மூர் வெயிலுக்கு ஆகாதது; நோய் தருவதும் கூட.

# IV

# தமிழர் வரலாற்றின் இடைக்காலப் போராட்ட முனைப்புகள்

மானுட சமுதாயம், கண்டறிந்தவற்றுள், மொழி மிக முதன்மை வாய்ந்ததாகும். மொழி, மனிதர் தம்முடே கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவி செய்யும் ஒரு கருவி மட்டும் அன்று. தனித்தனியாகப பிரிந்து கிடக்கும் மனிதர் களைச் சேர்த்து வைக்கும் கல்சாந்து (Cement) ஆகும். மனிதர் ஒருவருக்கும் மேலாகக் கூடி வாழும்போது, கூடி வாழ்வதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் அரிய செல்வமே மொழி சமுதாயம் என்ற முதற் கூட்டச் செயல்பாடே மொழி. மொழி, இன்றேல் சமுதாய்ம் இல்லை மூளையைச் சிந்திப்பதன் மூலம் மேலும் மேலும் கூர்மைப் படுத்துவதும், சீர்மைப்படுத்துவதும் மொழிதான் மொழி என்ற ஒன்றில்லாமல் சிந்திக்கவே முடியாது; சிந்தித்த எண்ணத்தை வெளிப்படுத்தவும் முடியாது.

எனவேதான், சமுதாய அங்கங்களிடையே ஒருமைப்பாடு உண்டாக்கும் மூன்றனுள் முதலாவதாக 'மொழி' என்பதைச் சுட்டுவார் சமூகவியல் அறிஞர் ஆகஸ்ட் கோம்த் ஏனைய இரண்டு · சமயமும் வேலைப் பங்கீடும். மொழி, மக்களை ஒருங்கிணைப்பது; மொழிகள், மக்களை ஒருங்கிணைப்பிலிருந்து பிரிக்கச் செய்வன விவிலியம் பழைய ஏற்பாட்டில் (ஆதியாகமம் அதிகாரம் 11) வரும்

பாபேல் கோபுரக் கதை இதனை முற்காலத்திலேயே உறுதிப்படுத்தியுள்ளது. ஒரே மொழி பேசிக் கொண்டிருப்போர், ஒரே கூட்டமாக இருப்பர். ஒரு கூட்டத்தைக் கலைக்க, வேறு பல மொழிகளை அறிமுகப்படுத்தித் தம் (தாய்) மொழியை மறக்கச் செய்வதைப் பாபேல் கோபுரக் கதை நினைவூட்டுகிறது.

ஆக,

மொழி என்பது மக்களை ஒருங்கு இணைக்கும் மாபெரும் சக்தி (Power) என்பது உறுதியாகிறது.

தமிழர், நெடுங்காலம், பல நூற்றாண்டுகள், மொழியின் சமுதாய ஆற்றலை அறியத் தவறினர். இன்றைய துன்பங்களுக்கெல்லாம் இதுவே மூலகாரணம். மக்களை ஒட்டவைக்கும் மொழியாற்றலை உணராமல், மக்களை ஒருங்கு கூட்டாமல், துண்டுத்துண்டாக வெட்டவைக்கும், குடி, சாதி, மதம், நாட்டெல்லை, கட்சி ஆகியவற்றைத் தொல்கால, இடைக்கால, தற்காலத் தமிழர் நம்பினர்; நம்புகின்றனர். இப்பிழை நம்பிக்கையே வீழ்ச்சிக்கெல்லாம் வித்து.

சான்றாகச் சேரர், சோழர், பாண்டியர், ஈழவேந்தர் ஆகிய அனைவரும் தமிழ் மொழி பேசும் தமிழரே அன்னோர் ஆட்சியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் தமிழ் பேசுநரே. ஆனால், அன்னோர் 'யாம் தமிழர்' என மொழி அடிப்படையில் ஒன்றுபடாது, சேரன் குடி, சோழன் குடி,

பாண்டியர் குடி, ஈழக்குடி என்று வேறுபட்டனர்; தம்முள் பகைத்தனர்; சகோதரத் தமிழரையே அழித்தனர்.

தமிழர் குடிகுடியாகப் பிரிந்து கெட்ட நிலையில் மதம் வந்துள்ளது. சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலாய மதங்கள், தமிழரை, மொழிவழி ஒன்று கூடாது தடுத்தன. தமிழ்க் கூட்டத்தை மத வழிப் பிரித்தன. மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும் என்பது வள்ளலார் வாக்கு. பெரும் மேதையான திருவள்ளுவர், தம் படைப்பில், மதச் சார்பைப் புறக்கணித்தற்கு இது ஒரு பெருங்காரணமாக இருத்தல் வேண்டும்.

அயல்மதச் சார்பு, தமிழர்க்கு இருவகையில் தீங்கை இழைத்தது

1. அயல்மதச் சார்பு, தம் பூர்விக மதச் சார்பை மறக்க வைத்தது
2. அயல்மதச் சார்பு, அயல்மொழிச் சார்பாகவும் ஆயிற்று. இந்துமதச் சார்பு, சமற்கிருதச் சார்பையும், இசுலாமிய சார்பு, உருது/பாரசீக/அரபுச் சார்பையும், கிறித்துவச் சார்பு, ஆங்கிலம்/பிரஞ்சுச் சார்பையும் உண்டாக்கி நிலைப்படுத்தியது

இதன் விளைவாகத் தமிழர், தமிழை மறந்தனர். அத்துடன் அயல் மொழியையும், அதன்வழி அயற்பண் பாட்டையும், நாகரிகத்தையும் ஏற்றனர். முடிவில் இதன் விளைவாக, அயலாரையே தம் அதிகாரியாக, ஆளவந்தாராகத் தமிழர் ஏற்றனர்.

*இந்துமதத்தைத் தழுவியவர்க்குக் காவிரியைவிடக் கங்கை முதன்மை ஆயிற்று.*

*இசுலாத்தைத் தழுவியவர்க்கு மெக்கா-மதீனா முதன்மை ஆயிற்று.*

*கிறித்துவத்தைத் தழுவியவர்க்கு உரோமும், செருசலேமும் முதன்மை ஆயின*

பிற்கால நாயக்க மன்னர், விசய நகரத் தெலுங்கரே எனினும், அவர் இந்து சமயத்தார் என்று மதுரைத் தமிழர் ஏற்றனர். முடிவு, தமிழகம், தெலுங்கரின் ஆதிக்கமாக ஆயிற்று தமிழை மறந்து, மதத்தை நினைந்து தமிழர் எதிர்காலத்தை இழந்தனர்.

மேற்குப் பாகிஸ்தானுக்கும், கிழக்கு வங்காளத்திற்கும் நடுவே ஆயிரக்கணக்கான மைல்கள் இருந்தும், மதத்தை முன்நிறுத்தி ஒரு தனி நாட்டையே ஜின்னாவால் உருவாக்கிக் காட்டமுடிந்தது ஈழத் தமிழர்க்கும் இந்தியத் தமிழர்க்கும் மத ஒருமைப்பாடு மட்டும் அன்றி, மொழி, பண்பாடு ஆகியன ஒன்றாக இருந்தும், 1798க்கு முன்பு வரை, ஈழமும் தமிழகமும் சென்னை ஆட்சியிலேயே ஒன்றுபட்டிருந்தும், இரு பகுதிகளாலும் நெருங்கி வரமுடியாமல் போன காரணங்கள் ஆழமாக ஆராயத் தக்கன.

'தமிழ் பேசுநர்' என்பது முன்னிறுத்தப் பெறாமல், இலங்கை, இந்தியா, அயல்நாடு என்பது முன்னிறுத்தப் படுவது தமிழர்தம் ஏமாளித்தனத்தை அல்லவா எடுத்துரைக்கிறது?

கட்சிக் கவசமும், தமிழரை மயங்க வைக்கிறது. 'இந்து' என்ற மதவுணர்வு, நாயக்கர் என்ற தெலுங்கரைக் கி.பி.14 ஆம் நூற்றாண்டில், ஏற்க வைத்தது போல, இந்தியக் காங்கிரஸ், பி ஜே பி. கட்சி சார் தமிழர்கள், தம்மை இந்தியர் என்றே அடையாளப்படுத்திக் கொண்டு, தமிழ் அடையாளத்தைப் புறக்கணித்தனர். தமிழகத்திலும், ஈழத்திலும் 25 ஆண்டுகட்கு முற்பட்ட கம்யூனிஸ்டுகள், தமிழடையாளத்தைப் புறந்தள்ளி, மாசுகோவுடன் தம்மை அடையாளப் படுத்திக் கொண்டனர்.

ஆக, சாதி, மத, நாட்டெல்லை கட்சிச் சார்புகள், 'தமிழ்' என்ற பேராற்றலை அறிந்து கொள்ளத் தடையாக நிற்கின்றன. நிற்கவே, தமிழர், தமிழை முன்னிறுத்தியோ, தமிழனை முன்னிறுத்தியோ, போராட்டத்தை அன்றும் நடத்தவில்லை. பிற்காலத்தும் நடத்தவில்லை.

தமிழர், தமிழால் ஒன்றுபடவேண்டும் என்று முதன் முதலாகக் குரல் கொடுத்தவர் இளங்கோவடிகளே. சோழநாடு, பாண்டியநாடு, சேரநாடு என மூன்று நாடு களையும் களமாகக் கொண்டு கதை அமைத்ததும், தமிழனை இகழ்ந்த வடபுலவர் கனக விசயர் மேல் படை எடுத்ததும் தமிழ் ஒருமை, தமிழர் ஒற்றுமை பற்றியனவே.

சங்ககாலத்தின் கடைப்பகுதி, ஆரியப் பார்ப்பன வருகைக்கு நிலைப்பாட்டிற்கும் ஆளாயிற்று பதிற்றுப்பத்து இதனைத் தெளிவு படுத்துகிறது ஆரியப் பார்ப்பனர் வழி, வேதங்களும், வேதமொழியான சமற்கிருதமும், ஆரியர்தம் வேள்வி முதலான பழக்க வழக்கங்களும் நிலைகொள்ளத்

தொடங்கின. பிராமணப் புரோகித ஆதிக்கத்தையும், சாதி, வர்ணா சிரமத்தையும் எதிர்த்து வட இந்தியாவில், சமண, பௌத்த மதங்கள் எழுச்சி கொண்டன. அவை தமிழகத்திற்கும் வந்தன. மொழி ரீதியாக அல்லவெனினும், சமூக ரீதியாக, சமண பௌத்த மதங்கள் சாதியை எதிர்த்துக் குரல் கொடுத்தன. ஆரியக் கடவுளரை மறுத்தன எனினும், சமண, பௌத்த மதங்கள், தமிழர் பூர்விக மதத்திற்கும், தமிழர் தம் பழக்க வழக்கங்களுக்கும், வழிபாட்டு நெறிகளுக்கும், மொழிக்கும் கூட எதிரானவை என்று சைவ நாயன் மாராலும், வைணவ ஆழ்வாராலும் கருத்துப் பரப்பப் பெற்றது. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற அப்பர், இச்சமய அரசியல் பின்னணியிலேயே துன்புறுத்தப் பட்டார். நாயன்மாரும் ஆழ்வாரும், தமிழைக் கையில் எடுத்துக் கொண்டு, சமண பௌத்ததை எதிர்த்தனர் சமய இயக்கம், மகேந்திரப் பல்லவன், கூன்பாண்டியன் ஆகியோரைச் சமணத்தினின்று சைவத்திற்கு மதம் மாற்றியதன் மூலம், சமய அரசியல் இயக்கமாக வளர்ச்சி கண்டது. தமிழையும் தமிழரையும் முன்னிறுத்தியே போராட்டக்களமாக, இதனை நாம் கருதலாம். தமிழகத்தில் நிகழ்ந்த வெற்றி, ஈழத்தில் நிகழாமற் போனது வரலாற்று வியப்பே.

நாயன்மார், ஆழ்வார் காலம், அரசியலில் பெரும்பகுதி பல்லவர் காலமாகவே அமைந்தது பல்லவர் தமிழர் அல்லர். வட இந்தியக் குப்த மன்னர்களின் முகவர் (Agent)களாகவே பல்லவர் இயங்கினர் சமஸ்கிருத மொழி ஆட்சி, வேதத்தை முன்னிறுத்தும் பிராமண மத ஆட்சி, தமிழர் அல்லாதவர் ஆண்ட அரசியல் ஆட்சி தமிழகத்தில் நடந்தது தமிழர் வரலாற்றில் முதன்முதலாகத் தமிழிற்கு இணையாகச்

சமஸ்கிருதத்தையும், தமிழர்க்கு இணையாக ஆரியரையும், பக்கத்தில் அமர்த்திப் போற்றிய காலம் இது. பல்லவர் பொதுவாகச் சமஸ்கிருதத்தையும், ஆரிய மரபுகளையும் அறிமுகப்படுத்தி ஆதிக்கத்தில் நிலை நிறுத்தினர். தமிழ் நாயன்மார், மொழியால் தமிழராயும், ஏற்ற மதத்தால் ஆரியச் சார்பினராயும் இருக்க நேர்ந்தது. எனவேதான் 'ஆரியன் கண்டாய்; தமிழன் கண்டாய்' என்று பாட நேர்ந்தது. இதனால் சமூகவியல் பார்வையில், சமண பௌத்தச் சாதிய மறுப்பை ஓரளவு ஏற்க நேர்ந்தது. ஆவுரித்துத் தின்றுழலும் புலையரையும், ஆரிய மனுதர்மத்திற்கு மாறாக ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தது.

நாயன்மார், ஆழ்வார் மேற்கொண்ட அரசிற்கு எதிரான போராட்டத்தைத் தமிழர் போராட்டமாக வருணிப்பதா, தமிழ்ச் சமயங்களின் போராட்டமாக வருணிப்பதா, சமண பௌத்த, எதிர்ப்புப் போராட்டமாக வருணிப்பதா என்பதை மேலும் ஆய்தல் வேண்டும்.

சங்க காலத்து வடவாரியர்க்கு எதிரான குரல் இருந்தது; செயலும் இருந்தது படை எடுப்புகளும் நிகழ்ந்தன. இமயத்தை வெல்ல வேண்டும் என்ற வேணவாவும் இருந்தது. வெற்றி கொண்டு கயல், புலி, வில் சின்னம் பொறித்ததாகக் குறிப்புகளும் உள்ளன. 'ஆரியப் படை கடந்த', 'இமயவரம்பன்', முதலான மேற்கோள்கள் நினைக்கத் தகுந்தவை.

இளங்கோவின் சிலம்பில், வடஆரியரை வென்றமை, தமிழரை முன்னிறுத்தி வென்றமை விரிவாகப் பேசப்

பெற்றன. எனினும், இவையெல்லாம் அரசர் பங்கேற்கும், அரசியல் வரலாறாகவே உள்ளன.

நாயன்மாரும், அப்பரும், ஞானசம்பந்தரும், தம் நாட்டிலேயே. ஆளும் அரசரை எதிர்த்துத் தமிழிசையையும் தமிழையும், தமிழ்ச் சமய மரபையும் முன்னிறுத்திப் போராடியது அரசை எதிர்த்துத் தமிழர் நடத்திய முதற் போராட்டமாகக் குறிக்கத்தகும் பெருமை வாய்ந்தது. ஆரியத்தை இணைத்துக் கொண்டாலும், தமிழ், தமிழிசை, தமிழர் தலைமையாக நிறுத்தப்படுவது சிறப்பாகச் சுட்டத் தகுந்தது.

திருவள்ளுவர், தம் திருக்குறள் வழி, ஒரு பெரும் போராட்டக் களத்தையே, தம் கால அரசர்க்கும், மக்களுக்கும், சமயங்களுக்கும் எதிராக முன்னிறுத்தினார் என்று கருதுதல் வேண்டும்.

பண்டைத் தமிழர்க்கு வீழ்ச்சி, பிற்சங்க கால மன்னர், மக்கள் அதீதப் போக்குகளால் நேர்ந்தது. அளவு கடந்த போர் வெறி, பொதுமகளிர் ஏற்பு, கள்வெறி, புலால், சாதி மதம் முதலாயின தமிழரைப் பொதுவாகவும், தமிழரசரைக் குறிப்பாகவும் பெரிதாகப் பாதித்தன. உரோமப் பேரரசு வீழ்ச்சிக்கான காரணங்கள் அமைந்தது போன்று, சங்கத் தமிழ் மன்னர் காலத்தும் நேர்ந்திருத்தல் வேண்டும். இதனால் தமிழகம் பின் வருமாறு பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருத்தல் வேண்டும்.

1. அரசியல் அளவில் மாற்றார்க்கு இடம் கொடுத்து, தமிழரசர் வீழ்ந்தமை

2. பொருளியல் அளவில், உழைக்காதோர்க்கும் உற்பத்தியோடு தொடர்பில்லாதார்க்கும் சமூக மேல்மதிப்பளித்தமை; சான்று பார்ப்பன மேலாண்மை, ஓதுதலுக்கு மேல்மதிப்பு, போர்வீரர்க்குப் பெருமதிப்பு, பிச்சை எடுத்தலை/இரத்தலை இயல்பாக்கியமை - உழவுக்கு எதிர்ப்பு

3. 1 சமுதாய அளவில், புதிதான, அயல்மதச் சார்பு, மத மோதல்கள்.
   2. சாதியம்
   3 கர்மாவில் மிகு நம்பிக்கை/Pessimism உழைப்பிற்கு எதிரான கொள்கை
   4. உடலின்ப நுகர்வுக்கு முதன்மை

பிராமணர், உடல் உழைப்பைத் தொழிலாகக் கொண்டவர் அல்லர். வேதம் ஓதுதலும் ஓதுவித்தலும் அவர்தம் தொழில்கள்? ஆனால் சமுதாயத்தில், அரசர்க்கு அடுத்தபடியாகவும், சில சமயங்களில் அரசர்க்கு மேலாகவும் (பார்ப்பார்க்கு அன்றிப் பணிபு அறியலையே-பதிற்றுப்பத்து) மதிப்பு இருந்தது உற்பத்தியோடும், உடல் உழைப்போடும் தொடர்புடைய உழவு, வேளாண் என்பன நாலாந்திரச் சூத்திரத் தொழிலாகப் பிராமணர்களால் கொள்ளப் பெற்றது. அரசராலும், இன்ன பிறராலும் ஏற்கப் பெற்றது (மறுப்புக் குரலைச் சங்கப்புலவர் புறநானூற்றுப் பாடலில் கேட்கிறோம்) திருவள்ளுவர், இதனை முற்றாகக் கண்டித்தார். தனித் தொழில் எதுவும் பற்றித் தனி அதிகாரம் படைக்காத திருவள்ளுவர், உழவிற்காகத் தனி அதிகாரமே படைத்தார். 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' 'உழுவார்

உலகத்தார்க்கு ஆணி' என்று உழவையும், உழவரையும் முன்னிலைப் படுத்தினார்.

கடவுள் ஏற்பு, மத எதிர்ப்பு, வள்ளுவர் கொள்கையாக இருந்தது பிறப்பு வழி சாதி முடிபு அவருக்கு உடன்பாடில்லை. ஊழ்வினை/விதிக்கு எதிர்க்குரல் எழுப்பினார் பரத்தை, கள், சூது, புலால், கொல்லுதலுக்கு வழி வகுக்கும் போர் முதலாய சமகால அரசியல், சமுதாய ஏற்புகளுக்குத் திருவள்ளுவர் எதிராக இருந்தார்.

தமிழர் 'அகம்' என முதலாவது காதலையும், 'புறம்' என இரண்டாவது வீரத்தையும் போற்றி வந்த நிலையை மாற்றி, 'அகம்' என்ற இன்பத்தை, அறம், பொருள், இன்பம் எனக் கடைசியில் தள்ளினார் புறத்தை, பொருட்பாலில், படை மாட்சி எனச்சிறு கூறாக்கி விட்டு, அறத்திற்கு முதலிடம் அளித்தார்.

எனவே, திருவள்ளுவம், சமகால அரசியலுக்கும், மக்களியலுக்கும் எதிராக நிறுத்தப்பட்டது மன்னரும், புலவரும் திருக்குறள் அரங்கேற்றத்திற்கு எதிராக இருந்தனர் என்ற கருத்துடை செவிவழிக் கதைகளின் பின்னணியில் உண்மை இருக்கிறது திருவள்ளுவர் காலத்தும், அவருக்குப் பின்வந்த காலத்தும், மனுவை அரசு நூலாகக் கல்வெட் டுகளில் வெட்டிக் கொண்ட, மன்னர் எவரும் திருக்குறளைச் சுட்டாமல் ஒதுக்கியது. சாதாரணத் தற்செயல் நிகழ்வன்று. திட்டமிட்ட புறக்கணிப்பு ஆகும்.

புத்தர், இயேசு ஆகியோர்க்கு அமைந்தது போன்று திருவள்ளுவர்க்குச் சீடர் பரம்பரை அமையாமல், அன்றைய அரசும், பார்ப்பனரும், பொதுமக்களும் பார்த்துக் கொண்டனர். திருக்குறள், படிக்கத் தகாத நூலாக ஒதுக்கப்பட்ட காலங்களும் உண்டு. தேவார, திருவாசக, நாலாயிரத் திவ்ய பிரபந்தப் பாடலாசிரியர்கள் யாரும், தமக்கு முன் படைக்கப் பெற்ற திருக்குறளையோ, திருவள்ளுவர் பெயரையோ, தம் படைப்புகளில் சுட்டாமை' தற்செயல் நிகழ்வன்று 'தீக்குறளை சென்றோதோம்', என்ற ஆண்டாள் பாவை அடிக்குக் காஞ்சி சங்கராசாரியார், 'குறளை என்பது திருக்குறளைக் குறித்தது' எனக் கல்கியில் விடையளித்தது, பண்டைய பரம்பரைப் பார்வையின் எச்சமே.

திருவள்ளுவர்க்குப் புத்தர்க்கோர் அசோகன் அமைந்தது போன்று பின்பற்றும் அரசன் அல்லது சீடர் பரம்பரை அமைந்திருந்தால், தமிழன் வரலாறே மாற்றி எழுதப் பட்டிருக்கும். அரசர்க்கும் ஒழுங்கீன மக்களுக்கும் எதிராகத் திருவள்ளுவர் அமைத்த பெரும் போராட்டங்களும் தோற்கடிக்கப்பட்டமை தமிழக வரலாற்றின் கறுப்புப் பக்கங்கள் ஆகும்.

மானுடம் தம் தேவையை உணராது மயக்கம் பெறுவதில் மதம் ஒரு பேரிடம் பெறுகிறது தமிழ் மானுடம், தனக்குரிய பங்கை அறிய முடியா வண்ணம், அவர் நம்பிய வைதிக இந்து மதமும், விதிக் கொள்கையும் பெரிதும் தடுத்து நிறுத்தின. மயக்கத்தில் விரும்பி வீழும் மக்களை மீட்டு மயக்கம் தெளிவிக்க, எதிரிகளுக்கு எதிராக நிறுத்த

இயக்கம் தேவைப்பட்டது கருத்து இயக்கமாக வேண்டு மெனில், கூட்டான தொண்டுள்ளம் வேண்டும்; கூட்டமான தொண்டர் வேண்டும். அஃது இயலாத போது, அறிவாளிகள் அளவில், கருத்துகள் பேசப் பெறும். தமிழகத்துச் சித்தர் இயக்கம் இவ்வழிப்பட்டதே. தமிழையும், தமிழ் வழிபாட்டு நெறியையும், தமிழ் மருத்துவத்தையும் சித்தர் பேசினர். ஆரிய நெறிக்கு எதிரான போராட்டக் களத்தைத் 'தமிழை' மையப்படுத்திச் சித்தர் சாதித்தனர் அது ஓர் அறிவாளிகளின் சாதனை (an intelectual achievement) என்ற அளவில் நின்றது.

தெலுங்கரும், கன்னடரும் மேலாதிக்கம் செய்த கி.பி. 14-15ஆம் நூற்றாண்டுகளில், தமிழும் தமிழரும் பின்னுக்கு நிறுத்தப் பெற்றிருந்தன(ர்). தெலுங்கு, கன்னட ஆதிக்க அரசை எதிர்த்து, எதுவும் பெரிய அளவில் செய்ய இயலவில்லை. என்றாலும் மறைமுகமான ஒரு புரிதலைத் திருவண்ணாமலை அருணகிரிநாதர் செய்தார் எனல் வேண்டும். தமிழை, முன்னிறுத்தும் முகமாகத் தமிழ்க் கடவுள் முருகனையும், முருகன் குடியிருந்த பலவேறு தமிழகத் தலங்களையும், தமிழிசையையும், வடபுலத் தெய்வானையைப் பெரிதும் பேசாது வள்ளியையும், உரத்துப் பாடுகிறார். அருணகிரியின் பாடல்கள், வெற்று முருகப் பாடல்கள் அல்ல; தமிழியக்கம் நோக்கி, அவர் எடுத்த போராட்ட முனைப்பாகவே கொள்ளப்படும்.

களப்பிரர்? பல்லவர், கங்கர், இசுலாமியர், நாயக்கர், மகாராட்டிரர் என முற்றுமாகத் தமிழர் அல்லாதார், தமிழகத்தை அரசாட்சி செய்தனர். கி.பி. 3ஆம்

நூற்றாண்டளவில் தொடங்கிய இந்நிலை, ஐரோப்பியர் வருகை வரை தொடர்ந்தது. ஈழத்திலும், தமிழரசர்க்கும் சிங்கள அரசர்க்கும் ஓயாத போராட்டம் இருந்து வந்தது. ஐரோப்பிய வருகையின் போது, ஈழத்தில் தமிழ்ப் பகுதிகள் தமிழ் அரசர்களிடமே இருந்து வந்தன கண்டி அரசு, கடைசி மட்டிலும், பஞ்சாபியரைப் போல ஆங்கிலேயரை எதிர்த்து நின்றது. தமிழகத்தில், பிற்காலச் சோழர், கையகமிருந்து அரசாட்சி, பிற்காலப் பாண்டியர்க்குக் கைமாறியது கி பி. 14ஆம் நூற்றாண்டில் குலசேகரப் பாண்டியன் காலத்திற்குப் பிறகு, தமிழரசு, இசுலாமியர், நாயக்கர், மகாராட்டிரர் என அயலார் கைவசம் மாறியது. ஐரோப்பியர், தமிழகப் பகுதிகளைத் தமிழரசரிடமிருந்து அன்று, அல்லாதாரிட மிருந்தே கைப்பற்றினர்; அல்லது விலைக்கு வாங்கிச் சேர்த்துக் கொண்டனர். (சான்று : காரைக்கால்)

தமிழக, ஈழப் போராட்டங்களில், மொழியும், சமயமும் பேரிடம் பெற்றிருந்தன. ஈழத்தில், சைவத்திற்கும் பௌத்தத்திற்கும், தமிழுக்கும் சிங்களத்திற்கும் இடையிலான போராட்டங்களாக . அமைந்தன . தமிழகத்தில், சைவ X சமண/பௌத்தப் போராட்டம், கி பி. 6, 7ஆம் நூற் அளவிலேயே முற்றுப் பெற்றது. கி பி 14ஆம் நூற். வரை சைவ - வைணவ மோதலிருப்பினும், அது பெரும் போருக்குக் காரணமாக இருக்கவில்லை கி.பி. 14ஆம் நூற். பிறகு, இந்து-முசுலீம் போராட்டமாகத் தமிழகக் களங்கள் இருந்தன இப்போராட்டங்களில், ஈழத்தில் அமைந்தது போலத் 'தமிழ்-தமிழர்' ஒரு மையப் பொருளாக இருந்ததற்கான தடயங்கள் இல்லை.

ஆக, ஐரோப்பியர் வருகையின்போது, தமிழகத்தில், 'தமிழ், தமிழர்' என்பது ஒரு சிக்கலாகவே (Not an issue) தமிழரிடமும் இல்லை. ஐரோப்பியரிடமும் இல்லை. எனவேதான் எளிதாக ஐரோப்பியர் ஆதிக்கம் செய்ய முடிந்தது; ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளைத் தமிழர் தலையில் ஒரு தடங்கலுமின்றிச் சுமத்த முடிந்தது. புறம்பான ஐரோப்பிய மதம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைத் தமிழரிடையே பரப்பவும் முடிந்தது.

ஐரோப்பியர் பார்வையில், இந்தியத் தமிழரும், ஈழத் தமிழரும் இருவேறு விதமாகப் புரிந்து கொள்ளப் பட்டிருந்தனர். சென்னையிலிருந்தே, இலங்கை 1798 அக்டோபர் 11வரை ஆளப்பட்டு வந்தது ஆனால், தமிழீழப் பகுதிகளில் ஏற்பட்ட கலவரங்களால், 1798 அக். 12 முதல் பிரடெரிக் நார்த் (Fredrick North) முழுநேர ஆளுநராக அமர்த்தப் பெற்றார். 1802 முதல் முழு அதிகார ஆளுநராக இங்கிலாந்து அரசின் நேரடிப் பொறுப்பாளராக உயர்த்தப் பெற்றார்.

மாறாக, ஆங்கிலேயர் தம் முதற் கோட்டை; சென்னைப் போர்ட் செயிண்ட் ஜார்ஜ். இங்கிருந்தே, ஏனைய பகுதிகள் ஆளப் பெற்றன காலப்போக்கில், ஆங்கிலேயர் தலைநகரை, சென்னையினின்று கல்கத்தாவிற்கு மாற்றிக் கொண்டனர். சென்னையினின்று கல்கத்தா வங்காளிவரை அடக்கி ஆளமுடியாது. ஆனால், கல்கத்தாவிலிருந்து, சென்னைத் தமிழரை அடக்கி ஆளலாம் என்பது அன்னோர்தம் சரியான முடிபாக இருந்தது.

தமிழர் போர்க்களத்தினின்று, புறத்தே தள்ளப்பட்ட வரலாறு சங்க காலத்திற்குப் பின்பே நிகழ்ந்துவிட்டது போர் அறிவிப்பு, வரும் எனில் ஒவ்வொரு வீட்டிலிருந்து ஆண் பிள்ளையைப் பெரியவனாயினும் சிறியவன் ஆயினும் அனுப்ப வேண்டியது கட்டாயமாக இருந்தது. இவ்வேற்பாட்டால், அரசாட்சியில், மக்களின் பங்களிப்புக் கட்டாயமாக இடம் பெற்றிருந்தது. ஆளும் அரசினின்று மக்கள் அந்நியப்படுத்தப் பெறவில்லை. ஆரிய வர்ணசிரம முறை அறிமுகமான பல்லவர் காலம் (?) தொடங்கி, 'சத்திரியர் - போர்வீரர் எனத் தனிப்பகுப்பு உருவாயிற்று. தனிப்படை. முறை உருவானவுடன், அரசு, பொதுமக்களிட மிருந்து மிக அந்நியப்பட்டு விட்டது குழு, இன அரசாட்சி முறை, பேரரசாட்சி முறையாக விரிவடையவே, இவ்வந்நியப்படுதல் மிகவும் கூடுதலாகி யிருக்கவேண்டும். இந்தியா போன்ற பெரிய நாட்டில் இஃது இயல்பான நிகழ்வே. இதனால், மக்களுக்கும் மன்னனுக்கும் பெரும் இடைவெளி ஏற்பட்டது 'யார் அரசன்' என்பது கூடப் பொதுமக்களின் பொருளாக இல்லாமற் போய்விட்டது. 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?' என்ற மக்கள் வழக்கு இதன் எதிரொலியே ஆளும் ஓர் அரசனை இன்னொருவன் வென்று விட்டாலோ, கொன்று விட்டாலோ ஆட்சி கை மாறிவிடும். இது பொதுமக்களுக்கு உடனடியாகத் தெரியாது மதுரையில் கண்ணகி வழக்குரை காரணமாக உயிர் நீத்த பாண்டியன் நெடுஞ்செழியன், கோப்பெருந்தேவி, மதுரை எரியுண்ட நிகழ்ச்சி ஆகியன. அடுத்த நாட்டு மன்னனான சேரன் செங்குட்டுவனுக்கு மாதக் கணக்கில் தெரியாமல் இருந்ததுவும், குன்றக் குறவரும், மணிமேகலைச் சாத்தனும்

தெரிவித்த பின்புதான் தெரிய வந்ததும் பண்டைய செய்தித் தொடர்பின்மையை எடுத்துக்காட்டுவன.

எனவே, தமிழகத்து ஆட்சி மாற்றம் என்பது, எங்கோ, எப்போதோ யாராலோ நிகழ்த்தக் கூடியதாக இருந்தது. ஆட்சி மாற்றத்தில் மக்கள் பங்கேற்பு மிகமிகக் குறைவானதாக இருந்தது ஆறில் ஒரு பங்கு வரி செலுத்துவதுடன், அது முடிந்தது.

ஆகஸ்ட் கோம்த், மக்கள் அறிவு நிலையை மூன்று கட்டங்களாக விளக்குவர்.

## 1. இறைமையியல் நிலை (Theological Stage)

(அ) கடவுளே எல்லாம்
(ஆ) இராணுவப் படையே மேலாதிக்கம் செய்யும்
(இ) அதீத நம்பிக்கை

## 2. நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை (Metaphysical Stage)

(அ) நுணுக்கமான சக்திகளே எல்லாம்
(ஆ) சட்டங்களே மேலாதிக்கம் செய்யும்
(இ) அரசே அனைத்தும்

## 3. புறமெய்ம்மை நிலை (Positive Stage)

(அ) காரண - காரியம்
(ஆ) தொழிலே மேலாதிக்கம் செய்யும்
(இ) மக்களுக்கே முதன்மை

கோம்த் விளக்கும் மூன்று கட்டங்களுள், தமிழர், மக்களே அனைத்தும் என்ற மூன்றாம் நிலையை 1947இல் விடுதலை பெறுகிறவரை அடையவே இல்லை; அறியவும் இல்லை. முன்னர் மொழி ஒரு சக்தி என்று அறியாது துண்டுபட்டு நின்றது போல, மக்கள் ஒருங்கிணைவு ஒரு சக்தி என்பதையும் அறியவில்லை. அவ்வாறு முற்றுமாக அறிகிற பொழுதுதான், தமிழர் போராட்டக்களத்தில் முன் வந்து நிற்பர்.

V

# தமிழ்த்தேசியம் - தோற்றம் வளர்ச்சி எதிர்காலம்

பகுதி : ஒன்று

## நாட்டு இயம் (தேசியம்)

குறிப்பிட்ட நாட்டு மக்கள் குறிப்பிட்ட அடிப்படையை ஒட்டித் தம்முள் ஒருங்கிணைவது, ஒருங்கிணைப்பது நாட்டு இயம் எனப் பெறும். இது அம்மக்களின் மொழியையோ, நிறத்தையோ, இனத்தையோ, மதத்தையோ, இசத்தையோ அடியொற்றி அமையும் மொழியை ஒட்டி அமைதலே இயற்கையானது, பெரும்பான்மையானது; உலக நாடுகள், பலவற்றுள்ளும் இருப்பது.

## தமிழ் நாட்டு இயம் (தமிழ்த் தேசியம்)

இந்தியாவின் தென்பகுதியும், இலங்கையின் வடபகுதியும் தொன்று தொட்டுத் தமிழ் பேசும் மக்களால் நிறைந்திருப்பன. இந்தியா வாழ் தமிழர்கள், கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர் (சில காலம் தவிர) வேற்றுமொழி பேசுபவரால் தொடர்ந்து ஆளப்பட்டு வந்தனர். இலங்கைத் தமிழ் மக்கள் சில காலம் தவிரப் போர்ச்சுகீசியர் வரும் வரை (கி.பி. 1619 வரை) தமிழராலேயே ஆளப்பட்டனர். போர்ச்சுகீசியர் காலத்தும் யாழ்ப்பாணம் அடிமை கொள்ளப் பட்டிருந்ததே தவிர ஏனைய வன்னிமை அரசுகளும்,

கண்டியரசும், தமிழர் ஆளுகையிலேயே இருந்தன. எனவே, இந்தியத் தமிழகத்தில் தமிழ்த் தேசியக் குரல் குன்றியும், ஈழத்தில் ஓங்கியும் இருந்தது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட, மக்கள் இனத்தைத் தமிழரே ஆள வேண்டும் என்பதே, தமிழ்த் தேசியத்தின் உட்கோளாகும்

## மொழி வழித் தேசிய வரலாறு

தொல் பழங்கால மக்கள், தொடக்கக் காலத்து, பேசும் மொழியும் எழுதும் மொழியும் இன்றியே இருந்திருத்தல் வேண்டும் புற நாகரிகக் கோலம் இல்லாமலும் வாழ்ந்திருத்தல் வேண்டும் ஆண்-பெண் விழைச்சு, இருவரை நெருங்க வைத்தது குழந்தைப் பிறப்பு, வளர்ப்புக் காலத் தேவை, சேர்ந்து வாழும் குடும்ப அமைப்பை வற்புறுத்தியது. வலிமையுடையார் தரும் தொல்லை, கொடும் மழை, வெள்ளம், புயல், வெயில், பஞ்சம், கொடும் விலங்கு களின் இடையூறு, அவைதரும் உயிர் ஊறு, மானுடரைக் குழு வாழ்வை நோக்கிய சமுதாய வாழ்வை நோக்கி நகர்த்தியது சமுதாய வாழ்வே, சைகைக் குறியீடுகளில் இருந்த கருத்துப் பரிமாற்றத்தை, ஒலிக் குறியீடுகளுக்கு மாற்றியது. 'இன்னின்ன ஒலிக்கு இன்னின்ன பொருள்' என முடிவு செய்து, மொழித் தோற்றத்திற்கு வித்திட்டது, தனியாள் முயற்சியன்று, கூட்டு முயற்சி; சமுதாய முயற்சி. எனவே மொழி தோன்றிய போது சமுதாயம் தோன்றியது; சமுதாயம் தோன்றியபோது மொழி தோன்றியது

மொழியும் சமுதாயமும் ஒன்றில் ஒன்றாக, ஒன்றால் ஒன்றாகத் தோன்றின எனவே, சமுதாயம் பெற்ற பேறுகளுள் மொழி முதலானது; முதன்மையானது.

மொழியே, ஆறாம் அறிவுத் தோற்றத்திற்கு ஆதி; பகுத்தறிவிற்கு மூலம்; மனம் என்ற மனித அடையாளத்திற்கே, அருவ ஆற்றலுக்கே அடிப்படை; ஆதி மூலம் இன்றைய அறவியல், அறிவியல், பொறியியல், தொழிலியல் அனைத்திற்கும் தலையூற்று மொழியே என்பது தெளிவாம் எனவேதான், பெரும்பான்மையான மானுட குலங்கள், மொழிவழிப் பெயரிடப் பெற்றன. கிரேக்கர், சீனர், ஆங்கிலர், பிரஞ்சியர், செருமானியர், தமிழர், சிங்களர் முதலாய பெயரீடுகளைக் காண்க

தொல் பழங்காலங்களில், மானுடக் குழுக்கள், பெரும்பாலும், மொழி வழியாகவே அடையாளம் காட்டப் பெற்றிருத்தல் வேண்டும் வேறுபடுத்தப் பட்டிருத்தல் வேண்டும்; நில எல்லைகள் வகுக்கப் படாத, மதக் கோட்பாடு உருவாகாத, சாதிப் பிரிவு ஏற்படாத காலத்து மொழிப் பிரிவு மட்டுமே இருந்திருத்தல் வேண்டும்

இரண்டாம் கால கட்டத்தில், பண்டை மானுடக் குழுக்கள், உணவு தேடி இடம் விட்டு இடம், பெயரும் போது, புதுக் குழுக்களைச் சந்திக்க நேர்ந்தது இரண்டின் மொழி வேறாகவே இருந்திருத்தல் வேண்டும் இங்கேதான், இரு குழுக்களும் உறவாடி இணைந்ததால், மொழிக் கலப்பும், கலப்பு மொழியும், புது மொழியும் தோன்றின. இரு குழுக்களும், பகையாடி மோதும் போது, வெற்றி பெற்ற குழுவின் மொழி, ஆதிக்கம் பெற்றது, தோற்றவர் மொழி, சில தலைமுறை ஊசலாடி மறக்கப்பட்டது சான்று: ஸ்காட் மொழி தோற்றவர், ஆற்றல் வாய்ந்தவராக இருப்பின், பல காலத்திற்குப் பின்பும், அன்னோர் மொழி அழியாமல்,

காக்கப்பட்டது. இசுரவேலர், தம் மொழியை இரண்டாயிரம் ஆண்டுகட்குப் பிறகும் 1948இல் மீட்டுருச் செய்தது போல.

ஆகக் குழுக்கள் ஒன்றுடன் ஒன்று முரணும்போது, வல்லாண்மை வழி அரசு, அயலரசு உருவாகும். அயலரசாட்சியில், நாட்டு மொழி ஒடுக்கப்பெறும். தமிழகத்தில் வட இந்திய அரசுகள் வேற்று மொழித் தென்னிந்திய அரசுகள், ஐரோப்பிய அரசுகள், தமிழரை அடக்கி ஆண்டபோது, தமிழ்மொழியும் ஒடுக்கப்பட்டது. ஈழத்திலும், போர்ச்சுகீசியர் (கி பி 1919) ஒல்லாந்தர் (கி.பி 1938), ஆங்கிலர் (கி பி 1795), சிங்களர் (கி பி 1948) ஆகியோர் கீழ் ஒறுத்தலில், தமிழர் துன்புறத் தமிழ் மொழியும் பின்னுக்குத் தளளப்பட்டது

மூன்றாம் கட்டமாக, அதாவது மொழி, அரசு ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக, மதம் மானுடத்தை ஒருங்கிணைத்தது மத ஒருங்கிணைப்பு மொழி, அரச எல்லைகளைக் கடநதும் அமைந்தது; அமைகிறது; அமைக்கப் பெறுகிறது இக்கருத்தின் இன்னொரு பக்கத்தைச் சிந்திப்பின், மத ஒருங்கிணைப்பு, இயற்கையாக அமைந்து கிடந்த மொழிப் பிணைப்பை அழிக்கிறது; செயற்கையாக அமைந்த அரச எல்லையைக் கடக்கிறது மொழிவழித் தேசியத்தின், குரல் வளையை, மதச் சார்பு நெரித்து விடுகிறது

இசுலாம் பரவிய ஆப்பிரிக்க நாடுகளான எகிப்து, மொராக்கோ, துனீசியா, அல்ஜீரியா முதலான நாடுகளில் மண்ணின் மொழி அழிந்தது அரபும், ஆங்கிலமும்,

பிரஞ்சும் ஆதிக்கம் பெற்றன. இராக், சிரியா முதலாய பண்டை நாகரிகப் பழம் நாடுகளில் மண்ணின் மொழி அழிந்து, அரபு அரங்கேற்றப் பெற்றது; திராவிடத் தொல்மொழியும், நாகரிகம் கோலோச்சிய, பாகிஸ்தானில், இசுலாமிய மத வரவால், உருது ஆளுகை பெற்றது. தொல்மொழி ஒழிந்து, பிராகுவி எனும் சிறுபான்மை மொழியாக நலிந்தது. ஐரோப்பாவினின்று ஆசிய, ஆப்பிரிக்க, வடஅமெரிக்க, தென்னமெரிக்க, ஆத்திரேலியக் கண்டங்களில் வெள்ளையர் குடியேறி ஆட்சி ஆதிக்கம் செய்தபோது, கிறித்தவப் பரவுதலால் ஐரோப்பிய மொழிகள் ஆளுமை பெற்றன; இலத்தீன், லிங்வா பிராங்காவாக இருந்தது அந்தந்த மண்ணில் வாழ்ந்த மொழிகள், காட்டுக்குத் துரத்தப்பட்டன. இந்தியாவில், ஆரியர் வருகையும் ஆதிக்கமும் அன்னோர்தம் சமஸ்கிருதத்திற்குத் தலைமை அளித்து, மண்ணின் மொழிகளை ஒடுக்கின. மொழி வழி உணர்வு அடக்கப் படும்போது, மொழிவழித் தேசியமும் அடக்கப்படும் மெல்ல மெல்லத் தானே அடங்கியும் போகும்.

இந்து மத சமஸ்கிருத மொழி வழி ஆரிய நேயமும், மோகமும், கிறித்தவ மத ஆங்கில மொழி வழி ஆங்கில நேயமும், மோகமும் கத்தோலிக்கப் பிரஞ்சு மொழி வழிப் பிரஞ்சு நேயமும், மோகமும் ஊட்டி வளர்க்கப்பட்டன. வேற்றுத் தேசியமும் வளர்க்கப் பட்டன; தமிழ்த் தேசியம் தவறானது, குறுகியது என்ற பிழையான உணர்வு, தமிழர் ஊடேயே பரப்பப் பெற்று, நம்ப வைக்கப் பெற்றது. தமிழகத்திலும், ஈழத்திலும், தமிழ்த் தேசியம் எழுச்சி பெற முடியாமல் மதச் சார்புகளே பேரளவு தடுத்தன.

## தமிழகத்துள் சமயப் படையெடுப்புகள்

சங்க காலக் கடைசிப் பகுதியிலும் சங்க மருவிய காலத்தும் (கி.பி மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்), தமிழர் தம் மரபுச்சமயத்தினின்று, புறம்பான வட இந்தியச் சமயங்களின் பக்கம், வன்முறை வழியும், மென்முறை வழியும் ஈர்க்கப் பெற்றனர் வட இந்தியப் படையெடுப்பு என்றில்லாமல், வட இந்திய மதப் படை எடுப்புகள் நிகழ்ந்தன பிராமண வைதிக மதப் பிரிவுகள், சைனம், பௌத்தம் ஆகியன, தமிழகத்துள் நுழைந்தன, தமிழர், பேரளவு மதம் மாறினர் மதங்கள், வழிபாட்டு மாற்றங்களை மட்டும் அன்றிப் பண்பாட்டு மாற்றங்களையும் கூடவே கொண்டு வந்தன எனவே தமிழர் மதம் மாறிகளாக மட்டும் அல்லாமல், பண்பாட்டு மாறிகளாகவும் ஆகிப் போயினர்

தொடர்ந்து, இசுலாமும், கிறித்தவமும் அவற்றின் உட்பிரிவுகளும் தமிழகத்துள் நுழைந்தன இம்மதங்கள், ஆளுவோர் தோள்மீது அமர்ந்து வாள் துணையுடன் நுழைந்தன இங்கிருந்த அதே தமிழர்தாம், இசுலாமியராகவும், கிறித்துவராகவும் பிளக்கப் பெற்றனர். வந்தவை மதங்களே; வந்த மதங்களுக்குள் சென்றவர், இங்கு முன்பே இருந்த தமிழரே, தமிழரே

## ஈழத்துள் சமயப் படையெடுப்புகள்

ஈழத்திலும் இதுவே நிகழ்ந்தது. 'எலு' எனும் தமிழ்ச் சேய்மொழி பேசிய இயக்கர், பௌத்தப் பாலி மொழிக் கலப்பில், சிங்க + கெல (எலு) = சிங்கள மொழியினர் ஆயினர்; கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில், வட

இந்தியாவிலிருந்து ஈழம் வந்த விசயனால், ஆரிய இனம், தன்னைச சிங்கள இனம் என்று அடையாளப்படுத்திக் கொண்டது கி.மு 274இல் வட இந்திய மன்னன் அசோகன் முயற்சியால், பௌத்தம், ஈழம் வந்தடைந்தது. மொழியாலும், பின்னர் இனத்தாலும் எதிர்முனையில் இருந்த சிங்களர், மதத்தாலும், தமிழர்க்கு எதிராகப் பௌத்தத்தைத் தழுவிப் பௌத்தராயினர் தமிழகத்துப் பௌத்தத்தை விரட்டிய தமிழர், ஈழத்தில், பௌத்தத்தை விரட்டாது அல்லது விரட்ட இயலாது விட்டனர்

கி பி 8, 9, 13ஆம் நூற்றாண்டுகளில், ஈழம், அராபியரின் வணிக மையமாக விளங்கியது அராபியர், சிலர் அங்கேயே தங்கினர் தம்முடன், பெண்டிரைக் கொண்டு வராத அராபிய ஆண்கள், ஈழத் தமிழ்ப் பெண்டிரை மணந்தனர் (சு. இராசரத்தினம், ப. 37; கேரள நம்பூதிரி பிராமணர்கள், நாயர் பெண்களை மணந்தது போல); ஈழத் தமிழரும் இசுலாமாயினர்; தமிழகத்து இசுலாம் ஆகிய தமிழரும்; வணிகம் பொருட்டு ஈழம் குடியேறினர் வழக்கம் போல மதம், வழிபாட்டு அளவில் தமிழரை மாற்றியதுடன் பண்பாட்டளவிலும் மாற்றியது; மொழியளவிலும் மாற்றியது. தமிழர்க்கு எதிராக இசுலாமியத் தமிழரை எதிரணியில் வைப்பதிலும் பிரித்தாளுவதிலும் சிங்களர் வெற்றி பெற்றனர். மொத்தத்தில், தமிழ்த் தேசியத்திற்கு எதிராக இசுலாமியத் தமிழர் நிறுத்தப் பெற்றனர்.

போர்ச்சுகீசியர், ஒல்லாந்தர், ஆங்கிலர் ஆகியோர் வரவு (கி.பி. 1619-1948) ஆண்டுகளில், கிறித்தவ மத

வருகையும், மத மாற்றமும், ஈழத்தில் நிகழ்ந்தன. எனினும், தமிழ் நாட்டிலும், புதுவையிலும் நிகழ்ந்தது போலக் கிறித்தவர், ஈழத்தில் 'தமிழர்' என்ற அடையாளத்தை மதம் மாறியபோதும் இழக்கவில்லை.

என்றாலும், ஈழம், தமிழ்நாடு, புதுவை எனப் பார்க்கையில், ஆரிய வைதிக, சைன, பௌத்த, இசுலாமிய, கிறித்தவ மத மாற்றங்கள், தமிழரைத் தமிழை விட்டும், தமிழ்ப் பண்பாட்டை விட்டும், தமிழ்த் தேசியத்தை விட்டும் பெரிய அளவு அயன்மைப் படுத்தி விட்டன

## சைவம் X பௌத்த மோதல் வழித் தமிழ்த் தேசியம்

மகேந்திரப் பல்லவன் காலமான கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல், தமிழகத்து, சைவ நாயன்மாராலும், வைணவ ஆழ்வாராலும் பக்தி இயக்கம், இலக்கிய இயக்கமாகவும், சமுதாய இயக்கமாகவும், சமய இயக்கமாகவும் அமைந்து இயங்கியதுடன், அரசியல் இயக்கமாகவும், அக்கால அரசர் துணையுடன் நிகழ்ந்தது

ஊர் ஊராக நடந்து சென்று இயக்கத்தைச் சைன, பௌத்தத்திற்கு எதிராகப் பக்தி நெறி நின்றோர் நடத்தினர். இதன் விளைவாக, சைனமும், பௌத்தமும் தம் பிடியை இழந்தன. வட இந்தியாவில் குப்தர் அரசாட்சிக் காலம், இந்துமத மறுவுயிர்ப்புக் காலமாக விளங்கியதும், வடபுலத்தும், சைன பௌத்தம் ஒடுக்கப்பட்டதும், தமிழக மாற்றத்திற்குப் பெருந்துணையாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இம்மாற்றம், இலங்கையில் நிகழவில்லை.

இலங்கையில், சிங்களரிடையே பௌத்தத்தின் கை ஓங்கியே தொடர்ந்து இருந்து வந்தது. இவ்வோங்குதலுக்கும் நிலைபேற்றிற்கும் சீன அரசுகள் துணை நின்றிருத்தல் வேண்டும் கி பி ஏழாம் நூற்றாண்டில் இந்தியா வந்த யுவான்-சுவாங் பயணமும், அவர்தம் குறிப்புகளும் இதனை உறுதி செய்கின்றன*. மாணிக்கவாசகருடன், ஈழத்துப் பௌத்தப் பிக்குகள் வாதிட்ட வரலாறும், ஈழத்தினின்று தமிழகத்திற்குப் புத்தத் துறவிமார் நூற்றுக் கணக்கில் வந்தனர் என்ற யுவான்-சுவாங் குறிப்பும் ஈழப் பௌத்த ஆளுமையைத் தெளிவுபடுத்துகின்றன.

இந்நிலை சைவம் X பௌத்தம் என்று மத அளவில் எதிர் நிறுத்தியதுடன், சைவத் தமிழர் X பௌத்தச் சிங்களர் என்றும் மக்கள் அளவிலும் எதிர் நிறுத்தியது எனவே, தமிழர் சிங்களர் பார்வையில், மொழியாலும், இனத்தாலும் மட்டும் அன்றி, மதத்தாலும் தமிழர் சென்மப் பகைவராயினர் இதன் நல் விளைவு, ஈழத் தமிழரும் மொழியாலும், இனத்தாலும், மதத்தாலும் ஒருங்கிணைந்து நிற்க வேண்டியவராயினர். ஐரோப்பியர் வரவு வரை சிங்களவரை எதிர்த்துத் தமிழ் மொழியினராக, தமிழராக, தமிழ்ச் சைவராக நின்றனர். மொழி, இனம், மதம் என்ற இயற்கையின் எல்லை கடந்த செயற்கையான ஆளும் அரச

---

* கி.பி. 1739க்குப் பின் கண்டித் தமிழரசன் ஆன, தமிழ்நாட்டு அரச வழி மன்னனான இராசசிங்கன் சீன நாட்டினின்று புத்தத் துறவிகளை ஈழத்திற்கு வரவழைத்துப் புத்த மதத்திற்கு உயிர் ஊட்டினான்.

- சு. இராசரத்தின்ம், ப. 75)

எல்லையில், தமிழரை, 'சிலோன்' என்ற காலனி (Colony) எல்லையில் கொண்டு வந்து நிறுத்தியோர் ஐரோப்பியரே. ஆனால், இந்தியத் தமிழகத்தின் கதை இதுவன்று.

## சாதியும் தேசியச்சிதைவும்

மொழி, குடி, அரசு, மதம் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாகத் தொழில் வழித் தோன்றிய சாதிகளும், அவற்றிற்கு இணக்கமாக இறக்குமதியான ஆரிய வர்ணாசிரமமும், தமிழரை மேலும் கூறு போட்டன எனவே, தமிழர், மொழித் தேசிய மக்களாக இயங்காமல், சாதி வழி மக்களாக இயங்கினர்; இயங்கி வருகின்றனர் இச்சாதி வழிப் பிளவு, 1983க்குப் பின் ஏற்பட்ட தீவிர அரசியல் மாற்றங்களால், ஈழத்தில் ஒடுங்கத் தொடங்கிவிட்டது. தமிழகத் தேர்தல் முறை, கட்சி வழிச் சாதிய அரசியல், சாதி வழி இட ஒதுக்கீடு ஆகியவற்றால், தமிழ்நாட்டிலும் புதுவைப் பகுதிகளிலும் சாதிகளுக்கு மறுவுயிர்ப்புக் கொடுக்கப்பட்டு விட்டது சாதியை முன்னிறுத்தி அரசியல் கட்சிகள் பெருகத் தொடங்கிவிட்டன. எனவே மொழி வழித் தேசியமும் மிகமிகப் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது.

தமிழர் எனும் ஒரு குடையின்கீழ் ஒன்று திரள வேண்டிய தமிழர், தம் சாதியை முன்னிறுத்தி, அச்சாதிக்கு இணையான அயல் மாநில, வட இந்தியச் சாதிகளுடன் அடையாளப்படுத்திக் கொண்டனர். இவ்வாறு தமிழகப் பார்ப்பனர், அனைத்திந்தியப் பிராமணச் சங்கத்திலும், தமிழக இடையர், அனைந்திந்திய யாதவர் சங்கத்திலும், தமிழகப் பறையர், பள்ளர் முதலானோர் அனைத்திந்தியத் தலித் சங்கத்திலும், மொழி கடந்து, மாநில எல்லை கடந்து,

அங்கத்தவராயினர். இவ்விக்கட்டால், தம் 'தமிழ், தமிழர்' என்ற அடையாள முதன்மையை இழந்தனர். சாதிக்கே முதன்மை அளித்தனர். இந்நிலையே இசுலாமியர்க்கும், கிறித்தவர்க்கும் பொருந்துவதாயிற்று. அன்றியும், இசுலாமியரும், கிறித்தவரும், இந்திய நாட்டையும் கடந்து, தம்மை மத அடிப்படையில் போப்புடனும், செருசலத்துடனும், மக்கா, மதீனாவுடனும் இணைத்து அடையாளங் காட்டினர்

தமிழகத்திற்கு வெளியே மட்டும் அன்றித் தமிழகத்திற்குள்ளேயே, சில சலுகைகளுக்காக, தமிழர், தம் மொழிவேரைப் புறக்கணித்து, வெள்ளாளர், கவுண்டர் என்றும், வன்னியர் என்றும், தேவர் என்றும், இன்ன இன்ன சாதியினர் என்றும் தமக்குள்ளே பிரிந்து நிற்கின்றனர். தமிழ் பேசும் இன்னொருவரைத் 'தமிழர்' என்று பார்ப்பதைவிட, 'வேறு சாதியினர்' என்றே இவர் பார்ப்பார் தமிழ்த் தேசிய உணர்வு எழுதற்குப் பதிலாக, சாதிய உணர்வே, இதனால் உரம் பெற்றது; பெற்று வருகிறது

## கட்சியும் தேசியச்சிதைவும்

இந்தியா, 1947இல் விடுதலை அடைந்தது 1950இல் அரசியல் சாசனம் புதிதாக அறிமுகமாயிற்று. இச்சாசனப்படி கட்சிகளும், கட்சி வழித் தேர்தல்களும் அரசப் பதவிகளுக்காக அறிமுகமாயின. முன்பே, பிளவுண்டிருந்த தமிழர், மேலும் கட்சி அடிப்படையில் பிளவுண்டனர். கட்சியினருக்குத் தமிழர் என்பதைவிட 'எந்தக் கட்சி' என்பதே பெரிது. தமிழ் நலன், தமிழர் நலன், தமிழக நலன் என்பவற்றைவிடத் தம் நலனும், தம் கட்சி நலனுமே

பெரியவை. கட்சித் திரையில் தமிழ்த் தேசியம் மறைக்கப் பட்டது தமிழ்நாடு, புதுவையில் இது பேரளவும், ஈழத்தில் ஓரளவும் (1948 கால அளவில்) இந்நிலை வந்துற்றது

இந்தியாவிலும், ஈழத்திலும், கட்சி வழிப் பார்வை, தமிழ்த் தேசியப் பார்வையைக் குலைத்தது, குறைத்தது நாடு முற்றும் (?) தழுவியதாக அமைந்துள்ள காங்கிரஸ், பாரதீய ஜனதா முதலாய இந்தியக் கட்சிகளில் ஈடுபாடு கொண்ட ஒரு தமிழன், தமிழன் எனும் எல்லைக்கு அப்பால், இழுத்துச் செல்லப்படவே, தமிழ், தமிழர், தமிழக நலத்தை மறப்பதிலும், துறப்பதிலும் கவலைப்படுவதில்லை. அனைத்துலகப் பார்வையில் அறிமுகமான பொதுவுடைமைக் கட்சியினர், ‘தமிழ், தமிழர்’ என்று பார்ப்பதையே குறுகிய பார்வை என்று கருதினர் சீனமொழி, சீன இன நலத்தைப் பொதுவுடைமையாளர் மாசேதுங் பின்னிறுத்தியதில்லை. உருசியரும், தம் உருசிய அடையாளத்தைப் பின்னிறுத்திய தில்லை. ஆனால், தமிழகத்திலும், ஈழத்திலும் சிலரைத் தவிர, பொதுவுடைமையர் பலர், ‘தமிழ்த் தேசிய’ நலனைப் பேரளவு புறக்கணித்தனர். ஈழத்தில், தொடக்க காலங்களில் வலது சாரிப் பொதுவுடைமையினர் தமிழ்த் தேசியத்திற்குத் துணையாக நிற்கவில்லை. தமிழ்நாட்டுப் பொதுவுடைமை யினரும், வர்க்க வேறுபாட்டை முன்னிறுத்திய அளவு, இன வேறுபாட்டையும், சமூக நீதியையும், தமிழ்த் தேசியத்தையும் தலைமையானவையாக முன்னிறுத்தவில்லை. திரு. சங்கரையா எனும் இக்காலப் பொதுவுடைமையாளர், இன்றும், தமிழீழத்திற்கும், ஈழத் தமிழர்க்கும் எதிராகவே அறிக்கைகள் விட்டு வருகிறார்.

தமிழ்த் தேசியம்

|

குடிவழிப் பிளவு (சேரன், சோழன், பாண்டியன் குடிகள்)

|

மதவழிப் பிளவு (சைவம், வைணவம், இந்து, முசுலீம், கிறித்தவன்)

|

அரசவழிப் பிளவு (இங்கிலாந்து, இந்தியா, இலங்கை)

|

சாதிவழிப் பிளவு

|

கட்சிவழிப் பிளவு

மொழிவழி மக்கள் இணைந்திருப்பதுதான் எளிதானது; இயல்பானது. ஆனால், தமிழர், அதனை விட்டு வெகு தொலைவிற்குக் கடத்தப்பட்டு விட்டனர். சாதி, மதம், கட்சி அரசியல் எல்லை அவர்களைத் தன் நலமிகள் ஆக்கிவிட்டன அம்மா அப்பாவை, நெடுங்காலம், நெடுந் தொலைவு, பிரிந்து வந்து, சீமைக்காரியை மணம் முடித்துக் கொண்ட மகன், தன் பெற்றோரையே புறக்கணித்து மறந்துவிட்டது போல இது நடந்து விட்டது.

மிக எச்சரிக்கையானவர்கள் எனப் பெயர் பெற்ற அறிவாளிகளான, ஐரோப்பியர், ஒரே நிறத்தினர், ஒரே

இனத்தினர், ஒரே பண்பாட்டினர், ஒரே நாகரிகத்தினர் எனினும், மொழி வழி நாட்டினராகவே தனித்தனி நாடுகளை அமைத்துக் கொண்டனர். ஒன்றிற்கு மேற்பட்ட மொழியினர் ஒரே நாட்டில் இருக்க வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் ஏற்பட்ட, சுவிட்சர்லாந்து, பெல்சியம் ஆகிய நாடுகளில், அனைத்து மொழிக்கும், மொழியினர்க்கும் சமவுரிமை வழங்கினர்.

மொழி வழித் தேசியத்திற்கு மாறாகப் பொதுவுடைமை இசத்தில் கட்டிப் போடப்பட்டிருந்த சோவியத் ஒன்றியமும், 1991இல் மொழி வழி நாடுகளாகத் திரும்பி விட்டது. மார்சல் - டிட்டோவால் கட்டிப் போடப்பட்டிருந்த யூகோசுலாவியாவும், மொழிவழித் தேசியத்திற்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. இசத்தின் பேரால் பிரிக்கப்பட்டிருந்த கிழக்கு செருமனி, இசத்தைத் துறந்துவிட்டு, செருமனி என்று மொழிவழிக்குத் திரும்பிவிட்டது மத அடிப்படை வாதத்தில், பாகிஸ்தானில் மாநிலமாக இருந்த கிழககுப் பாகிஸ்தான், 1971இல் வங்க மொழித் தேசமாகத் தனியே பிரிந்து விட்டது. சீனர் நிறைந்த தீவு நாடான, ஆங்காங் திரும்பவும் சீனாவுடனேயே 1997இல் இணைக்கப் பெற வேண்டும் எனும் ஒப்பந்தம் 1984இல் சீனாவுக்கும், பிரிட்டனுக்கும் இடையே கையெழுத்தாயிற்று

அரசியல், மதம், இசம் என்ற பெயரால் செயற்கையாக ஒருங்கிணைக்கப்பட்ட, நாடுகளில், பெரும்பான்மை மொழியினரின் ஆதிக்கமும், சிறுபான்மைத் தேசிய இனமக்களை ஒடுக்குதலும் நடந்ததே மேற்கண்ட நிகழ்வுகட்கு முதன்மையான காரணம். அரசியல்,

பொருளாதார, சமுதாய முப்பிரிவுகளிலும், வேலைவாய்ப்பு, தொழில் பெருக்கம், முதலீடு, கல்வி, போக்குவரத்து அயல்நாட்டு வாய்ப்பு, பெரும்பதவி, அமைச்சரவைப் பங்கு, அதிகாரப் பங்கு முதலாக அனைத்துத் தளங்களிலும், சிறுபான்மை ஆகிவிட்ட தேசிய இன மொழியினர், தமக்குரிய வாய்ப்பை இழந்து தவித்ததும். தவிப்பதுவுமே தலையாய காரணங்கள். ஈழத்தில் கல்வித் தரப்படுத்தல் எனும் பெயரில் (1973-78) மொழி வழி ஒடுக்குதலும், நாட்டு இராணுவம், காவல் துறை, அரசு அலுவல் முதலானவற்றில் தமிழரை ஒதுக்குதலும் சரியான நேரடிச் சான்றுகள்.

இந்தியாவிலும், இந்தியை ஒற்றை ஆட்சி மொழி, தேர்வு மொழி, இராணுவ மொழி என்று ஆக்கியதன் மூலம், தமிழ்நாடு, புதுவை வாழ் தமிழர்க்கு ஐ ஏ. எஸ் முதலான ஆட்சி அதிகார வாய்ப்பு, UPSC, NET, CSIR, GATE தேர்வு வாய்ப்பு, இராணுவப் பெரும் பொறுப்பு வாய்ப்பு, தில்லி அமைச்சர், மாநில ஆளுநர், அயலகத் தூதுவர் ஆகும் வாய்ப்பு முதலாயின அருகியே வாய்க்கின்றன

மொழிவழித் தேசியமும், தேசிய ஆட்சியும், அதிகாரமும் அந்தந்த மொழியினத்திற்குக் கிடைக்கும் போதுதான், அம்மொழியைத் தாய்மொழியாக உடைய மக்கள், அரசியல், பொருளியல், சமுதாயத் தளங்களில் முழு வாய்ப்பைப் பெற முடியும்; உயர முடியும் ஐரோப்பிய, வட அமெரிக்க, கனடா, சீனா, சப்பான், வியட்நாம், கொரியா, மலேசியா முதலான நாடுகளில் அவ்வண்ணமே நிகழ்ந்திருக்கிறது.

தமிழர் வேறு மொழி மேதைகள் எனச் சில்வர்டங்க் சீனிவாச சாஸ்திரியையும், சர்.பொன்னம்பல இராமநாதனையும் முன் காட்டுதல் முறையன்று விடுதலை, என்பது ஏதோ ஒரு சிலர் எய்தும் நல்வாய்ப்பை மட்டும் உள்ளடக்கியது அன்று அது கடையனுக்கும் கடைத் தேற்றத்தை வழங்க வேண்டும் அது அந்தந்த மக்களின் மொழி அரியாசனம் ஏறும்போதுதான் நடக்கும். மொழிவழித் தேசியம் நடைமுறையாகாமல், அது நடக்காது, நடக்கவே நடக்காது

தமிழர், பிற பிரிவுகளையும் பேதங்களையும் விட்டுத் 'தமிழைத் தாய்மொழியாக உடைய தமிழர்' என்று ஒன்றுபட்டு நிற்கும்போதே, இது இயலக் கூடியது என்று அறியவே இல்லையா? அறிவிக்கவே இல்லையா? என்பன கேட்கத்தகும் கேள்விகள். தமிழர் ஒரு சிலர் அறிந்திருந்தனர்; அறிவித்து அறிவுறுத்தினர்.

## சங்ககாலத்துத் தமிழ்த் தேசியம்

1. சேர, சோழ, பாண்டியர், தமிழரே எனினும், சேரன் குடியினர், சோழன் குடியினர், பாண்டியன் குடியினர் எனப் பிரிந்தும் பகைத்தும் போரிட்டும் நின்றனர் இப் போக்குத் தவறு என்று சங்க கால ஔவையாரும் (புறம் 367), காரிக்கண்ணனாரும் குறிப்பாகவும் தெளிவாகவும் உணர்த்தினர் (புறம் 58), பொருநர் ஆற்றுப்படை ஆசிரியர் முடத்தாமக் கண்ணியர் (54-55 அடிகள்)

முரசு முழங்குதானை மூவருங் கூடி
அரசவை இருந்த தோற்றம் போல

என்று உவமித்தனர்*.

## இளங்கோவின் தமிழ்த் தேசியம்

2. சங்ககாலப் புலவர்களைக் காட்டிலும், மிக வெளிப்படையாகத் தமிழ்த் தேசியத்தை முன் மொழிந்தவர் இளங்கோ அடிகளாவர். தம் சிலப்பதிகாரப் படைப்பில், சேரர்தம் தலைநகரான வஞ்சி, சோழரின் தலைநகரான புகார், பாண்டியனின் தலைநகரான மதுரை என்ற மூன்றையும் தம் காப்பியக் காண்டங்களின் பெயர்களாக்கினார் கதை நிகழ்ச்சியிலும், கண்ணகி (மாதவி கோவலன்) பிறப்பும் சோழ நாடு என்று காட்டி, கண்ணகி வழக்குரைத்து வென்ற இடம் பாண்டிய நாடு என்று காட்டி, அவள் தெய்வமான விடம் சேரநாடு என்று காட்டினர். வஞ்சிக் காண்டத்தில், வடபுல அரசரான கனகவிசயர், தமிழ் அரசரை இகழ்ந்ததைக் காட்டி, தமிழரசரையா இகழ்ந்தனர் என்று சேரன் செங்குட்டுவன் பொங்கி எழுந்து, வஞ்சினம் மொழிந்ததைக் காட்டி, தமிழ் அரசரை அவமதித்த கனக விசயரைக் கண்ணகிக்கெனக் கல் சுமக்க வைத்து, ஏனைய சோழ, பாண்டியர்க்கும் அந்நிகழ்வைக் காட்டி 'தமிழர்' என்ற உணர்வை முன்னிறுத்தினான். (சிலப்பதிகாரம் காதை 26·158-163, 221; காதை 27.5, 189-190, காதை 28: 153).

---

* விரிவிற்குப் பார்க்க: ப. கிருஷ்ணன், தமிழ் நூல்களில் தமிழ்மொழி தமிழனம் தமிழ்நாடு, பக் 85-91.

3 கி.பி. மூன்று முதல் ஐந்தாம் நூற்றாண்டு வரை, தமிழகமும், ஈழமும் முறையே சைன, பௌத்தர் செல்வாக்கில் இருந்தன இந்நிலையில், வடபுலச் சமயம் தமிழ்ப் பகுதிகளை விழுங்கி இருந்தது இச்சமயத்தில், 'தமிழ், தமிழிசை, தமிழர், வழிபாடு' என்ற மொழி வழி உணர்வைத் தம் பாடல்களாலும், நடைப் பயணங்களாலும், மூட்டியோர் சைவ நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஆவர் ஈழப் பகுதிகளும், சைவ நாயன்மாரால் பாடப்பட்டிருப்பது (நற்றிணை 366, குறுந்தொகை 189, 343, 360, அகநானூறு 88) கருதத் தக்கது

ஈழத்தினின்று தமிழகம் வந்த பௌத்தத் துறவிகளை, மணிவாசகர் வென்றார் என்ற நிகழ்வும் எண்ணத் தக்கது.

முன் எக்காலத்தும் இல்லாத அளவிற்குத் 'தமிழ் தமிழ்' என்று பக்தி இயக்கப் புலவர்களால், தமிழ் மேல் நிறுத்தப்படுவது குறிக்கத் தக்கது.

தமிழ்க் கடவுள் முருகனின், மறு அவதாரமாகத் திருஞானசம்பந்தர் பேசப் பெற்றது பொருளுடைய ஒன்றாகும். சமயக் குரவர் நால்வரில், 'தமிழ், தமிழிசையுடன் மிகுதியாகத் தம்மைச் சார்த்திப் பாடியவருள், சம்பந்தர் முதலாமவராவார். இவர், வட இந்திய ஆரியப் பிராமணப் பரம்பரையினர் அல்லர் 'தமிழ் வழிக் குருக்கள் அந்தணர்' என்பதும் எண்ணத் தக்கது*

---

* அ ச ஞானசமபந்தம், பெரிய புராணம் ஓர் ஆய்வு, தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு

## 4. சித்தர் தமிழ்த் தேசியம்

தமிழ் நாட்டில், கி.மு விலும், கி.பி யிலும், பக்தி இயக்கக் காலத்திலும், வட இந்திய வேதத் தெய்வ வழிபாடு இருந்து வந்தது. அதன் வழி, ஆரியப் பிராமணர்கள், சமஸ்கிருத மொழி, அவர்தம் பழக்க வழக்கங்களும், தமிழகத்துப் பரவி வந்தன இவற்றை முற்றாக எதிர்த்துத் தமிழ் வழியை முன்னிறுத்தப் பாடுபட்டவர் சித்தர்களே. அவருள்ளும், திருமந்திர ஆசிரியர் திருமூலர் குறிப்பிடத்தக்கவர்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

எனப் பல சான்றுகள் உள்ளன. நாயன்மாரால் உயிர்ப்பிக்கப் பெற்ற சைவ சமயம், வட ஆரிய மயமாக்கப்படுதலை எதிர்த்துத்தான் வீர சைவம் தோன்றியிருத்தல் வேண்டும்.

## பேரரசுக் காலமும் தமிழ்த்தேசிய ஒடுக்கமும்

பல்லவர், பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர் ஆகியோர் காலங்களில் தமிழ்த் தேசியம் என்பது போதிய அளவு உணரப்பட வில்லை சேரர் கிட்டத்தட்ட மலையாள மொழி உருவாக்கத்திற்குப் பிறகு, நம்பூதிரிப் பிராமணர் வழியே நடந்து தனியாயினர். பல்லவர், ஆந்திர நாட்டினர்; பிற்காலச் சோழர், சாளுக்கியருடனும், பிற அயலாருடனும் அரசியல் உறவும், அதற்காக மணவுறவும் கொண்டனர்; பிற்காலப் பாண்டியரும் அவ்வாறே ஏறத்தாழத் தமிழகம் முழுவதும், வட ஆரியம் தழுவிய வழிபாடுகளும், பொது மொழியாகச் சமஸ்கிருதமும் இருந்து வந்தன. ஆண்டோர்,

தமிழரே எனினும் ஆண்ட மொழி தமிழன்று; ஆண்ட உணர்வும் தமிழுணர்வு அன்று. சோழர், அரசியல் அளவில் வெற்றி பெற்ற கொற்றவராக இருந்தனர். ஈழத்தில் சோழ மன்னர் பங்கேற்பும், படை எடுப்பும் பல்லவ, பாண்டியர்தம் பங்கேற்பும் படைஎடுப்பும் மொழி வழி நிகழ்ந்தன என்பதைவிட,' மதவழி நிகழ்ந்தன என்பதே பெரிதும் பொருந்துவது. ஈழத்தில் உள்ள 'சைவ மதம்' காக்கப் பெற வேண்டும், பௌத்த மத ஆளுகையில் விட்டுவிடக் கூடாது என்பதே ஓங்கிய உணர்வாக இருந்தது தமிழுணர்வே இல்லை என்பதன்று; அஃது இரண்டாம் நிலையிலேயே இருந்தது

மேற்கண்ட அரசாட்சிக் காலங்களில் தமிழ்க் கல்விக் கூடங்கள் எங்கும் இல்லை யாராலும் நடத்தப்படவும் இல்லை தேசிய உணர்வை ஒழிக்க வேண்டுமென்றால், மொழியுணர்வை ஒழிக்க வேண்டும் மொழியுணர்வை ஒழிக்கவேண்டுமென்றால், மொழிக் கல்வியை ஒழிக்க வேண்டும்; மொழிக் கல்வியை ஒழிக்க வேண்டுமென்றால் அதற்குரிய வாய்ப்பையே அழித்தொழிக்க வேண்டும். அதுவே, தமிழகத்திலும், ஈழத்திலும் நிகழ்ந்தது

வேறு மொழியைக் கற்பிப்பது முழுமூச்சுடன் நடந்தது சமஸ்கிருத மொழிக் கல்வி கற்பிக்க, வேதபாட சாலைகள், தமிழக அரசர்களால் அமைக்கப் பெற்றன; அங்கே இலவயக் கல்வி ஊட்டப் பெற்றது; படிப்போர்க்கு இலவயத் தங்கும் இடம். சமஸ்கிருதம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்க்கு மான்யம் முழுதும் அரசர்களால் வழங்கப் பெற்றது

இவ்வமைப்பால், தமிழ் வழியுணர்விற்குப் பதிலாக, ஆரிய மொழி வழியுணர்வே, தமிழரசர்களால் வளர்க்கப் பெற்றது. எனவே, தமிழுணர்வு, கவிஞர்கள், ஆசிரியர்கள் அளவில் இலைமறை காயாகவே ஒடுங்கி ஒதுங்கி ஒளிந்து வாழ்ந்து வந்தது

இந்நிலை, பதினான்காம் நூற்றாண்டில் தமிழகத்தை வென்று ஆண்ட இசுலாமியர் காலத்து வேறுருவம் எடுத்தது. இசுலாமியர்தம் துருக்கி, இந்துஸ்தானி மொழிகள் அரியாசனம் ஏறின.

இசுலாமியரை விரட்டி விட்டு ஆட்சிக்கு வந்த விசய நகர அரசர் காலத்திலும் நாயக்கர் காலத்திலும், தெலுங்கும், கன்னடமும் சிங்காசனம் ஏறின எனவே, தமிழ் வழித் தேசிய முனைப்பிற்கு வாய்ப்பே இல்லாது ஒழிந்தது. இக்காலக் கட்டத்தில் ஈழ வரலாறு சற்றே இதற்கு விதிவிலக்காகும்

## பகுதி : இரண்டு

தமிழன் எனும் உணர்வும், தமிழ்த் தேசிய உணர்வும் ஏன் வேண்டும்? இவை குறுகிய மனப்பான்மை ஆகாதா? பிரிவினைக்குக் கொண்டு செல்லாதா? பொதுவுடைமைச் சித்தாந்தத்திற்கு எதிரானது அல்லவா?

இவ்வினாக்களுக்கு விடையளிக்க வேண்டியது தமிழ்த் தேசியக் கோட்பாட்டாளர்களின் கடமையாகும். அக்கடமையைச் சுருக்கமாகச் செய்வதே இப்பகுதியின் நோக்கம்.

## தமிழ்த் தேசிய உணர்வு

தமிழ்த் தேசிய உணர்வு என்பது ஓர் அரசியல் சித்தாந்தம். தமிழரிடையே இருபதாம் நூற்றாண்டில் உருவானதாகும். பொதுவாகத் தேசிய உணர்வு என்பதே தொல் பழங்காலத்தும், இடைக்காலத்தும் இல்லாதது. மிகப் பிற்காலத்தே பலவேறு அரசியல், பொருளாதாரச் சமுதாய நெருக்குதல், விழிப்புள்ள மக்கள் இடையே கருவுயிர்த்தது. விழிப்பற்ற தமிழர் போன்ற மக்களிடையே தோன்றாதது; ஊன்றாதது.

தமிழர், சங்ககாலத்துக்கு முன்பே, தமிழ் பேசும் பழங்குடியினராக, தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் மண்ணின் மாந்தராக வாழ்ந்து வந்தனர். ஆனால், அன்னோர், 'தமிழர்' என்ற மொழிவழித் தேசிய இனத்தாராகத் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளாமல், சேரர், சோழர், பாண்டியர், வேளிர், யாழ்ப்பாணத்தார், வன்னிமையார், கண்டியார் என்று குடிவழியும், குலவழியும், நிலவழியுமே தம்மை அடையாளங் கண்டிருந்தனர். இவ்வடையாளமே, தமிழர் எனும் பொது அடையாளத் தினின்று, அவரை, அவர்க்குள்ளாகவே பிரித்து வைத்திருந்தது; பல சமயம் பகைத்தும் வைத்திருந்தது. எனவே அன்னோரிடையே குடிவழிச் சண்டைகள் ஓயாது நிகழ்ந்து வந்தன.

காலப்போக்கில், குடிவழிப் பிரிவுகளுடன் வழிபாட்டுப் பிரிவு சேர்ந்து கொண்டது தமிழரை மொழி வழி ஒன்று சேர விடாமல், மதச் சார்புகள் தடுத்துப் பிரித்தன. வைதிகம்

என்ற பிராமண மதம், சமணம், பௌத்தம் என்ற பிராமண எதிர்ப்பு மதம் ஆகியன வட இந்தியாவினின்றும், இசுலாமும், கிறித்தவமும் பிற நாடுகளினின்றும், தென்னகம், இலங்கை ஆகிய இடங்களில் பரவின இப்பரவுதலால் மூன்று முதன்மையான தீமைகள் விளைந்தன.

1. தமிழர், என மொழித் தேசிய உணர்வினராய்த் தமிழர் விழிப்புறுவது தடுக்கப் பெற்றது.

2. தமிழ் பேசாத ஏனைய இனங்களுடன் , மதத்தின் பேரால், தம்மைக் கரைத்துக் கொண்டு, தம் அடையாளம் இழந்தது

3. தமிழரே, தமக்குள்ளாகவே, தமிழர்க்குள்ளாகவே சைவர், வைணவர், சமணர், பௌத்தர் என்று பிரிந்தும் பிளந்தும் நின்றது இலங்கையில் மட்டும் தமிழர் வைதிகராயும், சிங்களர் பௌத்தராயும் பிரிந்து நின்றனர் என்றாலும் இசுலாமியரான தமிழர், எதிரணியில் நின்றனர். புதுவையிலும், தமிழகத்திலும் கிறித்தவரான தமிழர், தம்மைத் தமிழராய் எண்ணாதவ ராயினர். தமிழரே, 'தமிழர்' என்று ஒன்று கூடாது, இன்ன மதத்தார் எனத் தமக்குள்ளேயே முரணி நின்றனர்.

அடுத்த கட்டத்தில், தமிழர் பெரும்பாலோர் ஏற்ற வட இந்திய வைதிகப் பிராமண மத வரவால், அம்மதத்தின் அடிப்படையான வர்ணாசிரமமும் சாதிகளும் தமிழரை மேலும் கூறு போட்டன. எனவே தமிழர் மேலும் சிறுசிறு பிரிவினராகத் திட்டுத் திட்டாகச் சிதறினர் சாதி, மத அடையாளமே பெரிதாகப் போய்த் 'தமிழ்' அடையாளம், கடலாழத்தில் புதைந்தது

ஐரோப்பியர் வரவிற்குப் பிறகு மேலும் புதிய பிளக்கும் ஆற்றல் அறிமுகப்படுத்தப் பெற்றது. அதுவே கட்சி அரசியல் ஆகும். இக்கட்சி அரசியல், தமிழரைத் தம் மொழி வழி அடையாளத்தைப் புறக்கணித்து, மொழிக்கு அப்பால் பிழையாக அடையாளம் காட்டிற்று

தமிழர்தம், இப்போக்குகளால், தமிழர் இழந்தவை பல.

கட்சி, சாதி, மதம், குலம், குடிவம்சம், நாடு என்ற அடையாளப்படுத்துதல்களால், தமிழர், தமக்குரிய உரிமைகளை இழந்தனர் தம் மொழிக்குரிய உரிமைகளையும் இழந்தனர் இவ்விழப்பு அரசியல், பொருளியல், சமுதாயவியல் என அனைத்து மட்டங்களிலும் முழு வீச்சில் நடைபெற்றது இலங்கையிலும், தமிழர், முற்றாக மொழி அடிப்படையில் ஒடுக்கப்பட்டனர் புதுவையிலும், தமிழகத்திலும், தெலுங்கர், ஆங்கிலர், இந்திக்காரர் மேலாதிக்கம் நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வருகிறது.

இருபதாம் நூற்றாண்டில், தமிழரைச் சாதி அடிப்படையிலும், மத அடிப்படையிலும், கட்சி அடிப்படையிலும், நில அடிப்படையிலும் பிரிக்கும்/பிளக்கும் முயற்சி பெரிய அளவில் நிகழ்ந்து வருகிறது எனவேதான், தமிழரை அவர் நன்மைக்காக மொழியை அடையாளங் காட்டி, சாதி, மத, கட்சி, நிலப் பொய்ப்பிரிவுகளினின்று மீட்டு மேல் நிறுத்த வேண்டியுள்ளது. ஒரு சமுதாயத்தைக் கூட்டுணர்வுடையதாக்குவதில், மொழி, பெரிய இடம் பெற்றுள்ளது என்பது சமூகவியலார் கருத்துரையாகும்.

## தமிழ்த் தேசியம் - குறுகிய மனப்பான்மை

மொழிவழித் தேசிய இனங்கள் தத்தமக்குரிய நாடுகளை அமைத்துக் கொள்ளுதலே இயல்பானது. இதுவே பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்தது வெள்ளை இனம் என்ற பெயராலோ, கிறித்தவ மதம் என்ற பெயராலோ, கிட்டத்தட்ட ஒரே பண்பாடு/நாகரிகம் என்ற பெயராலோ, ஐரோப்பியர் ஒரு நாட்டினராக இல்லை. மொழிவழியேதான், அவர் தனித்தனி நாட்டினராய் உள்ளனர். பெல்சியம், சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் ஒன்றிற்கு மேற்பட்ட மொழியினர் இருப்பினும், அனைத்து மொழியும், மொழியினரும் முற்றும் சம வாய்ப்பினராக உள்ளனர். ஐரோப்பியர், தம் குடியேற்ற நாடுகளைத்தாம், தம் மொழிகளை **ஆதி**க்கப்பீடத்தில் நிறுத்துவதற்காக, தேசிய மொழிகளை **ஒடுக்கி**னர். அதுவும் கூட, விடுதலை ஊழியில் வியட்நாம், கொரியா, பர்மா, மலாய் நாடுகளில் மொழிவழித் தேசியம் மலர்ந்துவிட்டது.

அம்மா மேல் அன்பு செய்வது குறுகிய மனப்பான்மையா? ஆகாது. அம்மா மேல் அன்பு செய்யாமல் இருப்பதுதான் குற்றம்; அம்மாவை விட்டு எதிர் வீட்டு ஆயாவின் மேல்தான் அன்பு செலுத்த வேண்டும் என்பதுதான் குற்றத்திலும் குற்றம் ஆதிக்க வாதிகள், தொடர்ந்து, தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகப் போடும் கூப்பாடே ‘குறுகிய மனப்பான்மை’ என்ற பேச்சாகும்; ஏச்சாகும்.

குறுகிய மனப்பான்மை என்று பொய்யுரைப்போர் முதலில் தம் மொழியை முன்னிறுத்துவதை விட்டு விட்டு வரட்டும்

## தமிழ்த் தேசியம் - பிரிவினை வாதம்

தேர்தலின் பெயரால், மக்களைக் கட்சியாகப் பிரிப்பது, மதமாகப் பிரிப்பது, சாதியாகப் பிரிப்பது பிரிவினையா? மக்களின் மிக நெருக்கமான, முதலாவதான மொழியை அடையாளம் காட்டி உரிமை கோருவது பிரிவினையா? ஆதிக்கவாதிகளின் ஒடுக்குதல் இறுகும்போதுதான், இனத்தேசியம், புத்துயிர்ப்படைகிறது. இலங்கையில், மொழி வழி ஒடுக்குதல் நிகழ்ந்தது எனவே மொழிவழித் தேசியம் கிளர்ந்தது. பாகிஸ்தானில் 1948 - 1970 களில், உருது மொழி வழி ஒடுக்குதல் நிகழ்ந்தது; எனவே வங்கமொழி வழித் தேசியம் கிளர்ந்தது கனடாவில் ஆங்கில ஆதிக்கம் மேலிட மேலிட, குயூபெக்கில் பிரஞ்சு மொழிவழித் தேசியம் கிளர்கிறது. இஃது இயல்பு, தேசிய இன மக்களுக்கு. சுவிட்சர்லாந்தைப் போன்ற அரசக் கூட்டமைப்பு (Federation), சமவுரிமை, சுழற்சி முறையில் அனைத்து மொழியினர்க்கும் தலைமை அமைச்சராகும் வாய்ப்பு முதலானவை அமையுமானால் பிரிவினை என்ற பேச்சே வராது. தேவை இருந்தால்தானே, தேம்பல் இருக்கும்.

## தமிழ்த் தேசியம் - பொதுவுடைமைக் கோட்பாடு

குறிப்பாகத் தமிழகத்திலும், முன்பு இலங்கையிலும் தமிழ்த் தேசிய வேண்டுகை என்பது பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கு எதிரானதாகக் காட்டப்பட்டு,

இருபதுகளிலும், பொதுவுடைமைக் கட்சியினரால், தமிழ்த் தேசியம் புறக்கணிக்கப் பெற்றது. இக்கருதுகையால் நேர்ந்த இழப்பு மிகப் பெரியது.

தமிழ்த் தேசியம் என்பது ஓர் அரசியல் சித்தாந்தம். குறிப்பிட்ட பெரிய மக்களினத் தொகுதி, சாதி, மதம், கட்சி, நிலம் என்ற உளிகளால் சிறுசிறு கூட்டங்களாகப் பிளவுண்டு கிடப்பதைத் தடுக்கவும், சிறு கூட்டம், தன் மொழியினரான இன்னொரு கூட்டத்தைச் சாதி, மத, கட்சி, நில வேற்றுமை களால் விலக்கியும், வெறுத்தும், பகைத்தும் பார்ப்பதைத் தடுக்கவும், மனுசப் பார்வையை இழந்து, சாதி மத கட்சி நில வேற்றுமை காணும் மிருகப் பார்வையை ஒழிக்கவும் உலக மூலை முடுக்கெங்கும் செயற்பட்ட சித்தாந்தமாகும். பொதுவுடைமை நாடுகளுக்கிடையே கூட மொழிவழித் தேசியம் போற்றப்பட்டது; புறக்கணிக்கப்படவில்லை.

சீனத்தில் சீனமொழிதான்; உருசியாவில் உருசிய மொழிதான்; சோவியத் ஒன்றியத்தில் அந்தந்தத் தேசிய மொழி, இனந்தான்; கிழக்கு ஐரோப்பியப் பொதுவுடைமை நாடுகளில் அந்தந்த மொழிதான்! எனவே, பொதுவுடைமை, தேசிய இன/மொழி வழிக்கு எதிரானதில்லை.

அன்றியும், பொதுவுடைமை, அதன் அடிப்படையில் ஒரு பொருளியல் சித்தாந்தமாகும். சமவுடைமைச் சமுதாயம் அதன் இலக்காகும். எனவே, தமிழ்த் தேசியவாதிகள், பொதுவுடைமைச் சிந்தாந்திகளாகவும் இருக்கலாம். இரண்டையும் எதிரணியில் வைத்து எண்ணுவது பெரும் பிழை.

ஆக, தம்மை மொழி வழி இனங்கண்டு ஒன்றுபடுத்துவது உலக மக்களியல்பு இவ்வியல்பைத் தமிழர் பெறாது அண்மைக்காலம் வரை இருந்தனர். தமிழர்தம் பல நூற்றாண்டு வரலாற்றில், ஆங்காங்கே, சிற்சில முணு முணுப்புகள் மட்டும், தமிழ்த் தேசியம் பற்றி நிகழந்துள்ளன. இம்முணுமுணுப்பும் அறிஞர்களின் நினைவூட்டலாக மட்டுமே இருந்தது. இயக்கமாகக் கட்டி வளர்க்கப் பெறவில்லை.

எதிராளிகள்தாம், அவர்க்கு எதிரானவர்களை ஒன்றுபடுத்துவர் அவ்வகையில், தமிழர், வட ஆரியரை எதிர்ப்படும் முகமாகச் சேர சோழ பாண்டிய நில வேற்றுமையை மறந்து ஒன்று பட்டதைக் காரவேலனின் அத்திக் கும்பா கல்வெட்டால் (Epigraphica Indica Vol. XX, V, P.88) அறிகின்றோம். வட ஆரியரை எதிர்த்து, சேர, சோழ, பாண்டியர், சத்திய புத்திரர் (கோசர்) ஆகியோர் சங்கம் அமைத்திருந்தனராம்.

ஆரியப் படைகடந்தது, இமய நெற்றியில், வில், புலி, கயல் பொறித்தது எனும் குறிப்புகள் சங்க இலக்கியத்திலும், சிலம்பிலும் இடம் பெற்றுள்ளன. இமய வரம்பன் என்ற பெயர் நினைவு கூரற்குரியது.

'வட எழுத்து, வடசொல் (?) ஆகியவற்றை விலக்க வேண்டும் எனத் தொல்காப்பியர் நூற்பா அமைத்தார். (தொல், சொல், 401) தமிழ் எழுத்து, தமிழ்ச் சொல் காக்கப் பெற வேண்டும் என்ற மறுபக்கக் குரல் இந்நூற்பாவில் புதைந்து கிடக்கிறது. 'வடவேங்கடம் - தென்குமரி தமிழ்

கூறு நல்லுலகம்' எனத் தொல்.பாயிரம் தமிழை எல்லைப் படுத்துவதும், தமிழ் கூறு "நல்" உலகம் என்று சிறப்பிப்பதும். தொல்காப்பியர்தம் தமிழ்த் தேசிய நெஞ்சைக் காட்டுவனவாகும்.

வேறுபடுத்தும் குடி, மத எல்லை கடந்து, 'தமிழன்' என்ற உணர்வை முதன்முதல் விரிவாக விளக்கிக் காட்டியவர் இளங்கோ அடிகளே தமிழ்மொழி, பாதிக்கப் படும் சேர நாட் டுப் பகுதியினின்று, இளங்கோ, அருந்தமிழர் ஆற்றலை (காதை 26) முன்னிறுத்தியதும், இன்று ஈழத் தமிழர் முன்னிறுத்துவதும் ஒப்பிட்டுக் கவலையுடன் எண்ணுதற்குரியன. வேதனை உள்ள இடத்தில் இருந்துதானே விசும்பல் வரும். இளங்கோவின் வரும்முன் காப்புரையைக் கேளாமல், அன்று சேரத்தை இழந்தோம். நாளை. ..?

'ஆரியன் கண்டாய்; தமிழன் கண்டாய்' என்ற பக்திக் கால நாயன்மார், ஆழ்வார் காலத்து, 'தமிழ், தமிழிசை, தமிழன், தமிழ்க் கடவுள்' எனச் சமயப் பின்னணியில் தமிழ் நினைவுறுத்தப் பெற்றது. ஆனால், இந்நினைவுறுத்து, தமிழரைச் சமண பௌத்தச் சார்பினின்று விலக்கிற்றே தவிர, 'தமிழர்' என மொழியடையாளம் காட்டப் பயன்படவில்லை. வடபுலத்து வைதிகச் சார்பில், தமிழரைச் சிக்க வைத்து, மொழி அடையாளத்தை இழக்க வைத்தது

மந்திபோல் திரிந்து ஆரியத் தொடு
செந்தமிழ்ப் பயன் அறிகிலாதார்
- (திருஞானசம்பந்தர்: 297-10)

தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழல் சேர
- (திருஞானசம்பந்தர். 77-4)

ஆரியம் தமிழோடு இசையானவன்
- (அப்பர். 132-3)

வடமொழியும் தென்மொழியும் மறைகள் நான்கும்
ஆனவன்
- (அப்பர். 301-1)

என, சைன, பௌத்த எதிர்ப்பு வெறியில், சமய குரவர், ஆரியத்தையும் வடமொழியையும் தமிழுடன் சேர்த்துப் போற்றிப் பாடினர்

தமிழை முன்னிறுத்தித் தமிழர் வழி என்று கண்டு காட்டியவரில் சமயகுரவரினும் சித்தர்கள் குறிக்கத் தக்கவர்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

என்பது திருமூலர் குறிக்கோள்

களவியல் எனும் அகப்பொருள் நூலுக்கு உரை எழுதிய நக்கீரர், தமிழை மையமிட்டு முதல், இடை, கடை என முத்தமிழ்ச் சங்க வரலாற்றைப் படைத்தது, தமிழ்த் தேசிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். புத்தர், தர்மம், புத்தம் ஆகிய இரண்டுடன், 'சங்கம்' என்ற கூட்டமைப்பில் மிக மேன்மைப்படுத்தினர் பௌத்த சமயம், வளர்ந்து உலகெங்கும் பரவி நிலை பெற்றதற்குப் பௌத்த சங்கமே பெருங்காரணமாகும். மதத்தைப் பரப்பச் 'சங்கம்' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டதைப் பார்த்தோ, பார்க்காமலோ,

தமிழை முன்னிறுத்த முதற்சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் எனும் அமைப்பை, அதன் செயற்பாட்டை நக்கீரர் எழுதுகிறார் தமிழ்ச் சங்க வழி, கடவுளர், அரசர், புலவர் என முத்திறத்தாரையும் அவர் முன்னிறுத்துகிறார். அவலம் என்னவென்றால், தமிழ்ச் சங்கம், நக்கீரர்க்குப் பின்பு இருபதாம் நூற்றாண்டு பாண்டித்துரைத் தேவர் சங்கம் வரை செயல்படாதது ஆகும் இராசராசன், இராசேந்திரசோழன் காலத்தில் கூடத் தமிழ்ச் சங்கப் புத்துயிர்ப்பு நினைக்கப் பெறவில்லை ஆனால், சமஸ்கிருத வேத பாடசாலைகள் அரசால் இலவயமாக நடத்தப் பெற்றன.

கி.பி. 475இல், வச்சிர நந்தி என்பவர், திரமிள (தமிழ்) சங்கம் அமைத்த செய்தி மட்டும் சமண வரலாற்றில் பேசப் பெறுகிறது

இதற்குப் பின்னர், தமிழ், தமிழிசை, தமிழ்க் கடவுள் முருகன், வள்ளி ஆகியோரைத் தெலுங்கு, கன்னட ஆதிக்கப் பின்னணியில், அருணகிரி, தம் திருப்புகழில் மேல் நிறுத்தப் பாடுகிறார் திருப்புகழ், சமயப் பின்புல வெளிப்பாடு மட்டும் அன்று அயலாதிக்க எதிர்ப்பையும் அஃது உள்ளுறையாகப் பொதிந்து வைத்துள்ளது.

வைணவ சமயத்தில், 'தென்கலை' எனும் பிரிவு, சமய வழியில், தமிழ்ச் சமயங்கள், வட ஆரியத்தை எதிர்த்து அமைந்ததே ஆகும்

சைவ நக்கீரர், தென்கலை வைணவப் பிரிவினர், அருணகிரி ஆகியோர்தம் முயற்சிகள், தமிழர் சமய அளவில்

ஒடுக்கப்பட்டதையும், தமிழர் எதிர்த்ததையும் காட்டுவன. அன்றி, அவர்தம் முயற்சி, ‘தமிழ்த் தேசியம்’ எனும் அரசியல் சித்தாந்த முயற்சியாகப் பரிணமிக்கவில்லை. அஃது இழப்பினும் இழப்பே.

ஆங்கிலேயர், தமிழகத்தை முற்றாகத் தம் ஆட்சிக்குட்படுத்தும்போது, குறிப்பாக 1707இல் இருந்த அரசியல் சூழல் வருமாறு.

1. தமிழகப் பகுதிகள் நாயக்க மன்னரிடத்தும் இசுலாமியரிடத்தும் சிதறி ஆட்சியில் இருந்தன. நாயக்கர் இடையே நிகழ்ந்த மோதல்களால், இசுலாமியரும், மகாராட்டிரரும் தமிழகத்தின் உட்புகுந்தனர்

கி பி 1676 மகாராட்டிர ஏகோசி, தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி அமைத்தார்.

தன் தளபதி சில்பீர் கான் துணையுடன், ஔரங்கசீப், 1698இல், செஞ்சியைப் பிடித்தார் அது முதல் கர்நாடக ஆர்க்காட்டு நவாப்பிற்கு அது தலைநகராயிற்று

கி.பி. 1736இல், மதுரையை ஆண்டு கொண்டிருந்த நாயக்கர் விரட்டப்பட்டு இசுலாமியர் ஆளத் தொடங்கினர். பின் நாளில் கர்நாடக ஒப்பந்தக் காலமான 1801 வரை, மதுரை, இசுலாமியர் கையமே இருந்தது அதன் பின்பே, பிரிட்டிசு வசமாயிற்று

இராமநாதபுரத்தில் சேதுபதியர் ஆட்சி தொடர்ந்தது. நவாப்புகளின் பெருந்துணைவர்களாக அந்நாளில் சேதுபதியினர் விளங்கினர்.

தமிழகப் பகுதிகளை முதன்முதல் தன் கீழ்க் கொண்டு வந்தாண்ட இரும்புவேந்தன் ஔரங்கசீப் தன் 91ஆம் வயதில் 1707 - பிப்ரவரி 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை இறந்து போனார் அவருடன், இந்தியாவையே ஆட்டிப் படைத்த மொகலாய அரசு, சீர்குலையத் தொடங்கியது.

அதே ஆண்டில், தட்சிணப்பிரதேசத்தில் நிஜாம்-உல்-முல்க் ஆளுநர் ஆனான். அன்வருதீன் என்பவன், ஆர்க்காடு நவாப்பாக அமர்த்தப் பெற்றான். அவன் இறப்பிற்குப் பிறகு நிறைய உள்நாட்டுச் சண்டைகள் ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரர்களும், குழம்பிய தமிழர் குட்டையில் நிறைய மீன்பிடித்தனர் 1763இல் பாரீசு ஒப்பந்தத்திற்குப் பிறகும் ஆங்கிலேயரே தமிழக அரசியலில் மேலோங்கி நின்றனர் ஆங்காங்கே சிற்றரசர்களும், நவாப்புகளும், ஜமீன்களும், ராஜாக்களும் ஒருவரை ஒருவர் ஆங்கிலேயர்க்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் காட்டிக் கொடுக்க முனைந்தனர் மருதுபாண்டியர், கட்டபொம்மன், என எழுந்தோரெல்லாம் அழிக்கப் பெற்றனர் மகாராட்டிரரும் ஒடுக்கப்பட்டனர். எஞ்சி வென்று நின்றவர் ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரருமே.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தமிழகப் பெரும் பகுதியை ஒற்றை ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தவர் ஆங்கிலரே! பிரஞ்சுப் புதுவையும்,

காரைக்காலும் தவிர! அவை கூடத் தமிழகத்தின் தமிழ்ப் பகுதிகளாக இருக்கவில்லை. பிரஞ்சுப் பகுதிகளாகவே இருந்தன, எல்லாவற்றிலும்!

பதினெட்டாம் நூற்றாண்டு வரை, ஏன், அதற்குப் பின்பும் கூடத் தமிழர், தம்மைத் தமிழராக அடையாளம் காணவும் இல்லை, வாழவும் இல்லை; ஆளவும் இல்லை.

பல நூறு திட்டுகளாகச் சிதறிக் கிடந்த இந்தியத் துணைக்கண்டத்தை ஆங்கிலேயர், தம் வலுவான மைய ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தனர் (1799) 1858இலிருந்து இங்கிலாந்து அரசின் நேராட்சியில் இந்தியா வந்துற்றது. புதுவையும் பிரஞ்சு ஆட்சியின் நேர்கீழ் வந்துற்றது இலங்கைத் தமிழ், சிங்கள அரசுப் பிரிவுகளும் போர்ச்சுகீசு, ஒல்லாந்தர் எனக் கைமாறி ஆங்கிலேயர் கீழ்க் கொண்டு வரப் பெற்றன தமிழ்நாடு, இலங்கை, புதுவை என்ற மூன்றிடங்களிலும் தமிழ்த் தேசிய உணர்வு என்பது ஐரோப்பியர் காலத்து வெளிப்படவும் இல்லை; வெடிக்கவும் இல்லை.

குறிப்பாகத் தென்னிந்தியாவில் பிராமண எதிர்ப்பு உருவாயிற்று. அரசு வேலை, கல்வி, நீதித் துறை என அனைத்து மட்டத்திலும் பிராமணர் 90%க்கு மேல் இடம் பெற்றதை எதிர்த்துப் பேரியக்கம் தோன்றியது. நீதிக் கட்சி என்ற பெயரிய அவ்வியக்கம் 1920 முதல் 1937 வரை சென்னை மாகாணத்தை ஆளும் வாய்ப்பையும் எய்தியது 1927இல் காஞ்சிக் காங்கிரசு மாநாட்டினின்று வெளியேறிய பெரியார் நீதிக்கட்சியில் சேர்ந்தார், பின்பு சுயமரியாதை

இயக்கத்தையும் அமைத்தார். பார்ப்பனர் அல்லாதார் அனைவரையும் சாதிமத பேதம் மறந்து ஒருங்கிணைப்பதில் பெரியார் வெற்றி கண்டார் (1932க்கு முன்பே).

1920 வாக்கில் இருந்த சென்னை மாகாணம், தமிழ்த் தேசம் அன்று. சென்னை மாகாணத்தில் தென்கேரளமும் கருநாடகமும் ஆந்திரப் பிரதேசப் பகுதியும் அடங்கி இருந்தன. எனவே அச்சூழலில் தொடங்கப்பட்ட நீதிக் கட்சி, பிராமணர்க்கு மாற்றாகத் திராவிடர் என்பதை முன்னிறுத்தியது திராவிடர் என்பதில் தெலுங்கர், மலையாளியர் ஆகியோர் அடங்கி இருந்தனர் எனவே பெரியாரும் .சேலத்தில் பழைய அமைப்பை மாற்றித் 'திராவிடக் கழகம்' என்பதைக் கொண்டு வந்தார். மொழி வழி மாநிலப் பிரிவினைக்குப் பிறகு, 'திராவிட' என்பதைவிடத் 'தமிழர்' என்பதுவே உயிர்ப்பொருளாயிற்று இனவழிப்பட்ட திராவிடத் தேசியம் என்பதற்கு மாற்றாகத் தமிழ்த் தேசியம், காலத்தின் கட்டாயமாயிற்று இதன் வெளிப்பாடே பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று அறிவித்ததாகும்.

தமிழர் வரலாற்றிலேயே இவ்வறிவிப்பு மிக முதன்மை வாய்ந்ததாகும்.

பின் நாளில், தமிழர் தந்தை எனக் குறிக்கப்பெறும் சி.பா ஆதித்தனார், தமிழகத்தையும் ஈழத்தையும் உள்ளடக்கி 'அகண்ட தமிழகம்' என்ற ஒரு கோட்பாட்டை முன்மொழிந்தார். 'நாம் தமிழர்' என்ற கட்சியையும்

அமைத்தார் தம் ஏடான தினத்தந்தி வழித் தம் கொள்கையை விளம்பரப்படுத்தினார்.

1947இல் வெள்ளையரிடமிருந்து விடுதலை பெற்ற தமிழ் நாட்டினர், தமிழ்த் தேசியம் என்ற ஒன்றைக் கண்டுகொள்ளவும் இல்லை; காப்பாற்றிக் கொள்ளவும் இல்லை

1948இல் விடுதலை பெற்ற இலங்கைத் தமிழரும், இதனைப் பெரிய அளவு கண்டு கொள்ளவும் இல்லை; காப்பாற்றிக் கொள்ளவும் இல்லை

1954இல் விடுதலை பெற்ற புதுவைத் தமிழரும் இதனைக் கண்டு கொள்ளவும் இல்லை; காப்பாற்றிக் கொள்ளவும் இல்லை.

பாவேந்தர் பாரதிதாசன் மட்டும், புதுவைத் தமிழகம், விடுதலை என்ற பெயரால், இந்திய ஒன்றியத்துடன் இணைவதை எதிர்த்துக் குரல் எழுப்பியுள்ளார். அவர் குரல் எடுபடவில்லை.

... விடுதலை பெற்ற பிணாங்கு, செல்வர். ஆறுமுகம் சிங்கப்பூர் லிங்வான் லீ போன்றில்லாததாலும், சிங்கைச் சீனர் போல மலேசியத் தமிழர் ஒருங்கிணையாமையாலும் தமிழ்ப் பினாங்குத் தேசம் அமையாது போயிற்று.

தமிழ்நாடு, இலங்கை, புதுவை, மலேசியா ஆகிய நான்கிடங்களையும் தம் தாயகமாகக் கொண்ட தமிழர், தம்

மொழிக்குரிய, தம் மககளுககுரிய பாதுகாபபையும அரசியல் சாசன வழிப் பெறவும் காக்கவும் தவறினர் என்பதே வரலாற்றின் தீாப்பு

இத்தவறுகளால் ஏற்படட பாதிபபு ஏனைய பகுதிகளை விட இலங்கையில் மிகுதியாயிற்று தமிழத் தேசிய உணாவு தானே வெடித்துக கிளமபுவதைச் சிஙகள அரசுகளும், சிங்களப் புததப் பிக்குகளும விரைவு படுததிவிட்டனா தமிழர்தம இருபபு, அறைகூவலுக்குளளாகியிருககிறது உலகமெங்கும் வாழும் தமிழரிடையே பொஙக வேண்டிய தமிழத் தேசிய உணாவே, தமிழரை வருஙகால நிலவுருணடையில் வாழ வைக்கும், வளர வைக்கும்

## காலந்தோறும் தமிழ்மக்களிடம் தமிழ்த் தேசிய உணர்வு தோன்றாமைக்குக் காரணங்கள்

அ பழங்காலம்

1 அயல் மொழி ஆதிக்கம் இன்மை

2 அயல் இன ஆதிக்கம இன்மை

---

As a result of Periyar's efforts, as early as 1932 as many as 1,50,000 people dropped their caste appellations and caset marks Intercaste and widow remarriages which were once a taboo were encouraged and solwly accepted

P. Subramanian,
SociaL History of the Tamils
(1707 - 1947), p 71
D.K. Print World (P) Ltd, New Delhi,
110015, 1996

ஆ சிங்கள வடஆரிய/ஆஙகிலேய/வடஇந்திய ஆட்சிக் காலம

3 அயலமொழி/இன ஆதிக்க வல்லாணமையாா ஏறபடுதததி வரும அச்சம/கோழைததனம்/ அடங்கிப்போதல்

இ இக்காலம

4 அறியாமை

5 பொருள பெருககுப் பண்பாடு (material culture) வயப்பட்ட தன்மை

6 சமரச மனப்பாஙகு

ஈ 1947-48-54

7 தொலைநோககின்மை

8 நம்பி ஏமாறுதல், பிழைககத் தெரியாமை

உ காலநதோறும்

9 குடிகுலம் நாடு சாதி மத வடடார வேற்றுமை களாலும ஒற்றுமைகளாலும் தமிழா என இனவழிப் படட கூட்டுணாவு (Team Spirit) இனமை

## பழந்தமிழ் நாட்டுக் குடிப்பெயர்கள்

சேரா, சோழா, பாண்டியா, குடவர், குட்டுவா, அதியர், உதியர், மழவா, மறவா, இளையர், பூழியர், வில்லோர், கொங்கா, குறவர், பரதவா, கோசா, ஆவியர், ஓவியர், வேளிர், அருவா, அண்டா, இடையா, தொண்டையர், திரையர், களவா, வடுகா ஆகியன குடிவழிப் பெயர்களே

இவை பற்றிய விளக்கத்தினை மொ அ துரையரங்கசாமி தம்முடைய நூலில் தெளிவாக விளககுகிறார்*

தமிழத் தேசிய உணர்வைத் தமிழரிடையே பெருக்க வழிமுறைகள

1 மாநில (State) நாடு (Nation) எல்லை கடந்து 'தமிழ், தமிழா' என்பவற்றை முன்னிறுத்தும் உலகந் தழுவிய செயல்பாடுகளை ஊக்கப்படுததல்

1 1 அறிவியல், அரசியல், பொருளியல், சமுதாயவியல், மொழியியல், முதலானவற்றை ஒட்டிய மாநாடுகள், கருததரங்குகள் ஆண்டு தோறும் உலகம் தழுவ வேறு வேறிடஙகளில் நடத்துதல்

1 2 விளையாட்டுப் போட்டிகள், கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, மொழிபெயர்ப்புப் போடடிகளை உலகளாவிய தமிழரிடையே நடததுதல்

1 3 ஒவ்வொரு துறையிலும் சாதனை புரிந்த தமிழரை அடையாளம் கண்டு பரிசளித்துப் பாராட்டுதல்

2 சாதி, மத, நாடு, கட்சி அடையாளங்களைக கூடிய மட்டும், பொதுச் சிக்கல்கள் முன்னிற்கும் போதாவது விலக்கி வைததல்

எடு ஈழத் தமிழர், காவிரி போன்ற சிக்கல்களில்

2 1. கலப்பு மணங்களை ஊக்கப்படுத்துதல், சாதி வழி ஒதுககீடுகளுககுப் பதிலாகக் கலப்பு மணத் தம்பதியாககும், அவர்தம் குழந்தைகட்கும் (அந்தத் தலைமுறை மட்டும்) கல்வி, வேலை இவற்றில் சலுகை அளித்தல்

---

*மொ.அ துரையரங்கசாமி சங்ககாலச் சிறப்புப் பெயாகள், பக் 237-297

௩. பொங்கல் விழாவை உலகத் தமிழர் விழாவாக அறிவித்தல்; கொண்டாடுதல்

4. தமிழ்ப் பண்பாடு தொடர்பானவற்றைப் பிறப்பு, திருமணம், இறப்புச் சடங்குகளில் பொதுமையாக்குதல்.

5. எந்த மத, சாதி, நாடு எனினும், குழந்தைகட்குத் தமிழ்ப் பெயரை வைத்தல்; குறைந்த அளவு முன்னொட்டாகவோ பின்னொட்டாகவோ தமிழ்ப் பெயரைச் சூட்டுதல்

எ டு · சேவியர் தனிநாயகம்

5.1. சீக்கியர்கள் தம் பெயருக்குப் பின்னே ஒவ்வொருவரும் சிங்(கம்) எனப் பெயரிட்டுக் கொண்டது போல, தமிழ் ஆணும் பெண்ணும் 'தமிழன்' அல்லது 'புலி' என்பது போன்ற பின் அடையை வைத்துக் கொள்ளத் தொடங்குதல்

எ டு · அறவாணப்புலி, அருணாசலத் தமிழன்

6. இந்நோக்கில் ஏடு ஒன்றைத் தமிழிலும், ஆங்கிலத்திலும், பிரஞ்சிலும் நடத்துதல்.

7. தமிழர்க்கென ஒரு தனி நாட்டைப் பெறுதல்

7.1 தனிநாடு கிடைக்கும் வரை, இந்து மாக்கடல், அல்லது வங்கக் கடலில் உள்ள ஒரு தீவையாவது தமிழர் விலைக்கு வாங்கித் தமிழர் பொதுவிடமாகப் போற்றுதல்

8. தமிழர்க்கு உதவும் வகையில், தமிழர் வங்கி, தமிழர் தொழிலுக்கு உதவும் நிதி நிறுவனம் அமைத்தல்.

9. திருக்குறளை உலகத் தமிழருடைய பொது மறையாக ஏற்றுக் கொள்ளல்; அதற்கேற்பப் பரப்புதல்.

10. உலகின் எந்த மூலைமுடுக்கிலும் தமிழர் வாழினும், வீட்டில் பேசும் மொழியாகத் தமிழையே கொள்ளுதல்.

11. தமிழ்க் குடும்பம் எந்த அயன்மொழிச் சூழலில் இருப்பினும், பன்னிரண்டு அகவைக்குள் அல்லது ஐந்தாம் வகுப்பு முடித்தற்குள்ளாகக் குழந்தைகளுக்குத் தமிழில் எழுதவும் பேசவும் படிக்கவும் பயிற்சி அளித்தல்

## தமிழின் ஆதிப்பொது எதிரிகள்

தொடக்கக் காலத்துத் தமிழர்க்குப் பொது எதிரிகள் வட பகுதியினின்று வந்துள்ளனர் மொழியும், வடக்கே இருந்து வந்துற்றது வடமொழி ஆதிக்கத்தை அறிஞர் எதிர்த்தனர். (தொல்காப்பியம்: வடஎழுத்து ஒரீஇ). அரசியல் ஆதிக்கத்தை அக்கால மன்னர் எதிர்த்தனர். சான்றுகள் வருமாறு :

வடபுல மன்னர் வாட - புற. 52:5
துஞ்சாக் கண்ண வடப்புலத்தரசே - புறம். 31:17
வடவர் உட்க - பதிற். பதிகம் 5
வடவர் வாட - பட்டினப்பாலை 276
ஆரியர் அலற - அகம் 396· 16-17
ஆரியர் படைகள் உடைக - அகம். 336: 22
ஆரியர் வணக்கி - பதிற் பதிகம் 2

வடஆரியர் படைகடந்து
தென்தமிழ்நாடு ஒருங்கு காண
- சிலம்பு. மதுரை: நூற்: 14-15

வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாம்
தென்தமிழ் நன்னாட்டுச் செழுவில் கயல்புலி

மண்டலை ஏற்ற வரைக

- சிலம்பு; 25. 170-172

## தமிழிலக்கியங்களில் 'தமிழன்' எனும் கருதுகோள்

தூதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்

- பரிபாடல் திரட்டு 7.

தமிழ் கெழு மூவர் - அகம். 31:14

தண்டமிழ்க் கிழவர் - புறம் 35·3

பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவின் கனகனும் விசயனும்
விருந்தினர் மன்னவர் தம்மொடுங் கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனக்
கூற்றம் கொண்டு இச் சேனை செல்வது
நூற்றுவர் கன்னர்க்குச் சாற்று

- சிலம்பு 26 158 - 163

செந்தமிழோர்கள் பரவி ஏற்றும் சீர்கொள்

- திருஞானசம்பந்தர் 6 - 9

இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது

- நாலாயிர திவ்வியபிரபந்தம் 2255

தென்தமிழன் வடபுலக் கோன்
சோழன் சேர்ந்த திருநறையூர்

- நாலாயிர திவ்வியபிரபந்தம். 1502

தமிழர் பெருமான் (முத்தொள்ளாயிரம் 32, 95)

மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான்

- நீதிநெறி விளக்கம் 6.

# VI

## விழித்திடு வெடித்திடு வென்றிடு

ஐரோப்பியக் காலனி வெள்ளைக்காரரை விட அவருக்குப் பின் வந்த அண்டை வீட்டுக் கொள்ளைக்காரனே, மிகக் கடுமையாகவும் கொடுமையாகவும் உள்ளான். 1947, 1948க்குப் பிற்பட்ட, இந்திய இலங்கை வரலாறுகள் இதனை மெய்ப்பிக்கின்றன. பிரஞ்சில் ஒரு கதை.

அம்மா ஆடு, குட்டியைத் தொழுவத்தில் 'கவனமாக இரு' என்று அறிவுறுத்தி விட்டு, தொலைவில் உள்ள புல்வெளிக்கு மேயச் சென்றது அப்போது, ஓநாய் ஒன்று, ஆட்டுக்குட்டி அடைக்கப்பட்டிருந்த வேலிக்குப் பக்கம் வந்தது

குட்டியை அன்புமீதூர ஓநாய் விசாரித்தது ஓடை எங்கே உள்ளது என்று கேட்டது பின்னர், புல்வெளி எங்கே இருக்கிறது என்று வினவியது. புல்வெளி எங்கே என வினவிய ஓநாயிடம், ஆட்டுக்குட்டி, நீ புல் தின்பாயா என்று கேட்டது 'ஓ! நான் புல்தான் தின்பேன்; சுத்த சைவம்' என்றது ஓநாய் உண்மையாகவா? ஆமாம் உண்மையாக! அப்போ என் கூட வந்து, புல்வெளியைக் காட்டு, இருவரும் புல் தின்றுவிட்டு, ஓடையில் தண்ணீர் குடித்து, அதன் கரையிலேயே சாலியாகக் களைப்பாறுவோம் என்றது.

ஆட்டுக்குட்டி, வேலிமேல் தாண்டிப் பாய்ந்து ஓநாயிடம் சென்றது

கொஞ்ச நேரத்தில் குட்டியின் 'மேமே' என்ற அழுகுரல், சற்றுப்பின்பு, அந்தக் குரலும் அடங்கிப் போயிற்று

இலங்கையிலும், இந்தியாவிலும், தமிழரின் பரிதாப நிலை, தமிழின் பரிதாப நிலை, ஓநாயை நம்பி ஓடிய ஆட்டுக்குட்டியின் கதையாகவே முடிந்தது. 1947இல் இந்தியத் தமிழ்நாட்டுத் தமிழரும், 1948இல் இலங்கைத் தமிழரும், 1954இல் புதுவைத் தமிழரும் தம் மொழி நலத்தையும், தமிழர் இன நலத்தையும் அரசியல் சாசனப்படி, காக்கத் தவறினர் தாயகத் தமிழரே, தமிழையும், தமிழரையும் காப்பாற்றத் தவறியமையால், 'சூழ்வினை யாவும் தமிழரைச் சூழ்ந்தன'

1950களில் உலகில், பல இனங்கள் விடுதலை பெற்றன விடுதலை பெற்ற இனங்கள், அனைத்தும் 15ஆம் நூற்றாண்டுக்குச் சற்று முந்தியும் பிந்தியும் ஐரோப்பிய நாடுகளால் அடிமைப்படுத்தப்பட்டவை தமிழர் வாழ்ந்த தமிழ்நாடு, புதுவை, இலங்கை ஆகியனவும், 15ஆம் நூற்றாண்டில் அடிமை ஆனவை இந்நாடுகள் விடுதலை பெற்றுச் சற்றேற ஐம்பது ஆண்டுகள் ஆகியும், முழுமையாக மொழி, அரசியல், பொருளாதார, சமுதாயம், பண்பாட்டு விடுதலை பெறாமல் அல்லல் படுகின்றன. ஏன் என்பதும் எப்படி நீக்குவது என்பதும் ஆராயத் தக்கன

1. பதினைந்தாம் நூற்றாண்டில் அடிமைப்பட்டதற்கான காரணங்கள்

1.1. தமிழர், கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதலாகவே 1200, ஆண்டுகளாக மாறி மாறி வேற்று மொழி அரசர் தம் ஆளுகையில் இருந்தமை

1.2. கல்வி அறிவுடையவராக ஆணும் பெண்ணும் இல்லாமை

1.3. ஆண் பெண் வேறுபாடு; பெண்ணைக் கீழ்ப்படுத்தி இருந்தமை

1.4. தமிழை மையப்படுத்தித் தமிழர், தமிழரசர் ஒன்றுபட்டு ஒரு கூட்டாற்றவாக இல்லாமை.

1.5. சாதி, மதம், வட்டார நாட்டெல்லை முதலாயவற்றை முன்னிறுத்தித் தமிழர், தம்மையே வேறுபடுத்திக் கொண்டமை

1.6. சேர சோழ பாண்டிய யாழ்ப்பாணம் கண்டி எனத் தமிழரே, ஓரரசாக இல்லாமல், பல அரசுகளாக இருந்தமை.

1.7. அயலவரை ஐயுறவு இல்லாமல் ஏற்றமை; அவரை உயர்ந்தவராகப் போற்றியமை; விருந்தோம்பியமை

1.8. ஆண்ட வேந்தர்களின் ஆடம்பரப் பற்று; தொலைநோக்கின்மை.

1.9. பகைவரை எதிர்கொள்ளும் கருவிகள், வாகனங்கள் செய்யாமை

1.10. அரசை எதிர்த்து மக்கள் சேர்ந்து இயக்கம் நடத்துதலுக்குப் பழக்கமே இல்லாமை

1.11. அரச ஆட்சியில் பல தலைமுறைகளாகப் பங்கே இல்லாமை. அரசை/அரசரை மாற்றுவதில் பங்களிப்பே இல்லாத ஆட்சிமுறை பங்களிப்பைக் கேட்காத மக்கள் முறை.

1.12. அரசன் மகன் அரசன் என்பதில் நம்பிக்கை. அந்த அமைப்பில் (Process) மக்கட் பங்கே இன்மை. எனவே அரசனைத் தோற்கடித்து/அல்லது கொன்று வேறோர் அரசர் முடியேற்றல் இயல்பாகி விட்டமையால், ஐரோப்பியர் பொறுப்பேற்றபோது, அதனைப் பெரிதாக மக்கள் பொருட்படுத்தவில்லை.

2. 1950களில் விடுதலை பெற்றபோது, ஏமாந்தமை:

2.1. அரசியல் சாசனத்தில், தமிழ் மொழிப்பாதுகாப்பைப் பெறத் தவறியமை

2.2. தமிழ் பேசுநர்க்குரிமை தரும் சாசனத்தை அமைத்துக் கௌ்ளாமை

2.3. ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளின் ஆதிக்கத்திலும், பெரும்பான்மை மொழி ஆட்சி ஆதிக்கத்திலும் எளிதாக மாட்டிக் கொண்டமை.

2.4. பொதுவாக ஐரோப்பாவிலும், ஐரோப்பாவின் குடியிருப்பாக இல்லாத பிற நாடுகளிலும் மொழி வழி நாடுகளே அமைந்துள்ளன இதனை அறியாது அல்லது அடைய/அமைக்க இயலாது இருந்தமை.

2.5. தமிழர், தம் தாயகத்தில் தம் நிலை மட்டும் அன்றி, மற்ற நாடுகளில், ஐரோப்பியரால் குடியேற்றப்பட்ட தமிழர்க்குரிய உரிமைகளுக்கான உதவிகளைச் செய்யாமை. உரிய உரிமைகளைப் பெறாமை.

**தலைமைக் காரணங்கள்**

1. 90% மக்களிடம் கல்வி அறிவு இன்மை; எனவே நல்லது கெட்டது தெரியாமை
2 தலைவர்கட்கும், ஓரளவு அறிவிருந்தவர்க்கும் தொலைநோக்கு இன்மை
3. அரசியல்வாதிகளின் துரோகம்/நம்பிக்கை மோசடி
4. கோழைத்தனம், போராட்டக்குணம் இல்லாமை

3. அடிமையாய் வாழ்ந்தமையால் வளர்ந்துவிட்ட தாழ்வுமனப்பான்மை, முழு விடுதலை இன்மையால் ஏற்பட்ட தமிழுக்கும், தமிழர்க்கும் எதிர்காலம் இன்மை

உலகத் தமிழ்ச் சமுதாயத்தின் அவலங்களைப் பின் வருமாறு பட்டியலிடலாம்.

1. ஏறக்குறைய எட்டுக்கோடிக்கு மேல் தமிழர் தொகை இருந்தும், தமக்கெனத் தமிழர்க்கு ஒரு நாடின்மை
2. 1948 பிப் 4இல் விடுதலை பெற்ற இலங்கைத் தமிழர் தொடர்ந்து ஒடுக்கப் பட்டதும், 1983 முதல் தாயகம் விட்டுப் பல நாடுகளுக்குத் துரத்தப் பட்டதும், ஈழத் தாயத்திலேயே இன்னல் படுவதும்.
3. தாயக நாடுகளிலும் அயலக நாடுகளிலும் வாழும் தமிழர், குறிப்பாக இளைஞர், தம் மொழி, பண்பாடு, நாகரிகம் முதலாயவற்றை இழந்து வருதல். குறிப்பாகத் தாயகத்திற்கு வெளியே இவ்விழப்புக் கூடுதலாகப் பரவி வருதல்.
4. மொழி, பண்பாட்டு, நாகரிக இழப்பை மீட்கவும், மீட்டு வளர்க்கவும் உலகத் தமிழர் அனைவரையும் தழுவிய வலுவான அமைப்பு இல்லாதிருத்தல்.

மேலே கண்ட சிக்கல்களை எவ்வாறு எப்போது எப்படித் தீர்ப்பது என்பது நமக்கு முன்புள்ள மிகப்பெரிய சிக்கலாகும். அரசியல் சார்ந்து அமையும் தீர்வே நிலையானது; வலுவானது இத்தகு தீர்வு, இந்தியத் தமிழகம், புதுவையிலிருந்தும், ஈழத் தமிழகத்திலிருந்தும் உருவாதல் வேண்டும் தமிழ்நாடும், புதுவையும் இந்திய மைய அரசின் கட் டுப்பாட்டிலுள்ள மாநிலங்களே, நாடுகள் (Nations) அல்ல எனவே, தனித்தமிழ்நாடு இந்தியாவில் அமையும் சாத்தியக் கூறு இல்லை. எனினும், சிக்கல்கள், 2, 3, 4 ஆகியவற்றைத் தீர்ப்பதில் முனைப்புக் காட்ட முடியும்; முனைப்புக் காட்ட வேண்டும்

'தனித் தமிழ்நாடு' என்ற முறையான விழைவை, நாம் தனி ஈழம் அமைப்பதன் மூலமே அடைய முடியும்; அடைதல் வேண்டும். இக் குறிக்கோளை அடைய உலகம் முழுதும் வாழும் தமிழரை அணி திரட்ட வேண்டும் 'தனி மாநில அரசு' என அமைத்து வாழும், தமிழ்நாடு, புதுவை எனும் இந்திய மாநிலங்களின் அக்கறை பங்கேற்பு இன்னும் மிகுதியாதல் வேண்டும்

தமிழர், அமைச்சர்களாக அங்கம் பெற்றுள்ள மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் பங்களிப்பு இவ்வகையில் மிகமிகக்குறைவாக அல்லது இல்லாமலே உள்ளது இதனை மாற்ற வழிவகை காண வேண்டும்.

உலக நாடுகளின் தலைவிதியைத் தீர்மானிக்கும் வல்லரசுகளாக அமெரிக்கா, கனடா, மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஆத்திரேலியா, ஆகியன உள்ளன இந்நாடுகளில்

எல்லாம், இந்திய, ஈழத் தமிழர்கள், கணிசமாக உள்ளனர். தமிழர்க்குச் சார்பான, குறிப்பாகத் தனித் தமிழீழத்திற்கும் சார்பான நிலைமை மேற்கண்ட நாடுகள் மேற்கொள்ள ஆங்காங்கு வாழும் தமிழர் முயன்றாக வேண்டும்.

மானுடத்தின் முறையான உரிமைகளைக் காப்பதற்கென, உண்டான அமைப்பே, ஐ நா. ஆனால், அவ்வமைப்பு, தமிழீழத் தமிழரைப் பொறுத்து மேற்கொண்டுள்ள ஆழ் உறக்கத்தைப் போக்கி, உலகத் தமிழறிஞர் விழிப்பூட்ட வேண்டும்

இவ்வகையில், அமெரிக்காவிலும், கனடாவிலும் வாழும் தமிழர்க்குக் கூடுதல் பொறுப்பு உள்ளது. அவர்க்குப் பல்லாற்றானும் உதவ வேண்டியது ஏனைய பகுதி வாழ் தமிழர்களின் தலையாய கடமையாகும்.

தாயகத்திற்கு அப்பால் வாழும் தமிழர்க்கு மிகுதியான பொறுப்பும் சுமையும் உள்ளன ஏனென்றால் தாயகத் தமிழரை விடச் செல்வமும், கல்வியும் அயற்புலம் வாழ் தமிழரிடமே அதிகமாக உள்ளன. எனவே இத்தருணத்தில், 2000 ஆண்டுகள் பிறப்பகம் விட்டு மண்ணின் பல பகுதிகளில் சிதறி அல்லல்பட்ட யூதரே தமிழர்க்கு முன் எடுத்துக்காட்டாக இருத்தல் வேண்டும் 1948இல், தம் இசுரேலை நிறுவும் வரை, தம் மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைப் பறவைத் தன் குஞ்சைச் சிறகு அணைப்பில் காத்தது போலக் காத்தனர் அப்படியே அயலகத் தமிழரும் தமிழுணர்வையும் பண்பாட்டையும் காப்பாற்றுதல் வேண்டும்.

ஈசாப்பின் புகழ் பெற்ற கதைகளுள் ஒன்று: அன்னமும் காக்கையும்

காக்கை ஒன்று வானத்தில் பறந்து கொண்டிருந்தது: கீழே கண் தாழ்த்திப் பார்த்தபோது அங்கே ஒரு காட்சி :

அழகிய குளம் ஒன்று; தண்ணீர், பளிச்சென்று இருந்தது வெள்ளை நிற அன்னப் பறவை அங்கும், இங்குமாக அழகாக நீந்திக் கொண்டிருந்தது.

அன்னத்தின் வெள்ளைநிறம், காகத்தின் கண்களைக் கொள்ளை கொண்டது அன்னம், இவ்வளவு வெள்ளையாக இருப்பதற்குக் காரணம், அது நீரில் அடிக்கடி குளித்து நீந்திக் கொண்டிருப்பதுதான் என்று எண்ணியது. கீழ்நோக்கி வரும் அம்பு போல, வானிலிருந்து கீழே பாய்ந்து வந்தது. குளத்தில், தன் சிறகுகளை அடித்துக் குளித்தது இப்படியே பல நாட்கள் குளித்தது. காகம், தன் உடம்பைத் திரும்பத் திரும்ப அடிக்கடி உற்றுப் பார்த்துக் கொண்டது. சிறகு, அன்னத்தைப் போல, வெள்ளையாகி உள்ளதா? என்றும் இன்னும் பார்த்துக் கொண்டே இருக்கிறது. பாவம்.

ஈழம், தமிழ்நாடு, புதுவை ஆகிய தாயகப் பகுதிகளை விட்டுப் பலவேறு காரணங்களால் வெளிநாடு போந்த தமிழர் மிகப் பலரிடம், வெள்ளை நிறம், வெள்ளை மொழி, வெள்ளைப் பண்பாடு, வெள்ளை நாகரிகம் ஆகியவற்றின் மேல், ஆகா மோகம் மேவியுள்ளது. சுயத்தை இழப்பது பலவீனத்தின் அறிகுறி. சுயத்தை மேம்படுத்துவது பலத்தின் அறிகுறி சப்பானியரும் யூதரும் சாதனைச் சரித்திரம் படைத்த பலவான்கள்! காரணம்: சுயத்தன்மைதான்.

## 2

# தமிழ் மதவியல்

"பழைய நாகரிக மக்களுள் மதத்திற்கு அதிமுதன்மை தாராது இருந்தோர் கிரேக்கர் மட்டுமே. கிரேக்கர் கடவுள் வழிபாட்டினர் என்றாலும் மதத்திற்கும் கடவுளர்க்கும் கட்டுப்படாது வாழ்ந்தனர். முறையான கோயிலோ தொழுகையோ அவர்களிடம் இல்லை. இறந்தோர் உயிர்த்தெழுவர் என்ற நம்பிக்கையும் அவர்களிடம் இல்லை. மதச்சார்பற்ற அரசுக் கோட்பாடு பிற்காலத்து ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் ஏற்பட அவர்தம் முன்னோராகிய கிரேக்கரின் தத்துவம் பெரும்காரணமாக இருந்தது"

* மதம்
* மன்னன்
* மக்கள்

# I

# மொழி - கடவுள் - மனிதன்

மொழி கடவுளின் படைப்பு என்பது சமயவாதிகளின் கருத்து அது மானுடத்தின் படைப்பு என்பது அறிவியலின் கருத்து பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொன்மை மாந்தர் மொழி எதுவும் இல்லாமலே வாழ்ந்திருந்தனர் வாயால் எழுப்பப்பெறும் ஒலிக் குறியீடுகளும், கண், கை, உடல் அசைவால் எழுப்பப்பெறும் சைகைகளுமே ஒரு காலத்தில் மாந்தரிடையே செய்திப் பரிமாற்றங்களை நிகழ்த்தி வந்தன மனிதன் கூட்டமாகவோ, கூட்டாகவோ இல்லாமல் தனியாக இருந்த காலத்தில் மேற்கண்ட குறியீடுகளுக்குத் தேவை இல்லாமல் இருந்தது. மனிதன் இயல்பிலேயே ஒரு விலங்கு; சமூக விலங்கு. குழுவாக வாழ்தலே அவனது தொடக்கக்கால இயல்பு குழுவாகப் பொது . வேலைகளில் ஈடுபட்ட பொழுது மனிதனின் ஒலிக் குறியீடுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட இன்னின்ன ஒலிக்கு இன்னின்ன பொருள் என்று வரன்முறைப்படுத்தப்பட்ட மொழியாக உருவாகி இருத்தல் வேண்டும் அவன் கூட்டமாக வேலையில் ஈடுபட்ட நிலையே அவனுக்குப் பேசும் கலையைக் கற்றுத் தந்தது பேசுவதற்கு அவன் கற்றுக் கொண்டபொழுதே அவன் சிந்திக்கவும் கற்றுக் கொண்டான்.

முன்பு வாயால் ஒலிக் குறியீட்டையோ, கைகளால் சைகைக் குறியீட்டையோ பயன்படுத்திய பொழுது செவிகள் கேட்டுப் புரிந்து கொண்டன; கண்கள் பார்த்துப் புரிந்து கொண்டன.

செய்தி தெரிவிப்பானின் முழுக் கருத்தைச் செய்தி வாங்குபவன் முழுமையாக வாங்கிக் கொண்டதாக இப்புரிந்து கொள்ளுதலைக் கருத இயலாது சிற்சில சமயம் பிழையாகக் கூடப் புரிந்து கொண்டிருத்தல் கூடும் ஆதி காலத்தில் வேறுவேறு மனிதக் குழுக்கள் நட்பு நிமித்தமாகச் சிந்திக்க நேர்ந்தபோதோ, உணவு, உடைமை, உறைவிட நிமித்தம் பூசல் நிகழ்த்தியபோதோ, செய்திப் பரிமாற்றச் சிக்கல்களால் புரிந்து கொள்ளாமை, மிகுந்த தொல்லைகளை அளித்திருத்தல் கூடும் இருளிலும், இரவிலும் சைகை மொழி, பயனற்றுப் போயிற்று; ஒலி கேட்க முடியாத தொலைவில் இருக்கும்பொழுது வாயால் அல்லது உடல் அங்கங்களால் எழுப்பும் ஒலிக் குறியீடுகளும் செவிம டுக்க இயலா நிலையில் பயனற்றுப் போயின மனிதனின் குழு வாழ்வும், தேவைகளும், அச்சங்களும், அவலங்களும், மகிழ்ச்சித் துள்ளல்களும் மிகுதி ஆக, ஆக, ஒலி ஒழுங்கு - அதாவது மொழித் தேவை மிக இன்றியமையாததாகி யிருத்தல் வேண்டும். இச்சூழலின் நிர்ப்பந்தத்திலேயே மொழி, தோன்றியிருத்தல் வேண்டும். கருத்துப் பரிமாற்றத்தில் இன்றும் இடம் பெற்றுள்ள உடல் (அசைவு) மொழிக் குறியீடுகளும், 'ஆ! ஊ! அய்யோ, அம்மா' என்ற ஒலிக் குறியீடுகளும் பழைய சைகை, சத்தப் பரிமாற்றங்களின் எச்சங்களே. ஆக, மொழி என்பது, கடவுளின் படைப்பும் அன்று, தனியாள் ஒருவனின்

கண்டுபிடிப்பும் அன்று. மனிதன், கூட்டாக, சமுதாயமாக இயங்கத் தொடங்கிய போது, உழைப்புப் பகிர்வாலும், உடன்பாட்டாலும் உருவான ஓர் ஒலி ஒழுங்கு ஆகும். எனவே, மொழி, ஒரு சமூகச் செயற்பாடு (Social Function) ஆகும்.

மானுட விலங்கில் முதல் பெரும் மாற்றமும், முன்னேற்றமும் அதனுடைய முன்னங் கால்கள் இரண்டும் பல்வேறு காரணங்களால் கைகள் ஆயினமை ஆகும். அதன் அடுத்த பெரும் மாற்றமும், முன்னேற்றமும் கைகள் கருவியைப் பயன்படுத்தத் தொடங்கியமை ஆகும் அதன் அடுத்த பெரும் மாற்றமும் முன்னேற்றமும் கருத்தைப் பரிமாறப் பேச்சு மொழியைக் கண்டு பிடித்தமையாகும். அதன் அடுத்த மாற்றமும் முன்னேற்றமும் சிந்திக்கத் தொடங்கியமை ஆகும். பேச்சு மொழியும் சிந்தித்தலும் கிட்டத் தட்ட ஒரே சமயத்தில் ஒன்றை ஒன்று சார்ந்து நிகழ்ந்திருத்தல் வேண்டும் புலி எனும் சொல்லைக் கேட்ட போதும் சைகையைப் பார்த்த போதும் அவன் சிந்தித்தான் புலியைக் கண்ணால் பார்க்காத போதே அதன் உறுமல், சீற்றம் மிக்க உருவம், கொலைச் செயல் ஆகியன பற்றி அவன் சிந்தித்தான். மிக மிக அவன் விரும்புகின்ற உணவுப் பண்டம் ஒன்றின் பெயரை ஒலியளவில் கேட்ட அளவிலேயே அவன் கண்முன் அப்பண்டத்தின் சூடும், சுவையும் விரியத் தொடங்கின: அவன் நாக்கில் எச்சில் ஊறத் தொடங்கியது காலப்போக்கில் கண்ணுக்குப் புலப்படும் பருப்பொருள் மட்டுமன்றி அன்பு, பாசம் முதலான கருத்துப் பொருள்களையும்-அருவப் பொருள்களையும் மொழி விளக்கும் ஆற்றலைப் பெற்றது.

மானுட இன வரலாற்றில் இது மாபெரும் சாதனை ஆகும். ஆக, ஒரு மொழி என்பது சமுதாயக் கூட்டு வாழ்வில் உருவம் கொள்ளுகிறது தனி மானுட அமைப்பில் நினைப்பாகவும், சிந்தனையாகவும் அது பரிமாணம் கொள்ளுகிறது இவ்விரண்டிற்கும் அடிப்படை தேவையும் அதனை ஒட்டிய உழைப்புமே ஆகும்.

மானுடம் மானுட சமுதாயமாகவே தொடர்ந்து உய்ந்திட வேண்டுமானால் சமூக உறவுகளுக்கான மனிதப் பண்புகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தலைமுறையிலும் கற்பிக்கப்பட்டாக வேண்டும் குடும்பத்திலும், குழுவிலும், ஊரிலும், பொது இடத்திலும் மனிதன் எவ்வெவ்வாறு நடத்தல் வேண்டும் என்ற பயிற்றுவித்தலையும், நடந்து காட்டுதலையும் பெற்றோரும் சமுதாய உறுப்பினரும் கடைப்பிடித்தே ஆக வேண்டும். இப்பண்பாட்டுப் பாடத்தை நடத்துவது யாராக இருந்தாலும் அவருக்கு உதவுவது மொழியே ஆகும். எனவே, சமுதாயத்தின் அடிக்கட்டுமானம் மொழி என்று (The Foundation of society) அறிஞர்களால் கருதப் பெறுகின்றது.

மனித வாழ்வில் மொழி என்பது பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக அறியப்பட்ட ஒன்றாகும் பெற்றோரைப் போலவே அணுக்கமான ஒன்றாகும் அம்மாவையும், அப்பாவையும் உடன் பிறந்தோரையும் கூட அவன் காலப் போக்கில் மறந்து விடுதல் கூடும்; பிரிந்து விடுதல் கூடும். இழந்து விடுதலும் கூடும். ஆனால், குழந்தைப் பருவத்தில் இருந்து புழங்கிய மொழியை அவன் வழித்தெடுத்து முற்றுமாக மறந்து விடவும் முடியாது; பிரிந்து விடவும்

முடியாது; இழந்து விடவும் முடியாது. எனவேதான், தாய்க்கு மிக அடுத்ததான அணுக்கம் மிக்க நெருக்கம் மொழிக்கு இருப்பதால் ஒருவனுடைய பேச்சு மொழி, தாய்மொழி எனக் குறிக்கப்படுகிறது தாய்மொழியைக் கருவி என்பது தவறு. அது அதற்கு மேற்பட்ட ஒன்று. அவனிடமிருந்து பிரிய முடியாத ஒன்று; பிரிக்க முடியாத ஒன்று.

மொழிதான் மக்கள் கூட்டத்தை வரையறை செய்கிறது; எல்லைப் படுத்துகிறது; ஒன்றாக்குகிறது; உறவாக்குகிறது. எனவேதான் சமூகவியல் அறிஞர் எமில் துர்க்கேம், மொழியைச் சமுதாயக் கட்டொருமைப் பாட்டை வளர்ப்பதில் ஒன்றாக எடுத்துக் காட்டினார்.

இப்பின்னணியை நோக்கும்போது - மொழி கூட்டுவிக்கும் ஓர் ஆற்றல்; ஒரு சக்தி என்பது அறியப்பெறும். தமிழ் மொழிக்கும் இத்தகு ஆற்றல், சக்தி இருந்ததை - இருப்பதைத் தமிழர்கள் அறியத் தவறினார்கள்; தவறுகிறார்கள்.

தமிழர் வரலாற்றில் அரசுகள் 'உருவான தொடக்க காலத்தில் கூட, தாம் தமிழர்கள் என்று எண்ணுவதற்கும், பேசுவதற்கும், செயல்படுவதற்கும் மாறாகச் சேரன் குடியினர், சோழன் குடியினர், பாண்டியன் குடியினர் என்றே பிரிந்து நின்றனர்; பிரிந்து கெட்டனர்; பிரிந்து கெடுத்தனர். பின்னர் மத அடிப்படையில், பிரிந்து நின்றனர். பிரிந்து கெட்டனர்; பிரிந்து கெடுத்தனர். பின்னர்க் கட்சி அடிப்படையில் பிரிந்து நின்றனர்; பிரிந்து கெட்டனர்; பிரிந்து கெடுத்தனர்; இக்காலத்தில் சாதி, மதம், கட்சி என்ற

மூன்றின் அடிப்படையிலும் பிரிந்து கெடுகின்றனர்; பிரித்துக் கெடுக்கின்றனர்.

மிகத் தொல் பழங்காலத்தில் - குறிப்பிட்ட சமுதாயத்தின் கூட்டு வெளிப்பாடாகவே தமிழ்மொழி தோன்றியது. எனவே, தமிழ்ச் சமுதாயத்தை ஒன்றாகப் பிணைக்கும் ஆற்றல் உடையது தமிழ் மொழியாகவே இருக்கும்; இருக்க முடியும் தமிழ்மொழி எனும் உணர்வு ஓர் ஆற்றல் வாய்ந்த சக்தி. அது உணரப்படுமானால் எட்டுக் கோடி பேர்களின் கூட்டுக் குரலாக அது உரக்க ஒலிக்க முடியும்.

சமுதாய இணைப்புச் சக்தியாக மொழி இருந்தும் அதனைப் போதிய அளவு பயன்படுத்தாத சமுதாயமாகத் தமிழ்ச் சமுதாயம் உள்ளது அதனைப் போலவே சிந்தனை ஆற்றல் இருந்தும் அதனைத் தம் மொழி வழியே புலப்படுத்தாத சமுதாயமாகவும் தமிழ்ச் சமுதாயம் உள்ளது.

அரசியல், சமூக இயல், பொருளியல் ஆகிய மூன்று தளங்களிலும் தமிழர் தம்மைத் தமிழர் என்றுணர்ந்து அறிந்து ஒன்றுபடவும் கட்டுப்படவும் தவறியமையால் மேற்கண்ட மூன்று களங்களிலும் தங்களுக்கு உரிய உரிமைகளை இந்தியாவிலும் உலக அரங்கிலும் இழந்து நிற்கின்றனர். அதனைப் போலவே அறிவுலகில் தம் சிந்தனையைத் தம்மொழி வழி 'கொள்ள' முடியாது தவிர்த்துக் கொண்டதால். தம் மக்களுக்குக் 'கொடுக்க' முடியாமலும் தவிக்கின்றனர். இன்று உலகெங்கும் அறிவியல் தொழில்நுட்பம், வணிகம், பண்பாடு ஆகியவற்றில்

முன்னிலை வகிக்கும் ஆங்கிலேயரும், செர்மானியரும், பிரஞ்சுக்காரரும் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை உரோமர்களின் அரசியல் ஆதிக்கத்திலும், இலத்தீன் மொழி ஆதிக்கத்திலும் சிக்கிச் சிதைந்தவர்களே! சீசர் காலத்திற்குப் பிறகு இங்கிலாந்தும், மார்டின் லூதருக்குப் பிறகு செர்மனியும், பிரஞ்சுப் புரட்சிக்குப் பிறகு பிரான்சும் அனைத்துத் தளத்திலும் ஆட்சி, கோயில், நீதிமன்றம், கல்வி நிறுவனம் என எல்லாவற்றிலும் தங்கள் மொழிகளைத் தயக்கம் எதுவும் இல்லாமல் அரியாசனம் ஏற்றின.

தொன்மைச் செவ்வியல் நாகரிகங்களான கிரேக்க, உரோம நாகரிகங்கள் முறையே கிரேக்க, இலத்தீன் மொழிகள் வாயிலாகவே வளர்ந்தன ஸ்பெயின், பிரான்ஸ், உருமேனியா ஆகிய நாடுகளில் அவற்றின் தாய்மொழிகளின் இடத்தை இலத்தீன் மொழி எடுத்துக் கொண்டபோதிலும் அந்நாடுகளின் நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சியின் படைப்புத் திறன் மங்கியே இருந்தது. மாறாக, உரோம் நாட்டில் மட்டுமே அப்படைப்புத் திறன் நிலை கொண்டிருந்தது உரோமப் பேரரசு வீழ்ச்சி கண்ட பிறகும் ஆயிரம் ஆண்டுகள் வரை இலத்தீன் பொது இணைப்பு மொழியாக விளங்கிச் சமயம், கல்வி இரண்டிலும் உயர்நிலை நாகரிகக் கூறுகளைத் தலைமுறை தலைமுறையாகப் பரப்பி வந்தது அம்மொழியின் தனி வல்லாண்மை ஐரோப்பாவில் ஓராயிரம் ஆண்டுகள் தொடர்ந்தது முதலில் இத்தாலியிலும் பிறகு பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், ஜெர்மனி, செக்கோஸ்லாவியா ஆகிய நாடுகளிலும் இலத்தீன் புறக்கணிக்கப்பட்டது. அவ்வவ் நாட்டு மக்கள் தங்கள் தாய்மொழியிலேயே நாகரிக உயிர்த்துடிப்பைப் பரிமாறத்

தொடங்கிய பிறகுதான். ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலமே உருவாகியது. ஐரோப்பிய மொழிகள் இலத்தீன் மொழியைக் குறைநிரப்புக்கு மட்டுமே பயன்படுத்தியதால், அம்மொழிகள் கலை, இலக்கியத் துறைகளில் செழித்தோங்கி வளர்ந்தன ஐரோப்பா ஒப்பற்ற உயர்நிலைச் சாதனைகளைப் படைத்தது. புதிய பிளான் - தோட்டங்கள், நிலப்படவியல், அறிவியல் துறைகள் மலர்ந்து மணம் பரப்பின இலத்தீன் மொழி முதலில் பல்கலைக் கழகங்களிலிருந்து பிறகு ஆட்சி, நிருவாகப் பிரிவுகளி லிருந்தும், அதன் பிறகு சமயத்திலிருந்தும் (ஆலயங்களி லிருந்தும்) படிப்படியாக வழக்கிலிருந்து அகற்றப்பட்டது. அவ்வவ் நாட்டுத் தாய்மொழிகளே அனைத்துப் பண்பாட்டுத் துறைகளிலும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. இலத்தீன் மொழியின் ஆளுகை தொடர்ந்து நீடித்திருந்தால் இத்தகைய மறுமலர்ச்சியை அந்நாடுகள் கண்டிருக்க முடியாது. (அண்ணா பல்கலை; களஞ்சியம் ஆகஸ்ட் 1995)

மங்கோலிய இனத்தவராகத் தோன்றிச் சீனமொழி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுத் தமக்கு எனத்தனிப் பாதையும் அரசும், ஆட்சியும் அமைத்துக் கொண்ட சப்பானியர் அன்றைய நாள் தொட்டு இன்றைய நாள் வரை தம் மொழியை எல்லாத் தளத்திலும் நிலை நிறுத்தினர். கொரியரும் அவ்வாறே! வியட்நாமியரும் அவ்வாறே, சீனர், மலேசியர், தாய்லாந்து நாட்டினர், இந்தோனேசியர் ஆகியோரும் தாய்மொழி வழி கற்பிப்போரே.

ஐரோப்பிய நாடுகளில் தொழில் புரட்சிக்கும், அறிவியல் புரட்சிக்கும் காரணமாக இருந்தவை அந்தந்தப்

பகுதி தாய் மொழிகளே, தாய் மொழியைப் புறக்கணித்து வளர்ந்த நாடாக ஒரு நாட்டைக் கூட உலகப் படத்தில் நம்மால் அடையாளம் காட்ட முடியவில்லை.

உலக அரசியல் விபத்துகளுள் இந்தியச் சுதந்திரம் என்பது மாபெரும் விபத்தாகும் இந்த விபத்தில் விபரம் தெரிந்தோ தெரியாமலோ தமிழர்கள் அரசியல் சாசன வழி போதிய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளாமலே சிக்கிக் கொண்டார்கள். எனவே, 14ஆம் நூற்றாண்டு ஐரோப்பா போலவோ, சப்பானியரைப் போலவோ அண்மைக் கால மலேசியர் / வியட்நாமியரைப் போலவோ, தைவானியர் / கொரியரைப் போலவோ தங்கள் மொழியை எல்லாத் தளத்திலும் தமிழர்களால் மேல் நிறுத்த முடியவில்லை. காரணம், தாம் தமிழர் என்ற அடையாளத்தை இழந்து சாதி, மத, கட்சி என்ற சுயநல அடையாளத்துக்குள் இவர்கள் வருங்காலம் தெரியாமல் தொலை நோக்கு இல்லாமல் மாட்டிக் கொண்டதே ஆகும். இதற்கு மொழி சார்ந்த ஓர் சான்று : தமிழ் நாட்டைச் சேர்ந்த ஓர் இளைஞன் மழலைப் பள்ளி தொடங்கி, பட்ட வகுப்பு இரண்டாம் வரை 16 ஆண்டுகள் ஆங்கிலத்தையும், தமிழையும் மொழிப் பாடங்களாகக் கற்கிறான் கிட்டத்தட்ட 688 வாரங்கள், வாரம் 12 மணியாக 688x12 = 8256 மணி நேரங்கள் படிக்கிறான். கிட்டத்தட்ட படிக்கும் பாடங்களில் 48%, மொழிகளைப் படிக்கிறான் அதாவது 16 ஆண்டுகளில் 7.68 ஆண்டுகள் ஓர் இளைஞன் மொழியை மட்டும் படிக்கக் காலத்தை அழிக்கிறான். கற்ற ஆங்கில மொழி வழி அறிவியல் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயமே காரணம் இவ்வளவு ஆண்டு மொழிப்

படிப்பிற்குப் பிறகும் அவன் பாடங்களைப் புரிந்து கொண்டானா? புரிய வைத்தானா? விடை நம்பிக்கை அளிப்பதாக இல்லை. உரிய பாடங்களை முன்பே நாம் குறித்தது போலப் பிறப்போடு தொடர்புடைய, புரிதலோடு தொடர்புடைய, சிந்தனையோடு தொடர்புடைய தன் தாய்மொழியில் கற்றிருந்தால் கற்றது மிகுதியாக இருக்கும்; புரிந்து கொண்டது மிகுதியாக இருக்கும்; சிந்தித்தது மிகுதியாக இருக்கும்; சமுதாயம் அடைந்த பயனும் மிகுதியாக இருந்திருக்கும்.

தமிழர்களிடையே படிக்காத மக்களே மிகுதி கையெழுத்து மட்டும் போடத் தெரிந்தவர்கள் 40% (2,26,37659/க, 84,08,017) (1988) இவர்களில் ஆங்கிலம் எழுதவும் பேசவும் படிக்கவும் தெரிந்தோர் சுமார் ஆயிரத்திற்கு ஒருவரே. ஆங்கில மொழி வழிக் கற்ற இளைஞர்கள் கல்வி மனப்போக்கோடு கற்காமல் பிழைப்பு மனப்போக்கோடு கற்றமையால் பெரும்பான்மை மக்களிடமிருந்து விலகி அயன்மைப் பட்டிருக்கிறார்கள்.

கல்வியால் தமிழ்ச் சமுதாயத்தின் மேல் ஏற்பட்ட பாதிப்பு மிகக் குறைவு. எனவேதான், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைக் கூடத் தம் அஞ்ஞானத்தை நிலை நிறுத்த அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சான்று. கணினி வழி ஜோதிடம்,

காரில் போய் அருகில் இறங்கி வடம் பிடித்துத் தேரை இழுக்கிறார்கள் மின் விளக்கைப் போட்டுத் தீப்பெட்டியைத்

தேடிக் கண்டுபிடித்துத் திரி விளக்கை மின் வெளிச்ச வெள்ளத்தின் நடுவே ஏற்றுகிறார்கள்.

அறிவும், அறிவியலும் அவர்கள் அறியாத மொழியில் அடக்கப்பட்ட சூழலைச் சினிமாக்காரர்களும், கோயில் சுற்றிகளும், அரசியல் போக்கிரிகளும் மிக நன்கு தமக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். மக்கள் அறிந்த மொழி வழியே மேற்கண்ட மூவரும் எளிய மக்களை அணுகுவதால், தமிழர் முழு விழிப்புறுதலைத் தவிர்க்க முடிகிறது; முடியும், மக்கள் மயக்கங்களில் தொடர்ந்து இருப்பதே இருத்துவதே மற்றவர்க்கு 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்' 'சுகம்பல' கூட்டுவதாக இருக்கும். எங்கே, மொழியின் சமூகப் பயன்பாடு மெலிவாக இளைத்து இருக்கிறதோ, அங்கே பொருளியல் சமன்பாடும், மெலிந்து, இளைத்தே இருக்கும்; இருக்க முடியும்.

II

# மக்கள் மன்னன் மதம்

## பகுதி ஒன்று

வழிபாட்டிற்கு அடிப்படை அச்சம்; நிறுவன மதத்திற்கு அடிப்படை சமூக உணர்வு. சமூக உறுப்பினரிடையே முரணும் மோதலும் இல்லாமல், ஓர் ஒத்திசைவை ஏற்படுத்துவதில், மதம் முன்னிடம் வகித்தது தனி மனிதர்கள் தங்களுடைய நலன்களை மட்டும் முன்நிறுத்தி; செயல்படுவார்களானால் சமூகம் சுக்குநூறாக உடைந்து சிதறிவிடும்; மாந்தர்களின் 'தான்' என்ற அகந்தைக் கிழங்கை அகழ்ந்தகற்றி, மற்றவர்கள் மேல் அன்பு செலுத்தப் பழக்குவதில் ஆதி மதங்கள் அனைத்தும் முதலிடம் பெற்றிருந்தன. எனவே மதத்தோற்றம் ஒரு சமூக நிகழ்வாகும்.

சமூகவியல் தந்தை எனப் பெறும் ஆகஸ்ட் கோம்த் (1798-1857) எனும் பிரஞ்சு அறிஞர், சமூகத்தின் உறுப்புகளிடையே ஒத்திசைவை ஏற்படுத்துவதில் மதம் என்ற சமூக நிறுவனத்திற்குப் பங்குண்டு என்பர். மாந்த மனம், கடந்த காலங்களில் மூன்று நிலைகளைக் கடந்து வளர்ந்துள்ளது 1. இறைமையியல் நிலை (Theological Stage) 2. நுண்பொருட் கோட்பாட்டியல் நிலை

(Metaphysical Stage) 3. புற மெய்ம்மை நிலை (Positive Stage).

முதல் நிலையான இறையியல் நிலையில், மனிதர், அனைத்திற்கும் ஆண்டவனே அடிப்படை; அவனின்றி ஓர் அணுவும் அசைவதில்லை என்று நம்பினர் உலகிலுள்ள பழைய நாகரிக மக்கள் அனைவரிடமும் மத நம்பிக்கை இருந்தது. அரசமைப்பிற்கும் ஆதியாக மத அமைப்பே இருந்தது ஒரு நல்ல சமுதாய அமைப்பிற்குக் கட்டுப்பாடு தேவை. கடவுளை முன்னிறுத்திச் சமுதாயக் கட்டுப்பாடு களை மக்களிடையே கொண்டுவந்து நிலைநிறுத்தியோர் மத குருமார்களே. எகிப்து, சுமேரியா, பாபிலோனியா, அசீரியா, சால்டியா, பாரசீகம், யூதம், சீனம், சப்பான், மாயா, இன்கா, ரோம், இந்தியா ஆகிய பழைய நாகரிகங்கள் தழைத்திருந்த இடங்களில் எல்லாம் மதத்தின் பங்கு சுட்டிக் காட்டும்படியாக இருந்தது.

பாபிலோனியரிடையே இருந்த அரசு, முற்றும் மதத்தைச் சார்ந்தே (Theocratic) இயங்கிற்று. மதகுருமார்கள் முன்னின்றே மன்னர்கட்குப் பட்டம் சூட்டினர் கடவுள் பெயரிலேயே வரிகள் பெறப்பட்டன கிட்டத்தட்ட 65000 தெய்வங்கள் இருந்தன இந்தியாவிலும் பாபிலோனியாவைப் போல ஏறத்தாழ மதத்திற்கும் அரசிற்கும் நெருக்கத் தொடர்பு இருந்ததை வரலாறு காட்டுகிறது. சிந்துவெளியில் கிடைத்த மதகுருவின் சிலை, இந்திய மன்னர்களுக்குப் புரோகிதர் முன்னின்று மகுடாபிசேகம் செய்வித்தல், புரோகிதர்க்காகப் பலவேறு தானதருமங்களை மன்னன் செய்தல், மான்யம் வழங்குதல், யாகம் செய்தல் ஆகியன எண்ணத் தக்கன.

பழைய நாகரிக மக்களுள், மதத்திற்கு அதிமுதன்மை தராது இருந்தோர் கிரேக்கர் மட்டுமே கிரேக்கர் கடவுள் வழிபாட்டினர் என்றாலும் மதத்திற்கும் கடவுளர்களுக்கும் கட்டுப்படாது வாழ்ந்தனர் முறையான கோயிலோ, கோயில் தொழுகையோ, அவர்களிடம் இல்லை மரித்தோர் மீண்டும் உயிர்த்தெழுவர் என்ற நம்பிக்கை இல்லை. எனவே இறந்தோரை எரித்தனர், புதைப்பதுமில்லை; வழிபாடு நிகழ்த்தவும் இல்லை,

மதச்சார்பற்ற அரசுக் கோட்பாடு, ஐரோ-அமெரிக்க நாடுகளில் பிற்காலத்து ஏற்படுதலுக்கு அன்னோர்தம் முன்னோரான கிரேக்கரின் தத்துவமும் ஒரு காரணமாக இருந்தது. இந்திய வரலாறு அப்படிப்பட்ட தன்று

கி,பி. 455இல் உரோமப் பேரரசு வீழ்ந்தது. அதன்பின் வந்த காலத்தை ஐரோப்பிய இருண்ட காலம் என்பர் காட்டு மிராண்டிகள் எனப் பெறும் செருமானியர்தம் தாக்குதலால், உரோமப் பேரரசு சிதறுண்டு, வலிமையற்ற சிறுசிறு நாடாகப் போயிற்று கலவரங்கள் தொடர்ந்தன மக்களிடையே நீங்கா அச்சம் நிலைத்தது, கட்டுப்பாடின்மை பெருகியது எனவே மக்கள் தன்னம்பிக்கை குறைந்தவ ராயினர் இச்சூழலிலேயே மத நம்பிக்கை அதன்வழி தெய்வ நம்பிக்கை ஓங்கியது. மக்கள், கடவுள் வழிபாட்டிலும், இவ்வுலக நம்பிக்கை இழந்த நிலையில் பரலோக வாழ்க்கையிலும் பெரும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர் இன்பங்களை எளிதில் அடைய முடியா நிலையில், இன்பங்களைத் துறந்தால்தான் மறுமை இன்பம் கிட்டுமென்னும் கருத்துப் பரப்பப் பெற்றது. இச்சூழலிலேயே கிறித்தவமும் இசுலாமும் வேகமாக

வளர்ந்து பரவின. இந்தியாவில் சமணமும், பௌத்தமும் செழித்தன.

கத்தோலிக்கத் திருச்சபைக்கும், அரசுக்கும் இடையே ஓயாப் போராட்டம் தொடங்கியது. மக்களின் புற உடலை ஆளவேண்டியவர் மன்னர்; அகவுடலை ஆளவேண்டியவர் போப் போப்பாண்டவர் - சூரியன், அரசர் - சந்திரன். இருவரையும் படைத்தவர் கடவுள். சூரியன் இன்றிச் சந்திரன் இல்லை. எனவே போப்பின்றி அரசனில்லை எனப் பெரியவர் போப்பா அரசனா என்ற தொடர்போர் ஐரோப்பிய இடைக்கால மண்ணில் இடைவிடாது நிகழ்ந்து கொண்டே இருந்தது

மதமா? அரசா? மதத்திற்குள் அரசு அடக்கமா? அரசிற்குள் மதம் அடக்கமா? என்ற போராட்டம் வெளிப்படையாக ஐரோப்பாவில் பல நூறு ஆண்டுகள் நடந்தது. சில இன்றியமையாத நிகழ்வுகளை இங்கே நினைவுகூரலாம்

இத்தாலியை, செருமானியர் ஆண்டனர் இத்தாலி மொழியில் அ ஆவன்னா கூடத் தெரியாத செருமானியர் ஆண்டதை இதாலியர் வெறுத்தனர் இதனை உள்ளூர்ப் போப்பாண்டவர் பயன்படுத்திக் கொண்டு மன்னரை எதிர்த்தார் பிற்காலத்து இதே அடிப்படையில் இங்கிலாந்து, பிரான்சு, செருமானிய நாட்டினர், உரோமை எதிர்த்தனர்

ஐரோப்பிய மண்ணில் மொழிசார்ந்த தேசிய உணர்வு - பெருகப் பெருகக் கடவுள் பக்திக்குப் பதிலாகத் தேசபக்தி

வளர்ந்தது; தேசபக்தி இராசப்பக்கதியாகப் பரிணாமம் கொண்டது இங்கிலாந்து, பிரான்சு இந்த அடிப்படையில் இத்தாலிப் போப்பின் மதத் தலைமையைப் பின்னுக்குத் தள்ளின.

பாலஸ்தீனத்திலிருந்த கிறித்தவப் புனிதத் தலங்களை இசுலாமியரிடமிருந்து காக்கவும், கீழை உரோமானியப் பேரரசை இசுலாமியர்களிடமிருந்து மீட்கவும் எட்டுச் சிலுவைப் போர்கள் நிகழ்ந்தன இப்போரில் பங்கேற்ற வீரர்கள், தம் இராணுவ உடைகளில் சிலுவை அடையாளம் ஒன்றை அணிந்திருந்தனர் சிலுவைப் போர்கள் அரசையும், மதத்தையும் இருதரப்பிலும் நெருக்கமாக்கின. ஜெருசலேம் நகரில் அடி எடுத்து வைத்தால், செய்த பாவங்கள் எல்லாம் மன்னிக்கப் பெறும் என்ற கருத்துப் பரப்பப் பெற்றுப் போருக்கு ஆட்கள் திரட்டப் பெற்றனர். கி பி. 1005இல் பாம்பார்க் (Bombarc) எனும் நகரத்துக் கிறித்தவ மதகுரு ஏழாயிரம் செருமானியர்களைத் திரட்டி ஜெருசலேம் நகருக்கு அழைத்துச் சென்றாராம்.

மக்கள் தொகைப் பெருக்கத்தால், ஐரோப்பியர்க்குப் புதிய இடங்கள் தேவைப்பட்டன. பாலஸ்தீனம் வளமான நிலமாகக் கருதப் பெற்றது. போப்பாண்டவர் இப் பொருளாதாரச் சூழலைக் காட்டிப் பிரஞ்சுப் பிரபுக்களையும் மக்களையும் சிலுவைப் போருக்கு ஊக்கப்படுத்தினார் என்பர்.

பொருளாதார வசதியுடன் வாழ்ந்த யூதரைப் பழிவாங்கவும், ·ஐரோப்பியர் மதவுணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டனர்.

பிற்காலத்து அதாவது பதினைந்தாம் நூற்றாண்டில் ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்க, ஆஸ்திரேலியக் கண்ட நாடுகளை அடிமைப்படுத்திய போர்ச்சுகல், ஸ்பானிஷ், ஆலந்து, இங்கிலாந்து, பிரான்சு நாடுகள், சென்ற இடங்களில் எல்லாம், அரசின் உதவியுடன், கிறித்தவ மதத்தைப் பரப்பின போர்ச்சுகல், ஸ்பானிஷ், பிரான்சு ஆகிய நாட்டார் பெரும்பகுதி கத்தோலிக்கராக இருந்தமையால், அவர் வழிக் கத்தோலிக்கக் கிறித்தவமும், ஆலந்து, இங்கிலாந்து நாட்டினர் வழிப் புரட்டஸ் டெண்ட் கிறித்தவமும் பெருமளவு பரவின ஐரோப்பியர் வரவிற்கு முன்பு, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் பெருமளவு இசுலாமும் ஊடுருவியிருந்தது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் முன்பே இருந்த மரபுமதங்கள், இடைக்காலத்துப் பரவிய இசுலாம் ஆகியவற்றுடன், அரசின் ஒத்துழைப்புடன் கிறித்தமும் சேர்ந்து கொண்டது சாதி, மொழி, கட்சி ஆகியவற்றிற்கில்லாத பெரும் ஆற்றல் மதத்திற்கு உண்டு, சாதியின் எல்லை பெரியது அன்று, பிறப்பால் தீர்மானிக்கப் பெறுவதால் எண்ணிக்கையைக் கூட்ட முடியாது; மொழியின் எல்லையும் பிறப்பாலும், வளர்ப்புச் சூழலாலும் அமைவது; பெரிய எல்லையை உடையதன்று; நினைத்த மாத்திரத்தில் எண்ணிக்கையைப் பெருக்கிவிட முடியாது.

மரபு மதம் அல்லது மிகுதியான அக வேறுபாடுகள் இல்லாத மரபு மதங்கள் தழைத்திருந்த இந்தியா போன்ற

நாடுகளில், அரசு ஆதரவுடன் உள்நுழைந்த இசுலாமும், கிறித்தவமும் புதிய சிக்கலையும், சித்தாந்தத்தையும் இந்திய மண்ணில் உருவாக்குவது அரசியல் கட்டாய மாயிற்று.

சாதி சாதியாகப் பிரிந்திருந்த இந்திய மக்களைப் புதிய வரவுகளான மதம் மேலும் கூறுபோட்டது. இந்தியர்களைச் சாதி பிரித்திருந்தது, மொழிகளும் பிரித்திருந்தன சாதி, மொழிகளால் பிரிவுண்டிருந்த அம்மக்கள் வழிபாட்டு மரபு மதங்களால் அருகருகே இருந்தனர். இவ்வருகாமை துண்டிக்கப்பட்டது இந்தியாவிலேயே தோன்றியிருந்த சமணம், பௌத்தம், வேத மதங்கள் இடையே வேறுபாடுகள் இருந்தன. குறிப்பிட்ட மதம் சார்ந்த மன்னர்கள் ஆட்சியில் இருக்கும்போது, மற்ற மதத்தார் பாதிக்கப் பெற்றனர் பாதுகாப்புக் குன்றி இருந்தனர். சமண பௌத்த மதத்தார் ஆட்சியில், வைதிக மதத்தார்க்குப் பாதுகாப்பில்லை சமணன் மகேந்திர பல்லவன் காலத்தில், திருநாவுக்கரசுக்குப் பாதுகாப்பில்லை; கூன்பாண்டியன் காலத்துத் திருஞானசம்பந்தருக்குப் பாதுகாப்பில்லை; வைணவ மன்னவர் காலத்துச் சிவமதத்தார்க்குப் பாதுகாப்பில்லை; சிவமதத்தார் ஆட்சியில், வைணவச் சார்பினருக்குப் பாதுகாப்பில்லை. அயற்புலத்திலிருந்து இசுலாம், இந்திய மண்ணிற்கு வந்தபோது, வேறுபட்டிருந்த இந்திய மரபு மதத்தார் 'இந்து' என்ற பொதுக்குடையின் கீழ் ஒன்றாயினர்.

பதினான்காம் நூற்றாண்டில், மதுரையை மாலிக்காபூர் படையெடுத்து வென்ற போது, விசய் நகர அரசர்கள், 'இந்து' என்ற பொதுக்குடைக் கீழ்த் திரண்டு மதுரையை மீட்டனர்; இந்துமத அடிப்படையில் அங்கங்கே இசுலாத்தை

எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடந்ததை வரலாறு பதித்து வைத்திருக்கிறது; மகாராட்டிர வீரசிவாஜி முன்னிற்கிறார்.

'பன்மத நாடு' என்ற நிர்ப்பந்தச் சூழலை இந்தியா ஏற்றுத் தீரவேண்டிய வரலாற்றுக் கட்டாயம், பலவேறு கால கட்ட இந்திய அரசுகளாலும், சாதிப் பிளவுகளாலும் மொழிப் பிளவுகளாலும் நேர்ந்துவிட்டது. அசோகரால், அகில மெங்கும் பௌத்தத்தைப் பரப்ப முடிந்தது. அவருக்கு நிகரான ஆற்றல் பெற்ற அக்பரால், 'தீன் இலாகி' என்ற சமரச மதத்தையே அறிமுகப்படுத்த முடிந்தது, வெற்றி கொள்ள முடியவில்லை இந்தியா முழுதும் இருந்த இடைக்கால, பிற்கால அரசுகள், பன்மத நிலைப்பாட்டை உணர்ந்து அனைத்து மத நிறுவனங்களுக்கும் மான்யங்கள் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டன. இச்சூழலில், துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த ஐம்பத்தாறு தேச இந்தியாவை, எளிதாக வென்று ஒரு நாடாக்கிய ஆங்கிலேயர், மதச் சார்பில்லாதவராகக் காட்டிக் கொண்டாலும், அவர்காலத்து அவர்தம் சமயம் கடைக்கண் சலுகையைப் பெற்றிருந்தது.

மதக்காரணத்தினாலேயே இந்தியா 1947இல் இருபாகமாயிற்று விடுதலை பெறும்போது, மதங்களாலும், மொழிகளாலும், சாதிகளாலும் இந்தியா நூற்றுக்கணக்கில் பின்னப்பட்டே கிடந்தது இப்பின்னச் சிதைவினின்று மீட்டு ஒருங்கிணைக்கும் அரும்பெரும் வாய்ப்பு, பல நூற்றாண்டு களுக்குப் பிறகு வாராது வந்த மாமணியாகச் சுதந்திரம் வழியாக வாய்த்தது எனினும் சுதந்திர நாட்டின் அரசியல் சாசனத்தை வகுத்தோர், இந்தியரைப் பல வேறு மதத்தாராகவும், மொழியாராகவும், சாதியாராகவும்

நிலைபெறவும் கூர்மை பெறவும் வேற்றுமை உறவை வைத்தனர். மானுடத்தையும் முன் மொழியவில்லை. இந்தியத்தையும் வழி மொழியவில்லை. சிறுபான்மை மத உரிமைகளை அளித்ததன் மூலம், இந்தியாவில் மதவேறுபாட்டை நிலைநிறுத்தினர்; ஒரு மொழியை உயர்த்தி ஏனைய மொழிகளை வெளிப்படையாகவே புறக்கணித்ததன் மூலம் மொழிவேறுபாட்டை நிலைநிறுத்தினர். பிறப்புவழி சாதி ஒதுக்கீடுகளின் மூலம் சாதி வேறுபாட்டை நிலைநிறுத்தினர்.

ஐரோப்பிய அமெரிக்க அரசியல் சாசனங்களை அப்படியே காப்பி அடித்துக் கட்சி அரசியலையும் அதன்வழித் தேர்தலையும் அறிமுகப் படுத்தியதன் மூலம், புதிய பிளவு சக்தியான கட்சி வேறுபாட்டையும் நிலை நிறுத்தினர்.

அறிவுப்பூர்வமான ஒன்றைக்கூட உணர்ச்சிப் பூர்வமானதாக வரித்துக் கொள்ளும் இயல்பினரான இந்தியர், சாதி, மதம், மொழி ஆகியவற்றுடன் கூடக் கட்சியையும் உணர்ச்சிப்பூர்வமான ஒன்றாக வரித்துக் கொண்டுவிட்டனர்.

ஐரோப்பிய வரலாற்றைப் போன்று, மதத் தலைவரே முதல்வர்; அரசர் மதத்தலைவர்க்குக் கீழ்ப்படிந்தவர் என்பது போன்ற சிக்கல் இந்திய வரலாற்றில் பொதுவாக இல்லை, தமிழக வரலாற்றில் முற்றுமாக இல்லை ஆனால் மதச் சிறுபான்மையினருக்கு அரசியல் சாசனம் அளித்த சலுகை எதிர்த்திசை விளைவை உண்டாக்கி விட்டது. இந்தியாவில்

சிறுபான்மை மதங்களிலே முதன்மையாக இருக்கும் இசுலாத்திற்கு அனைத்துலகச் சார்பும் உதவியும் இசுலாமிய நாடுகள் வழி கிடைத்து வருகின்றன. அது போலவே கிறித்தவத்திற்கும் கிடைத்து வருகின்றன. உள்நாட்டில் சிறுபான்மைச் சலுகை, அயல்நாடுகளில் உறுதுணை ஆகிய இரண்டு வாய்ப்பும் இல்லாத இந்தியப் பெரும்பான்மை மதத்தினர், தமக்கென இருக்கும் ஒருநாட்டிலேயே சலுகைகூட அல்ல, உரிமை இல்லாது இருக்கிறோம் என்று தள்ளப்பட்டு விட்டதாக எண்ணுகின்றனர். இவ்வெண்ணமே இந்தியாவின் ஒரு பெருஞ்சிக்கலாகத் 1993 திசம்பர் ஆறாம் நாளுக்குப் பிறகு வடிவம் எடுத்துள்ளது. அண்டை இசுலாமிய நாடுகளான இரான், இராக், ஆப்பிரிக்க லிபியா ஆகியவற்றில் இசுலாமியத் தீவிரவாதம் வளர்க்கப்பட்டு வருகிறது இதன் பாதிப்பு காசுமீரில் கேட்கத் தொடங்கி விட்டது. பக்கத்தில் உள்ள பாகிஸ்தான் தன்னை இசுலாமிய நாடு என வெளிப்படையாக அறிவித்துக் கொண்டு, பஞ்சாப், காசுமீரில் தீவிரவாதத்தை நீரிட்டு வளர்க்கிறது. இந்நிலையில் இந்திய அரசின் மதச் சார்பின்மைக் கொள்கை நெருக்கடி நிலைமைக்குத் தள்ளப் பட்டு விட்டது

சோவியத் வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்கா ஒரு பெரும் எசமானனாக அனுமவிசுவரூபம் எடுத்து நிற்கிறது. இசுலாமியப் பழைமை வாதத்தை அடியொற்றி இசுலாமிக் கூட்டு அமெரிக்காவிற்கு எதிராக விசுவரூபம் எடுத்து வருகிறது. உலகில் நூறு கோடி பேர் இசுலாமியர்; ஐ நா வில் இருப்பத்தாறு இசுலாமிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன; இசுலாமியர்தம் மொழியான அரபி, ஐ நா.வின் மொழிகளுள் ஒன்று. உலகில் கிடைக்கும் பெட்ரோல் வளத்தில் மூன்றில்

ஒரு விழுக்காடு வளைகுடா இசுலாமிய நாடுகளில் கிடைக்கிறது இந்தியாவில் மட்டும் பதினேழு கோடி இசுலாமியச் சகோதரர்கள் உள்ளனர்.

இந்தியா, மதவழி நாடு; கடவுள் நம்பிக்கை மிகுதியாக உள்ள நாடு எனவே திடும் என்று மதமறுப்பு நாடாக மாற முடியாது. அதே சமயத்தில் இதுவரை இருந்தது போன்ற மதத்திற்கொரு சட்டம்; நீதி என்பதைத் தொடர்ந்து பின்பற்றவும் முடியாது; கூடாது. மதச்சார்பின்மை என்ற கோட்பாடு, எல்லா மத மக்களிடமும் மதத்தீவிர வாதத்தை, வளர்த்து விட்டமையே கண்ட பலன். எனவே இதுவரை கடைபிடித்து வந்த பொருளில் மதச்சார்பின்மைக் கொள்கையை இனியும் கடைபிடிக்க முடியாது; கூடாது; சிறுபான்மை அல்லது பெரும்பான்மை என்ற பெயரில் எந்த மதத்திற்கும் தனிச் சலுகை இருத்தல் ஆகாது அரசியல் சாசனத்தின் முதற் பகுதியில் கூறப்பெற்ற சாதி மத மொழி பேதமற்ற சமநீதி அனைவருக்கும் மெய்யாகக் கிடைக்கும் வண்ணம் புதிய அரசியல் சாசனம் ஒன்று வகுக்கப் பெறுதல் வேண்டும்.

மதமா? மனிதமா? மனிதந்தான் முன்னுரிமை பெறுதல் வேண்டும் மதத்திற்காக மனிதமா? மனிதத்திற்காக மதமா? மனித நலத்திற்காகத்தான் மதம் எந்தக் கருவியையும், அதனைப் பயன்படுத்துவதற்காகவே காப்பாற்ற வேண்டும். மனிதனின் ஊடே, அவனை ஒருங்கிணைக்கும் கூட்டுச் சக்தியாகவும், கூட்டச் சக்தியாகவும் மதச்சார்பு பயன்படுதல் வேண்டும். நமக்கு இடையே கட்டப்பெற வேண்டியது சுவர்கள் அல்ல; பாலங்கள்!

## பகுதி இரண்டு

இன்று உலகளாவித் தமிழர் வாழும் இடம் எல்லாம் பின்பற்றப் பெறும் சைவ சமயம் பற்றிய நேர்க் குறிப்புகள் பண்டைத் தமிழிலக்கியங்களான சங்க இலக்கியங்களில் காணப் பெறவில்லை, எனினும், சைவ சமய மூலக் கடவுளான சிவனைப் பற்றியும், சக்தி எனப்பெறும் கொற்றவை பற்றியும், தமிழ்க் கடவுளான முருகனைப் பற்றியும் குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. சங்கப் பாக்களுக்கு முன்னைய இலக்கணமாம் தொல்காப்பியத்தில் சிவனைப் பற்றிய வெளிப்படையான, குறிப்பு எதுவும் இல்லாமையால் நான்கு நிலக் கடவுளராக மாயோன், சேயோன் (முருகன்), வேந்தன் (இந்திரன்), வருணன் ஆகியோர் மட்டும் பேசப்படுகின்றமையும் கவனத்திற்குரியவை. கி.மு. 1500ஐ ஒட்டியதாகக் கருதப்பெறும் சிந்துவெளி நாகரிகச் சிதைவுகளில் இலிங்க உருவங்கள் பல கண்டெடுக்கப் பெற்றுள்ளன (பிள்ளை, 45) மொகஞ்சதாரோ களிமண் முத்திரைகளின் மேல் பசுபதி உருவில் சிவன் வடிவமும், அம்மன் வடிவமும் இடம் பெற்றுள்ளன. (பிள்ளை, 46)

சங்கமருவிய காலம் எனக் குறிக்கப் பெறும் கி பி 3ஆம் நூற்றாண்டிலும் அதன் பிந்தைய காலத்திலும் எழுதப் பெற்ற இலக்கியங்களில் குறிப்பாக மணிமேகலையில் சைவ மத வாதப் பிரதிவாதம் இடம் பெற்றுள்ளது (27ம் காதை) இக் கால கட்டத்தில் எழுதப் பெற்ற திருமூலருடைய

திருமந்திரத்தில் சைவ சித்தாந்தம் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. (கி.பி. 4ம் நூற் ) சைவ சமய நூல்கள் இரு வகையின

1. **சாத்திர நூல்கள்:** (மெய்கண்ட தேவர் எழுதிய சிவஞான போதம் (கி பி 13ம் நூற்.) முதலாய பதினான்கு)
2. **தோத்திர நூல்கள்:** தேவாரம், திருவாசகம் உள்ளிட்ட பன்னிரு திருமுறைகள்.

4ஆம் நூற்றாண்டிற்கும் 12ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலங்களில் தோத்திர நூல்கள் தோன்றின. 13ஆம் நூற்றாண்டில் முதன் முதல் முறையான சைவ சித்தாந்தச் சாத்திர நூல்கள் தோன்றின. (கி. லட்சுமணன் ப.303) சைவ சித்தாந்தத்திற்கு ஆதாரமாகக் கருதப்படும் ஆகமங்கள் இருபத்தெட்டு. இவற்றுள் முதற் பத்து இறைவனால் அருளப் பெற்றன என்றும், எஞ்சியவை ஞானிகளால் ஆக்கப் பெற்றன என்றும் சைவர் கருதுவர் இவை நூல் வடிவு பெற்ற காலம் கி மு 1500 என்றும் கூறுவர். நரசிம்மவர்ம பல்லவ மன்னன் காலத்துக் கல்வெட்டில் நான் ஒரு சைவ சித்தாந்தி எனும் குறிப்பு (கி.பி. 7ம் நூற்.)இடம் பெற்றுள்ளது. சைவம் பற்றிய மிகப் பழைய கல்வெட்டுச் சான்றாகும் இஃது.

கி.பி. 6ஆம், 7ஆம் நூற்றாண்டுகளில் பக்தி இயக்கம் பேரெழுச்சி கொண்டது. அப்பர், சம்பந்தர், வாசகர், சுந்தரர் முதலானோர் தமிழகத்தில் சைவ சமயத்தை அடியொற்றிய பக்தி இயக்கத்தைத் தமிழகம், ஈழம் உள்ளிட்ட பகுதிகளில் விசையொடு பரப்பினர். சைவ சமயம் மக்கள் இயக்கமாக வடிவம் கொண்டது இக் காலத்தில்தான். சைவ சமயம்,

தொடக்க காலத்திலேயே ஒரு மதமாகவும் நிறுவனமாகவும், இயக்கமாக இல்லாமைக்கும் இயங்காமைக்கும் சமூக, பொருளாதார, அரசியற் காரணங்கள் உள்ளன.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்து இந்தியத்திற்குத் தெற்கே, ஈழம் வரை தமிழே வழக்கு மொழியாக இருந்தது. தமிழரே ஆளும் அரசராக விளங்கினர். கலிங்கத்தை வெற்றி கொண்ட அசோகப் பெருமன்னன் மேலும் தெற்கே நகராததற்கும், தமிழக அரசர்களை நண்பர்களாகப் போற்றிக் கொண்டதற்கும் தென்புலத் தமிழரசர் வலுவாக இருந்தமையும் கூட்டாக இருந்தமையும் பெரும் காரணங்கள். மொழியளவில் தென்னகத்தார் பழந் தமிழ் (திராவிடம்) பேசுநராக இருந்தனர். இன அளவில் அன்னோர், கறுப்பு நிற - மாநிற மக்களாகவே இருந்தனர்; அன்னோர், வெள்ளை நிறக் காக்கேசியராகவும் இல்லை - மஞ்சள் நிற மங்கோலியரகவும் இல்லை. அவரிடம் பரவியிருந்த கடவுள் நம்பிக்கை ஒன்றுபட்ட சமய நிறுவனமாக இல்லை. பண்டைய தமிழர் வழிபாட்டு நெறி யூத மதம் போலவோ, சீன மதம் போலவோ, கிறிஸ்தவ மதம் போலவோ, இஸ்லாமிய மதம் போலவோ, பௌத்த மதம் போலவோ சமூக நிறுவனமாக (Social institution) இயங்கவில்லை. கூட்டு வழிபாட்டு முறை இல்லை - கூட்ட வெறியாட்டு முறையே இருந்தது தமிழர் சமயம் ஏனைய உலகச் சமயங்களான கிறிஸ்தவம், இஸ்லாம் போல அரசை - அரசியலை - அரசனைச் சார்ந்த ஒரு சக்தியாகவும் இல்லை. முற் காலத்தும், பிற் காலத்தும் தமிழர் அரசியல் அளவிலும் சமுதாய பொருளாதார அளவிலும் தொடர்ந்து அயலாரிடம்

தோற்றமைக்குத் தமிழர் வழிபாடு, நிறுவன சமயமாக இல்லாமை ஒரு பெருங் காரணமாகும்.

நிறுவனச் சமயங்களில் ஒரே கடவுளையும் ஒரேநெறியையும் முன்னிறுத்தும் குறிக்கோள் உயிராக இருப்பதால் சாதி போன்ற குழுவுணர்வு எதிரிகள் இடம்பெறுதல் எளிதாக இல்லை. அயற்சமயத்தார் தலையீடு, தமிழரிடையே இருந்து வந்த பிறப்படிப்படையில் இறுகாத தொழிற் பிரிவைச் சாதிப் பிரிவாகவும், வருணாசிரமப் பிரிவாகவும் மாற்றிவிட்டது. மத அடிப்படையிலான பெரு நெறி, சாதி அடிப்படையிலான குறு நெறி ஆகிவிட்டது. சிறு சிறு குலங்களாகவும், தத் தமக்கு வேறுவேறு குல தெய்வத்தை உடையவராகவும் இருந்து வந்த தமிழரை மேற்கண்ட தலையீடு, துண்டுதுண்டாகக் கூறு போட்டது. தமிழர் வழிபாட்டு நெறி, நிறுவனச் சமயமாகப் பரிணாமம் எய்துவதை இப் போக்கு முற்றும் தடுத்து விட்டது

தென்னிந்திய - இலங்கை நில இயல் அமைப்பு மிகப் பாதுகாப்பானது கடலாலும், மலையாலும் சூழப் பெற்றது. தட்ப வெப்பம் அளவானது. பனிக்கட்டி கொட்டும் நிலையும் இல்லை. பாலைவன வெயிலும் இல்லை. மிகு மழையும் இல்லை மழையின்மையும் இல்லை நிலம் வளமாக இருந்தது மூலப் பொருள்கள் பல இருந்தன. மக்கள் நன்கு உழைப்பவராக இருந்தனர். எனவே உழைப்பினின்று விலகிய பொருநா, பாணர், கூத்தர், புலவர் ஆகியோரிடம் வறுமை தென்பட்டாலும், உழைப்பை நம்பியிருந்த மக்களிடம் பெரிதாக வறுமை வாட்டவில்லை. போர்,

புரோகிதம் ஆகியவற்றை விட உழவே உயர்வாகப் போற்றப் பெற்றது (புறநானூறு, திருக்குறள் உழவதிகாரம் 104)

யவனர் எனப் பெறும் அயல் நாட்டார் வரவாலும் உறவாலும் தமிழகத்து வணிகம் உச்சநிலையில் இருந்தது. பேரளவில் உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பொருட்கள், கைத்தொழிலால் உருவாக்கப் பெற்ற துணிமணிகள், கடல் வழி கிடைத்த முத்து ஆகியன பேரளவு ஏற்றுமதி செய்யப்பட்டன ஏற்றுமதி வளத்திற்கு அறிகுறி. பொருட்சேர்க்கைக்காக அயல் நாடு சென்று உழைக்கும் பழக்கமும் இருந்தது. (முந்நீர் வழக்கம் மகடூஉவொடில்லை தொல்காப்பிய அகத்திணை இயல். சங்க இலக்கியத்துப் பொருட்பிரிவைப் பாடும் பாலைத் திணைப் பாடல்கள்) பொருள்வயிற் பிரிவு, இடையில் ஏற்படும் இல்லாமையை அகற்றியது மக்கள் தொகையும் மிகுதியாக இல்லை சில இலட்சம் மக்களே அன்று இருந்தனர் இத்தகு வசதி வாய்ப்பான சூழல்கள் இருந்தமையால், தமிழ் அரசர்கள் எதிர்காலத் தொலைநோக்கு இல்லாதவராகவே இருந்தனர். ஈழத்தை வெற்றி கொண்ட கரிகாற் சோழன் ஈழ மண்டலம் முழுவதையும் தமிழ் மண்டலமாக ஆக்காது விட்டது. கங்கை இமயம் வரை சென்று வெற்றி கொண்டவராகக் கருதப் பெறும் தமிழ் மன்னர் வடபுலத்தைத் தமிழ் மயம் - தமிழர் மயமாக்காது விட்டது, காவிரிக்கு இந்திர விழாவை ஆண்டுதோறும் நடத்திய சோழ மன்னர், மக்களே குடியிராத காவிரி உற்பத்தித் தலமான குடகு மலையைத் தமிழர் குடியிருப்பாக மாற்றாது விடடது ஆகியன, தமிழர் - தமிழரசர் தொலைநோக்கு இல்லாது வாழ்ந்தவர் என்பதைக் காட்டும் சான்றுகளாகும். இயல்பாக அமைந்த இயற்கை

அரண், தமிழரசரைப் பாதுகாப்பு உணர்வு அற்றவராக - வருமுன் காவாதவராக இருக்கச் செய்தது. வெளியேயிருந்து பகை வரும் என்ற உணர்வற்றவராகவே தமிழரசர் இருந்தனர். எனவே தான் நிலையான படை எதையும் அக்காலத்து, தமிழ் அரசர் அமைக்காது இருந்தனர். போர் வரும்போது திடுமென்று வீட்டிற்கு ஓர் ஆண் பிள்ளை - வயதையும் போர் அறிவையும் பொருட் படுத்தாது பங்கேற்க வேண்டும் என்ற முறையினையே போற்றி வந்தனர். போர்ப் பயிற்சி பெறாத பால் மணம் மாறாப் பச்சிளஞ் சிறாரும் போரில் பங்கேற்க வரவேற்கப் பெற்றனர். புற நானூறு, தலையாலங் காலத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாறு ஆகியன எடுத்துக் காட்டுகின்றன. தமிழரிடம் நிலையான படையின்மை, தொலை நோக்கின்மையைக் காட்டுவதாகும்.

குல தெய்வ வழிபாட்டு முறை, பலதெய்வ வழிபாட்டு முறை, குடிவழி வெறியுணர்வு, உணர்வை மையப்படுத்தும் போர் வெறிமுறை ஆகியன, தமிழரிடையே பல் குழுக்களையும் பாழ் செய்யும் உட் பகையையும் பெருக்கின (திருக்குறள். நாடு 735) ஆக தமிழக வரலாற்றையும், தமிழர் தம் உழைப்பையும் வணிகப் பெருக்கையும் மொழி வழியோ, இன வழியோ, மத வழியோ தொலைநோக்குடன் திட்டமிடாத அரசியல் ஆட்சி முறை இருந்த சூழலைத் தான் அரசியல் ஆட்சி முறை இருந்த சூழலைத் தான் ஆரியம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் என்றோ சூழ்ந்து ஆட்கொண்டன.

தமிழர் வழிபாட்டு நெறி, நிறுவன சமய நெறியன்று. வடபுலத்திலிருந்து வந்த ஆரிய நெறியும் நிறுவன நெறியன்று. இந் நிலையிலேயே சமய நிறுவனங்களாக இறுகிவிட்ட சமணமும், பௌத்தமும், தமிழ் பேசும் மக்களைக் கொண்ட சமய நிறுவன அமைப்பைப் போற்றாத தென்னிந்தியாவையும் தென்னிலங்கையையும் பற்றிக் கொண்டன புதிய மதங்கள், புதிய கடவுளை மட்டும் கொண்டு வரவில்லை. அதனுடன் அயல் மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும் கொணர்ந்து ஆட்சி செய்தன. உள்நாட்டாரை அடிமை கொண்டன. தமிழர் பாதுகாப்புணர்வு அற்றவராகவும், தொலைநோக்கு இல்லாதவராகவும் இருந்ததுடன், அயலாரை ஐயுறுதல், எதிர்த்தல், ஒறுத்தல், மறுத்தல் இல்லாமல் பொறுத்தல் பண்பினராயும், விருந்தினராகப் போற்றும் பண்பினராயும் இருந்தமை, புதிய ஆதிக்கச் சக்திகளிற்கு மிகமிக வசதியாக இருந்தது. புதிய மதப்பண்பாட்டுப் படையெடுப்பு நிகழ்ந்த நிலையே உறக்கத்தில் இருந்த தமிழரை விழிக்க வைத்தது. பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கிய வாதம் என்ற அகப்புறச் சமயங்களும், பாடாண வாதம், பேதவாதம், சிவசம வாதம், சிவ சங்கிராந்த வாதம், ஈசுவர அவிகார வாதம், சிவாத்து வாதம் என்ற அகச் சமயங்களும் சிதறிக் கிடந்த நிலையினின்று விடுபட்டு ஒரே சிவ நெறியாக உருக்கொள்ளத் தொடங்கின. இதனைச் சாதித்தோர் சைவ நாயன்மார்கள் ஆவர்

நிறுவனக் கட்டுக்கோப்பற்ற தமிழர் வழிபாட்டுச் சிதறல்கள், நிறுவனக் கட்டுக் கோப்புக்குள் முதன்முதலில் கொண்டு வரும் முயற்சியே பக்தி இயக்கமாகும். கி.பி 300

முதல் 575வரை பௌத்தமும், சமணமும் அரசுத் துணையோடு, அனைத்திந்திய அரவணைப்புடன் ஆதிக்கத்தில் இருந்தன. தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய அரசுகள் வீழ்ந்து விட்டன - வீழவே ஈழத்திலும் தமிழரசுகள் முனைப்பில் இல்லை - அசோகனின் பௌத்த மதப் பரப்புதலுக்கு, இலங்கை பேரளவு இடமளித்தது - தமிழர் தம் தமிழ்ச் சமய மரபை வெருட்டும் நோக்கிலும் போக்கிலும் அசோகர் .அரவணைப்புடன், சிங்களவர் முன்னோக்குடன், பௌத்தத்தை விரைந்து கடைப் பிடித்தனர் இதன் மூலம் தமிழருக்கு எதிரான அணியில் பௌத்தத்தைத் பேரரசின் துணையுடன் நிலைப்படுத்தவும், சிங்களரை ஒருங்கு திரட்டவும் வாய்ப்பாயிற்று. தெலுங்கையும் ஆரியத்தையும் சார்ந்த பல்லவ அரசு, வட தமிழ் நாட்டைக் கைப்பற்றிக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டது காஞ்சி, புண்ணிய நகரமாக இருந்ததும் கவனத்தில் கொள்ளத்தக்கது. மகேந்திர வர்மனின் வரலாறு, மத்த விலாசப் பிரகசன நாடகம், அப்பர் வரலாறு ஆகியன காஞ்சிபுரம் அயல் மத வயப்பட்டதை அறிவுறுத்துகின்றன. பாண்டிய நாடும், அயல் மத ஆட்சிக்குட் பட்டதை, கூன்பாண்டியன் - மங்கையர்க்கரசி வரலாறு காட்டுகின்றது.

புகழ் பெற்ற பண்டைய தலைநகரான காவிரிப்பூம் பட்டினம், பௌத்தப் பிடிக்கு வந்துவிட்டதை மணிமேகலையும், அங்கு எழுதப் பெற்ற அச்சுத விக்கிரந்தம் விநய விச்சயம் முதலான பௌத்த நூல் வரலாறும் காட்டுகின்றன சேரநாடு, (நம்பூதிரிப்) பிராமணர்களால் பெரிதும் ஆரியமயமாக்கப் பட்டிருந்ததைப் பதிற்றுப் பத்தும் பிற வழக்காறுகளும் எடுத்து உரைக்கின்றன இலங்கையில்

சைவசமயமும், தமிழ் மொழியும், தமிழ் அரசரும், இக்காலத்துப் பௌத்த மத, சிங்கள மொழி, சிங்கள அரசர் மேலாதிக்க எல்லைக்கு உட்பட்டவராகவே இருந்தனர்; இந்நிலையில் வட இந்தியாவில், குப்தர் காலத்தில் (கி.பி 4ஆம் நூற்) பௌத்த சமண சத்திரிய எழுச்சியில் முடங்கிப் போயிருந்த பிராமண - புரோகித வைதிக மத நெறி மீண்டும் குப்த மன்னர் பின் தாக்குதலுடன் மறு எழுச்சி பெறத் தொடங்கியது. பௌத்த சமண எதிப்பலையும், பிராமணச் சார்பு எழுச்சி அலையும், தமிழ் நாட்டிலும் பரவின; பரப்பப் பெற்றன. பௌத்தமும் சமணமும் பிராமண மதங்களால், உள் நாட்டு மரபுச் சமய - வழிபாட்டு நெறிகளின் ஒத்துழைப்புடன் ஒடுக்கப் பெற்றன. தமிழகம், பௌத்த - சமணப் பிடியினின்று மீட்டெடுக்கப் பெற்றதை வேள்விக் குடிச்செப்பேடும், சீவர மங்கலச் செப்பேடும் அவை காட்டும் பாண்டியன் கடுங்கோன் வரலாறும் காட்டுகின்றன. பௌத்தம் தமிழ் நாட்டில் வீழச்சியைச் சந்தித்தாலும் இலங்கையில் வீழ்ச்சியைச் சந்திக்கவில்லை. தமிழக அரசர், மக்கள், பிராமண மத உதவி முதலாய பௌத்த எதிர்ப்புச் சக்திகள் போதுமான அளவு இலங்கையில் இல்லைபோலும் அன்றியும் தமிழர் எளிதில் மதம் மாறும் பழக்கத்தினர். (பார்க்க அறவாணன் : தமிழர் தம் மறுபக்கம் வழி பாட்டில் (தடுமாற்றங்கள் ப.192, 198) சிங்களர் அத்தகையோர் அல்லர் போலும், மாற்றாராகிய தமிழர் சமயத்தைப் பின் பற்றலாகாது என்ற பௌத்த பிக்குகளின் அழுத்தமான பிடிப்பும் காரணமாக இருந்திருக்கலாம் (பௌத்தத்திற்கு மாறிய சீனர், சப்பானியர் முதலானோர் மதம் மாறாமை எண்ணத் தக்கது இஸ்லாமிய

நெறிக்குச் சென்றவர்களும் எளிதில் வேறு மதத்திற்கு மாறுவதில்லை)

ஈழத்தில் சைவத்திற்கு எதிர் முனையில் பௌத்தம் சிலிர்த்துக் கொண்டு நின்றது. சமூகத் தளங்களான மொழி, இனம், மதம் என சமூக ரீதியாகவும், அவற்றைத் தழுவி ஆளும் அரசியல் ரீதியாகவும், சமூகம், அரசியல் இரண்டையும் அணைத்து நிற்கும் பொருளியல் ரீதியாவும் சிங்களர் மௌன எழுச்சி கொண்டிருந்தனர் இதன் விளைவாகத் தமிழரும் மொழி, இன, மதத் தளங்களில் நிமிர்ந்து நிற்க வேண்டியது காலக் கட்டாயமாயிற்று அதுவே இன்றுவரை நீடிப்பதாயிற்று மாறாக சைவம், தன் வண்ணத்தை ஆரிய வெள்ளையுடன் குழைத்துக் கொண்டதால், தனக்குரிய வண்ணத்தை இழந்து வெளிறிப் போக வேண்டுவதாயிற்று, அன்றியும் தமிழர் பின் பற்றிய சிவ் சமயம் முயற்சியை வற்புறுத்தியதை விட முன்வினையை உரக்க வற்புறுத்தியது. பௌத்தம் ஆன்மா என்ற ஒன்று உண்டு என்பதை ஏற்பதில்லை இதற்கு நேர் மாறானது சைவசமயம்: சைவம், ஆன்மாவை முற்றுமாக ஒப்புக் கொள்வது ஆன்மா, ஆணவம், கர்மம், மாயை என்ற மூன்றால் கட்டுண்டு கிடக்கின்றது. இவற்றுள் கர்மம் மூவகை, சஞ்சிதம், பிராப்தம், ஆகாமியம், முற்பிறவிகளில் செய்து உரிய பயனை இன்னும் நுகராது சேர்ந்து இருக்கும் வினைத் தொகுதி சஞ்சிதம் : அவ் வினைத் தொகுதியில் இருந்து இப் பிறப்பில் நாம் அனுபவிப்பதற்கென எடுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட பகுதியே பிராரப்தம் இப் பிராப்த்தத்தை அனுபவிக்கும் போது புதிதாக ஈட்டும் வினை ஆகாமியம். ஒருவன் செய்யும் தீவினையும் ஆன்மாவைக்

கட்டுப்படுத்தும். அது இரும்பு விலங்கு போன்றது. அவன் செய்யும் நல் வினையும் தளையே! அது பொன் விலங்கு போன்றது ஆன்மா வினை, மாயை, ஆணவத்தைச் சார்ந்து வாழுவதினின்று விடுபெற்று பதியை (கடவுளைச்) சார்ந்து நிற்றல் வேண்டும். ஆன்மா ஒருபோதும் தனித்து நிற்பதில்லை. கட்டுண்ட நிலையில் ஆணவத்தைச் சார்ந்து நிற்கும்; கட்டறுத்த முத்தி நிலையில் கடவுளைச் சார்ந்து நிற்கும் சார்ந்தே நிற்றல், முன் வினையையே நம்பியிருத்தல் நல் வினையும் விலங்கே எனல் ஆகியன தத்துவ நிலையில் கருத வேண்டியனவாக இருப்பினும் பாமர நிலையில் அது பேரளவு சமுதாயத்தைத் பாதித்த ஒன்றாகச் செயற்பட்டு விட்டது. தமிழர் பொருளாதார ரீதியில் வர முடியாமைக்கு அவர் முற்றுமாக நம்பிய கர்மக் கொள்கை காரணமாக இருந்தது; இருக்கின்றது

புராட்டஸ்டெண்டு நாடுகளில் முதல் முதலாளித்துவ முறை கருக்கொண்டது என்றார் மாக்ஸ் வேபர் (Mac Weber 1864 - 1920) கால்வின் என்ற மத அறிஞர் தம் கருத்துகள் புராட்டாஸ்டெண்டு தொடங்கிய காலத்தில் பெருஞ்செல்வாக்கில் இருந்தன. அவர் கூறினார்

"மக்கள் கடுமையாக உழைக்கவேண்டும் உழைப்பில் கிடைக்கும் வருவாயை உடனுக்குடன் சுக வாழ்க்கைக்குப் பயன்படுத்திப் பொருளை வீணாக்குதல் கூடாது. அப்பொருளை மீண்டும் மீண்டும் இலாபம் கொடுக்கிற தொழில்களில் முதலீடு செய்து மேலும் மேலும் பொருளீட்ட வேண்டும். அப்படிச் செய்தவருக்கே கர்த்தரின் கருணை வாய்க்கும்".

கால்வினுடைய இந்த மத போதனையே புராட்டஸ்டெண்டு மக்களைப் பெரிதும் உழைக்க வைத்து பொருளீட்டச் செய்து பணக்காரர் ஆக்கிற்று. சான்று: ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, வேபர், மதக் கருத்துகள் உறுதுணையாக இல்லாத நாட்டு மக்கள் முதலாளித்துவ நெறிக்கு எழுவதில்லை என்பதற்கு இந்தியரை (தமிழரை) எடுத்துக் காட்டி விளக்குகிறார்.

எல்லாம் தலைவிதிப்படியே அமைகின்றன என்ற கர்ம மதக்கோட்பாட்டில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையின் காரணமாக மக்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதில்லை. (சமூக வியல் - 50) பொருளியலில் உயர்வதும் இல்லை.

பதி, பசு, பாசம் என்ற சைவ சமயக் கொள்கை, மனிதனைத் தனித்தனியாகவே நோக்கிற்று. அவனவனிற்கு உரிய கர்மாவை அவனவனே நீக்குதல் வேண்டும். தன்னையே நினைக்க வைக்கிறது தன்னையே ஆராய வைக்கிறது பாசக் கட்டினின்று ஒவ்வோர் ஆன்மாவும் கட்டறுத்துக் கடவுள் திருவடியை அடைதல் வேண்டும். தன்னையே உள்நோக்கும், இந்தத் தத்துவம் தத்துவ அளவில் சிறந்ததாயினும் சமுதாய அளவில் பொது நலனிற்கு எதிராகச் செயல் பட்டது; செயல்படுகிறது தமிழரிடையே குழு உணர்வும், கூட்டுணர்வும் வளராமைக்கும், தமிழர் என்று ஒன்றுபடாமைக்கும், ஆன்ம வாதம் முதன்மைக் காரணம் ஆகும். ஒரு தனி மனிதனைவிட, அவன் சார்ந்த சமுதாயமே மிக ஆற்றல் வாய்ந்தது என்ற உண்மை தமிழரிடையே அறியப்படாமல் போனதற்கு அவர் தம் சமயச் செயற்பாடும் காரணமாயிற்று.

நிறுவன அமைப்பு எய்தாமையால் கூட்டுணர்வை இழக்க வேண்டுவதாயிற்று. தனிமனித ஆன்ம வாதத்தால், தனி உணர்வு மேலும் இறுகுவதாயிற்று.

ஒரு மனிதன், தனியாக இருப்பது ஒரு நிலை, அவன் சமுதாய உறுப்பாக இருப்பதே உயிர் நிலை, மெய் நிலை, தனிமனிதனின் செயல் முறைகள், சிந்தனை முறைகள், உணர்ச்சி முறைகள் முதலானவற்றை அவனே முடிவு செய்வதுமில்லை. பின்பற்றுவதுமில்லை ஒருவன் உண்ணும் முறை, உடுக்கும் முறை, பழகும் முறை, பேசும் மொழி அனைத்தையும் தானே செய்வதாக எண்ணுதல் பேதமை. ஒருவன் வாழும் சமுதாயமே மனிதன் பின்பற்ற வேண்டிய ஒழுகலாறுகளைத் தீர்மானிக்கின்றது.

தனிமனிதனின் வேறுவேறான உடலியல், உளவியல் தன்மைகளிற்கு அப்பால் சமூகவியலே மனிதனைக் கட்டுப்படுத்துகிறது. இப்படிச் சமூகத்தால் முடிவு கட்டப்பெறுகின்ற செயலாறுகள், சிந்தனை முறைகள், உணர்வு முறைகள் ஆகியவற்றை எமில் துர்க்கேம் (Emile Durkheim 1958 - 1917) என்ற சமூகவியல் அறிஞர் சமூக மெய்மை (Social fact) என்று கண்டறிந்து கோட்பாடாக அறிவித்தார். இச் சமூகவியல் உண்மை கொள்கையாக அறியப்படாவிடினும் நடை முறையில் பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம், யூதம் ஆகியவற்றால் கடைப்பிடிக்கப் பெற்றது. எனவேதான் அம் மதத்தாரிடை கூட்டுணர்வு கூடுதலாக உள்ளது தமிழர் போற்றிய சமயங்களில் சமூக மெய்ம்மை உணரப்படவில்லை. எனவே தமிழர் தீவுகளாகவும், திட்டுகளாகவும் விலகி விலகி நின்றனர்,

நிற்கின்றனர். ஆன்மாவின் உயர்ந்த இலட்சியம் கடவுளை அடைவதே. ஆன்மாவின் முயற்சிகள் அனைத்தும் அதன் நன்மையை மட்டுமே நோக்கமாகக் கொண்டது ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்களிலிருந்தும் ஆன்மா தன்னை விடுவித்துக் கொள்ளுதல் வேண்டும், இறைவனது துணையைக் கொண்டு ஆன்மா விடுதலை எய்த வேண்டும். அவனருளால் அவன் தாள் வணங்கி (சிவபுராணம் - திருவாசகம்) மாறாக கிறிஸ்தவம் போன்ற மதங்கள், சக மக்களின் நலத்தின் மூலமும், சமுதாயத் தொண்டின் மூலமும் மனிதனைக் கடவுளை அடைய ஆற்றுப் படுத்துகின்றன.

தன்னை அறிதலும், உணர்தலும் முதன்மை யானவையே. அதனினும் தான் வாழும் சமுதாயத்தை அறிதலும், உணர்தலும் மிக முதன்மையானவை நான் உணர்வு அழியவும் நாம் உணர்வு பெருகவும் இது ஒரு பெரும் வழி தனி உணர்வு அழிந்து குழு உணர்வு தோன்றவும் ஊன்றவும் இதுவே வழி. எனவே தான் சில சமய நிறுவனங்களில் ஞாயிறு வெள்ளி எனக் குறிப்பிட்ட நாட்களில் கூடுதல் கடவுள் போதனை மட்டுமன்றி சமுதாயப் போதனைகளைக் கேட்டல், ஒருவரோடு ஒருவா பழகல், உரையாடல் ஆகியன சமய நெறிகளாகப் போற்றப் பெறுகின்றன. கோயில் பூசாரிக் குருவிற்கு ஒவ்வொரு வரையும் தெரியும், தெரிதல் வேண்டும். பிறப்பு, திருமணம், இறப்பு முதலான சடங்குகள் குருவிற்குத் தெரியவே நிகழும், நிகழ்ந்தாக வேண்டும். ஒவ்வொரு செயலையும் சுற்றி நாட்டவர் வழக்கங்கள், வழக்கப்பாடுகள், சட்டங்கள் ஆகியன ஒரு தொகுதியாக அமைக்கப் பெற்றிருக்கும். ஒரு தேவையை நிறைவேற்றுவதற்காக ஒரு செயல் செய்ய

வேண்டி இருக்கிறது என்றால் அச் செயலை எப்படிச் செய்வது என்ற வழியைச் சமய நிறுவனம் காட்டும் காட்டவேண்டும். வாழ்க்கையைச் சேர்ந்த அனைத்துச் சடங்குகளும், முரணின்றி, வேறுபாடின்றி எல்லா இடத்திற்கும் எல்லா மனிதருக்கும் சாதி, மொழி வர்ண வேறுபாடின்றி ஒரே மொழியாக இருக்கும், இருக்க வேண்டும் இதனால் இவற்றால் ஒரு சமய நிறுவன உறுப்பினரிடையே கட்டொருமைப்பாடு பெருகும். சமுதாயக் கட்டொருமைப்பாடு மிகுதியாக உள்ள சமுதாயம், நம்பிக்கைச் சமுதாயமாக அமையும். குறைநிறை உள்ள சமுதாயம் அவநம்பிக்கைச் சமுதாயமாக அமையும். இவ்வுலக வாழ்க்கையில் முன்னதில் அக்கறை இருக்கும். பின்னதில் இராது. தனி மனிதர்களின் பண்புகளோ, உளவியல் கூறுகளோ, உடலியல் கூறுகளோ முதன்மையானவை இல்லை ஒரு சமூகத்தின் கட்டொருமைப்பாடு அச் சமூக உறுப்பினர்கள் எந்த அளவிற்கு நெருக்கமான உறவு கொண்டிருக்கிறார்களே என்பதைப் பொறுத்தே இருக்கிறது சில பொதுவான நட்வடிக்கைகள் அமைந்து அவற்றில் எல்லோரும் பங்கேற்றுக் கொண்டால் எல்லோரிடையும் நெருக்கமான உறவு ஏற்படும். (Emile Durkheim சமூகவியல் 37 - 39) பிரஞ்சுச் சமூகவியல் அறிஞரான துர்க்கேம், சமூகக் கட்டொருமைப்பாட்டிற்குப் பெயர்போன யூத இனத்தைச் சார்ந்தவர் பிரான்சில் வாழும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர், புராட்டஸ்டெண்டு ஆகிய இருவரிடையே தரவுகளைத் திரட்டி ஆராய்ச்சி நிகழ்த்தினார் மதம், மொழி, இனம், பண்பாடு முதலானவற்றால் மக்கள் ஒன்றுபட்டிருப்பது ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருப்பது சமூகக்

கட்டொருமைப்பாடு என நிறுவினார். இத்தகு கட்டொருமைப்பாடு குறைவாக இருக்கும் சமுதாயத்தில் தற்கொலை விகிதம் மிகுதியாக இருக்கும். கட்டொருமைப்பாடு மிகுதியாக உள்ள சமூகத்தில் தற்கொலை விகிதம் குறைவாக இருக்கும். இதனை விளக்கி அவர் எழுதிய (LE SUICIDE') என்ற நூல் உலகப் புகழ் பெற்றதாகும் தமிழர், தற்கொலையை மான உணர்வின் வெளிப்பாடாக ஏற்றுக் கொண்டவர் என்பதும், அவரிடையே தற்கொலை விகிதாசாரம் மிகுதி என்பதும், அன்னோர் கட்டொருமைப்பாடு குறைந்தவர் என்பதும் சுட்டத்தக்கன. (விரிவிற்கு பார்க்க : க.ப. அறவாணன் - தமிழர்தம் மறுபக்கம் ப. 152 - 170). தமிழர் பின்பற்றிய பண்டைய சமயங்கள் தற்கொலையை ஓர் உயர் பண்பாகவே எடுத்துக் கொண்டன. உடன்கட்டை ஏறுதல், நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாதல், நாண்டு இட்டுச் சாதல் வேண்டும் ஆகியன சமூக ஒப்புதலும், சமய ஒப்புதலும் பெற்றவை வாழ்தல் வேண்டும் என்பதைவிடச் சாதல் வேண்டும் (பிறப்பறுதல் வேண்டும் என்றால் இறப்புறுதல் வேண்டும் என்பதுதானே) என்ற விழைவை உணர்த்தும் தமிழ்ப் பாக்களும் மிகுதி. அவை போற்றப் பெறுகின்றன. இவ் உலக இன்பத்தைக் குடிமக்களுக்கு உறுதிப்படுத்த இயலாத சமய-அரசியல்-பொருளியல் அமைப்புகளே, இறப்பிற்குப் பின் வரும் மறுவுலக வாழ்க்கைப் பேற்றை உயர்வாகக் கற்பனை செய்கின்றன. கற்பிக்கின்றன. வாழ்வில் நேர்ந்திருக்கும் துயரத்திற்கும் உண்மைக் காரணமான அரசியல் - சமய - சமுதாயச் சக்திகளான அடையாளம் காட்டவும், எதிர்த்துப் போராடவும் ஆற்றலற்ற சமய-சமுதாய அமைப்புகளே கர்மக் கொள்கையையும், முற்

பிறப்பு, மறுபிறப்பு கொள்கையையும் வற்புறுத்துகின்றன. ஆளுமை ஆற்றலை வளர்க்க முடியாத அமைப்புகளே, மாற்றாக ஆறுதலை வளர்க்கின்றன· வளர்க்கும்.

சைவம் : கர்மம், மலம், மார்க்கம் முதலாய நம்பிக்கை ஊட்டுதலால், தமிழ் மானுடக் குடும்ப அமைப்பில் - அரசியல், சமுதாய, பொருளாதாரக் காரணங்களால் நேரும் துயரை மறைத்து, வினைக் கொள்கையை வற்புறுத்துகிறது. மெய்க் குற்றவாளிகளை, பொதுமக்கள் நேர்ப் பார்வையினின்று மறைக்கவும், இல்லாமையையும் இருப்பதையும் அப்படியே ஏற்றுக்கொள்ளவும், போதும் என்று ஆறுதல் அடையவும் மேல் முயற்சியைக் கைவிடவும், துயரத்திற்குரிய கொடியோரை எதிர்க்காது இருக்கவும் வழி செய்கிறது வினைக்கொள்கை. இது தனிமனித அமைதிக்கு ஏற்பாக இருக்கலாம். ஆனால் நேர்ந்த சிக்கலுக்குரிய நீண்ட காலத் தீர்வன்று. ஏழ்மைக்கும், துன்பத்திற்கும், சமமின்மைக்கும் காரணமான அநியாயச் சக்திகள் நிலைபெறவும், வளம்பெறவும் இப்போக்கு வழிவகுத்தது: வழிவகுக்கும். கர்மத்திற்கு ஏற்றவற்றை - உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறச் செய்வதிலும், பெற்று நல்குவதிலும், உரிய கர்ம பலனை நல்காதோரை எதிர்ப்பதிலும், மானுட ஆன்மா அக்கறை கொள்ளுமாறு, வினைக் கொள்கை புதிய செயல் வடிவம் பெறவேண்டும்.

கடமையைச் செய் பலனை எதிர் பாராதே என்பது எப்படி மெய்க்கர்ம விளக்கமாக இருக்க முடியும்? தண்டனையைக் கண்ணிற்குத் தெரியா, அடுத்த சென்மத்திற்குத் தள்ளி வைத்தால், கண்ணிற்கு எதிரே

கொடியவர்களால் துன்புறுத்தப்படும் நிகழ்காலச் சமுதாயம் நம்பிக்கை அற்றுப் போகும்.

அறிவியல் அறைகூவலுக் கேற்ப, அமைப்பினை இழக்காமல், தமிழ்ச் சமுதாயம், புதுக்கோலம் பூண வேண்டும், இன்றைய இராக்கட் வேகச் சமூகத்திற்குப் பதியும் முதன்மை அன்று: பசுவும் முதன்மை அன்று பாசம் நோக்கும் நேசம் காட்டும் பகுப்பொருள் வேட்டையாக விளங்கும் வாழ்வே முதன்மை மறுபிறவியில் இறைவனடி எப்படிச் சேர்வது என்பதன்று சிக்கல். இன்றைய சூழலில் எப்படி வாழ்வது என்பது தான் சிக்கல்: எப்படிச் சாவது என்பதன்று

தமிழினத் தோல்விக்கும், தமிழர் சமயத் தோல்விக்கும் காரணம் எம் சமயம் நிறுவன அமைப்பின்றி இருத்தல்: கூட்ட உணர்வை மட்டும் ஈட்டுவதாக இருத்தல் சமூக உணர்வை ஊட்டாது இருத்தல். ஆகியன மெய்க் காரணங்களாகும். இனிவரும் காலத்தில் எமது சமயம், கடவுளுக்குத் தொண்டு செய்யும் சமயமாக மட்டும் இல்லாமல், மக்களுக்குத் தொண்டு செய்யும் நிறுவனமாக மாற வேண்டும் நாம் மாற்ற வேண்டும். மாறினால் தான் - மாற்றினால் தான் வெற்றி.

# 3

# தமிழ்ப் பண்பியல்

*"தமிழர்களுடைய அரசியல் பொருளாதார சமூகச் சிக்கல்களுக்கு உரிய தீர்வுகள் அக்கரையில் இருப்பதாகச் சிற்றிதழ் எழுத்துகள் காட்டின. இந்த அக்கரை இங்கிலாந்தாக, அமெரிக்காவாக, சோவியத் ஒன்றியமாக இருந்தது. விடுதலை பெற்று ஐம்பது ஆண்டுகள் ஆகியும் அமெரிக்க, சோவியத், தென்னமெரிக்க ஆயத்தச் சட்டைகளைக் கண்மூடி அணிய எடுத்துக் கொண்ட முயற்சி தமிழரின் தோல்விக்கு ஒரு காரணம்"*

*** அரசியல்**

***எழுத்தியல்**

***திரையியல்**

I

# தமிழர் பண்பாடு என்ன ஆனது

இந்தக் கேள்விக்கு ச் 'சுருக்' என்ற நேர் விடை: அப்படியான பண்பாடு த மிழ் நாட்டில் இல்லை என்பதுதான்.

இந்த விடையில் மெய்ம்மையை உள்வாங்கிக் கொள்ள அடிப்படைகள் சிலவற்றை நாம் விளக்கியாக வேண்டும்.

பண்பாடு என்றால் என்ன?

ஒருவனுடைய சீர்மையைக் குறிப்பது - அதுமட்டு மன்று, ஒருவனுடைய உயர் ரசனையைக் குறிப்பது. ஒருவனுடைய உயர் குணங்களைக் குறிப்பது - அது மட்டுமன்று, சமூகவி யலும், சமூக மானுடவியலும், சமூக உளவியலும், விளக்கும் முறை வேறு பண்பாடு என்பது, தனி மனிதனைச் சமூகமயமாக்கும் ஒரு சமூகச் செயற்பாடு எனவேதான் மனிதர்களைச் சமூகத்துடன் இணைத்து ஒட்ட வைக்கின்ற சிமெண்ட் - பண்பாடு என்பார்கள்.

பண்பாடு ஒருவரால் மட்டும் கண்டறியப்படுவதன்று, கடைபிடிக்கப்படுவதன்று சமூகத்தின் பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்படுவது. தலைமுறை தலைமுறையாக வருவது; அரசியல் பொருளாதாரச் சமூகக் காரணங்களால் மாறுவது.

ஆக, பண்பாடு என்பது சமூக உறுப்பினர்கள் என்ற முறையில் நாம் சிந்திக்கிற (Thinking) செய்கிற (Doing), கொண்டிருக்கிற (Having) என்ற மூன்றையும் உள்ளடக்கிய சிக்கலான தொகுதியாகும். அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம், சமுதாய வழி மானிடன் பெற்றிடும் திறமைகள், பழக்கங்கள் ஆகிய அனைத்தும் பண்பாட்டில் அடங்கும்.

தமிழர் பண்பாடு ஆரியர் பண்பாடு, ஆப்பிரிக்கா பண்பாடு என்று இனம் பிரிக்க இயலுமா? இயலும். ஒரு சமூகத்தினரைப் பிற சமூகத்தினிடமிருந்து பிரித்துக் காட்டுகின்ற-அச்சமூக வாழ்விற்கு மிகவும் இன்றியமையாத-அடிப்படையான முக்கியத்துவம் வாய்ந்த தொடர்ந்த தலைமுறை தலைமுறையாக வருகின்ற - ஒரு சில அடிப்படைப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் - மனப்போக்குகள், செயல் தன்மைகள் எனப் பகுத்தும் பிரித்தும் தனித்தும் காணமுடியும்.

பண்பாடு என்பது தனிமனிதனின் தன்னிச்சை முடிவாக இருக்க முடியாது. அது ஒரு குழுவின் - சமுதாயத்தின் முடிவு. எனவே பண்பாடே, சமூகத்தின் உளவியலையும் தீர்மானிக்கிறது எடுத்துக்காட்டாகத் தமிழர்கள் விருந்தோம்பும் பண்பாட்டை வற்புறுத்தும் மக்களினம். தமிழர்கள் அனைவரிடையேயும் இருக்கும் ஒரு பொதுப் பண்பாடு. இப்பண்பாடே, இம்மக்களின் வீழ்ச்சிக்கும், காரணமாக இருந்தது. புதியவர்களை விசாரிக்காமலே விருந்தினராக ஏற்பது, போற்றுவது, நம்புவது உயர்ந்த பண்பாடு என்று கருதப் பெற்றதைப் பெரிய புராணம்,

திருவிளையாடற் புராணம் முதலியன உறுதி செய்கின்றன. வாஸ்கோடா காமா, இங்கே வந்தபோது, வரவேற்பு நிகழ்ந்தது; வாஸ்கோடகாமா வழியினர், ஜப்பான் சென்ற போது எதிர்ப்பு நிகழ்ந்தது முடிவு, ஜப்பான், ஐரோப்பிய ஆதிக்கத்திற்கு இடங்கொடாத நாடாக அன்றும் இருந்தது; இன்றும் இருந்து வருகிறது.

விதியையும், மறு உலகையும் நம்புவது — தமிழர் பண்பாடு, இம்மை உலக வாழ்க்கை வெறுப்பது தமிழர் பண்பாடு; சாவை (இறைவன் திருவடி சேர்தலை) விரும்பி அழைப்பது தமிழர் பண்பாடு, கிரேக்கப் பண்பாடு, இதற்கு நேர் எதிரானது. விதி, மறு உலக வாழ்வு, ஆகியவற்றையும் கடவுளையும் கோயிலையும் கூடக் கிரேக்கப் பண்பாடு ஏற்பதில்லை. முடிவு என்னவாயிற்று? தமிழரிடம் முயற்சி இல்லாதொழிந்தது - விதியை நம்பியதால் மறு உலக வாழ்வையே நம்பிக் கிடந்ததால், இன்பம் சிற்றின்பம் ஆயிற்று; பெண், விலக்கத் தக்கவள் ஆனாள்; இறைவன் திருவடி வேட்கையே இலட்சியம் என்றதால், தற்கொலையும் பெருகிற்று; சரி என்று ஏற்றுக் கொள்ளப் பெற்றது கிரேக்கப் பண்பாட்டை அடித்தளமாகக் கொண்டெழுந்த ஐரோ-அமெரிக்கப் பண்பாடு உலகில் ஆதிக்கப் பீடம் ஏறிற்று

'மக்களின் பண்பாட்டை ஒட்டியே, ஓரினத்தின் வெற்றி தோல்விகள் அமைகின்றன. சான்றாக, ஜப்பானியர் இடையே, மன்னர், நாடு, மொழி ஆகியவற்றின் மேல் பயபக்தி, 'தம் பெயரைக் காப்பாற்றிக் கொள்ளல்' தோல்வி, கேலி, ஏமாற்று ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளா மனநிலை

முதலாயின பண்பாடுகளாக விதைக்கப் பெற்று வளர்க்கப் பெறுகின்றன.

சிந்தோ என்ற ஜப்பானிய மதம், வலிமையான தேசிய நோக்கையும், அயலார் மேல் எதிர்ப்புணர்வையும் ஜப்பானியர்க்கு ஓயாது ஊட்டுகின்றது. ஜெர்மனியர், அயலாரிடம் வெறுப்பும், தம்மொழி, பண்பாடு, இனம் ஆகியவற்றின் மேல் உயர்வும் கொண்டவர். மியட் (Mead) என்ற சமூக உளவியல் அறிஞர், பண்பாட்டுக் கூறுகளை ஆராய்ந்து, மனித ஆளுமை வகைகளையும் அடையாளங்காண முயன்றார். நியூகினியாவைச் சேர்ந்த மூன்று இனக்குழு மக்களைத் தம் ஆய்விற்கு உட்படுத்தினார். அரபிஷ் (Arapsh) முண்டுகுமர் (Mundugumor), சாம்புலி (Cambuli) என்ற ஒரே தீவுப் பரப்பு மக்களின் பண்பாடுகளை நேரில் சென்று தகவல்கள் திரட்டிப் பின்வரும் முடிவுக்கு வந்தார்.

அரபிசியர்கள் கூட்டுறவு மனப்போக்கினர்; பெருந்தன்மை, பொறுப்புணர்ச்சி, ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுதல், இவர்தம் பொதுப் பண்புகள் நல்லனவற்றையே ஏற்கின்றனர்; ஆண்-பெண் என்று பாலிடைவெளி, இளையவர் - முதியவர் என்று வயது இடைவெளி, அதற்குத்தக வேறுபாடுகள் போற்றப் படுவதில்லை வன்முறையாளரை விலக்கி வைக்கின்றனர்.

முண்டு குமர்கள் சச்சரவும், பலிக்கொடுமையும் உடையவர்கள். வன்மைச் செயல்கள், வீரம் இவற்றை வற்புறுத்துபவர்கள்; பொறாமை, புண்படுத்தல், பழிக்குப்பழி,

பாலினக் கவர்ச்சி, பகட்டு ஆகிய பண்பாட்டை உடையவர்களாக உள்ளனர்.

சாம்புலியினர், கலை நோக்கினர் ஆண் - பெண் என்று பாலின அடிப்படையில் சமூகத் தகுதிகளை வரையறுத்துள்ளனர் காதல் செய்வதிலும், குடும்ப ஆட்சியிலும் பெண்ணுக்கே முன்னுரிமை நல்கியிருந்தனர் ஆண்கள், சச்சரவு, ஐயுறுதல், தந்திரம் ஆகிய இழி பண்புடையவராக இருந்தனர்.

மேற்கண்ட பண்பாடு, பண்பாட்டு வழி ஆளுமை பற்றிய . செய்திகள், தமிழர்தம் பண்பாட்டை அளவிட உதவுவன என்பதற் கா க முன்மொழியப் பெற்றன. இப்பின்னணியில் தமிழர்தம் பண்பாட்டையும், ஆளுமையையும் அளவிட வேண்டும்.

தமிழர், கிட்டத்தட்ட 'முண்டுகுமர்' பண்பாட்டுப் பட்டியலில் இடம் பெறத் தக்கவராகவே உள்ளனர்.

1. போர்க்குணமின்மை
2. தாழ்வு மனப்பான்மை
3. அயலாரை, அயல் நாகரிகத்தை, அயற் பண்பாட்டைக் கண்மூடி வரவேற்றுப் போற்றியமை
4. தொலை நோக்கின்மை

என்ற நான்கும், இவர்தம் பண்பாட்டில், இவரிடம் பரந்து போன ஆளுமைகளாகத் தோற்றுகின்ற ன.

தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை, சிந்தனை, செயலாக்கம், உடைமை என்ற மூன்றடிப்படையில் உற்றுப் பார்த்தால், சிந்தனை அளவில் மட்டுமே, அன்னோர் சிறந்திருந்தனர். ஏனைய செயலாக்கம், உடைமை ஆகிய இரு பெரும் பண்பாட்டுக் களங்களில், அன்னோர் தொடர்ந்து அடித்தட்டிலேயே நின்றுள்ளனர்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' ஈகை, ஒப்பரவு, முதலாயின முழங்கப்பட்டன இவ்விலக்கிய முழக்கங்கள் அல்லது பழக்கங்கள் எல்லாத் தட்டு மக்களிடமும் இருந்தனவா என்பது தமிழர் வரலாற்றில் பெரிய கேள்வி. தமிழ் மொழியைப் பேசுபவர் தமிழர் என்ற கறுப்பின திராவிட மக்கள் என்று முறையே மொழியும், இனமும், தமிழர் வரலாற்றில், கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் முன்னிறுத்துப் பெற்றது போல வேறு எந்தக் காலத்திலும் முன்னிறுத்தப் பெறவில்லை. இளங்கோ அடிகள், கவியுலகில் முன்னிறுத்தினார் அரசியல் உலகில், 'தமிழ்' 'தமிழர்' என்ற தேசிய அடிப்படை அடையாளங்கள் இளங்கோ அடிகள் காலத்திலேயே, பொருட்படுத்தப் பெறவில்லை என்பதைச் சேரன் செங்குட்டுவன், தமிழர் அவமானப்படுத்தப்பட்டதை ஒட்டி எடுத்த போரையும் வெற்றியையும், சோழனும், பாண்டியனும் அவமானப்படுத்தியதிலிருந்து தெரிகிறது.

தமிழ் நாட்டில், குடிவழிப் பண்பாடும், சாதிவழிப் பண்பாடும், மதவழிப் பண்பாடும் வளர்க்கப் பெற்றன. ஆதிக் கிரேக்கம்,ரோம், சீனம் ஆகிய பகுதிகளில் பண்பே வளர்க்கப் பெற்றது போல, மொழிவழித் தேசியமோ, தேசியப் பண்பாடோ வளர்க்கப்படவே இல்லை. அன்றியும்,

பண்பாடு, மேல் தட்டு மக்களுக்கு ஒன்றாகவும், அடித்தட்டு மக்களுக்கு வேறாகவும் - சமயத்தில் எதிராகவும் கூட இருந்தது. சான்றாக அரசன், எத்தனைப் பெண்களையும் மணந்து கொள்ளலாம் என்பது, பல்லவர் காலந்தொடங்கி எதிர்ப்பு இன்றிப் பின்பற்றப்பட்டது பொது மக்களிடம், அத்தகு தாராளம் காட்டப்பெறவில்லை. தமிழகப் பழங்குடி மக்களான தோடர்களிடம் ஒரு பெண், ஒரு குடும்பச் சகோதரர்கள் அத்தனைப் பேரையும் மணந்து கொள்ளுதல் வழக்கமாக இருந்தது. ஆனால், ஏனைய மக்களிடத்து இப்பழக்கம் போற்றப் பெறவில்லை எனவே, தமிழ் நாட்டில் குடிவழி, சாதிவழி, மதவழிப் பண்பாடுகளே இருந்தன. பொதுமைப்படுத்தும் தமிழ் வழிப் பண்பாடு இல்லை என்றே கருத வேண்டியுள்ளது.

இதனால்தான், இவர்களிடம் இருந்த சில பண்பாட்டு அடையாளங்களும், புதிய மதங்களும், சாதிகளும் வந்த போது அழிந்தன; மாறுதலுக்குள்ளாயின. குறிப்பாகத் தமிழர் உணவு வகைகள், உடுத்தும் முறைகள் - பண்பாட்டின் கூறுகளே. இசுலாம், தமிழகத்திற்கு வந்த போது, இசுலாமிய மதம் என்ற கடவுட் கோட்பாடு மட்டும் பரப்பப் பெறவில்லை. அம்மதத்தைப் பரப்பிய அராபியரால் தமிழ்ப் பண்பாடுகளும் மாற்றம் பெற்றன. தமிழக, தமிழீழ இசுலாமியர் அடிப்படையில் தமிழரே. உணவு, உடை, திருமணம், பிறப்பு, இறப்புச் சடங்குகளால் அவர் முற்றும் அராபியப் பண்பாட்டினராகி விட்டனர். கிறித்துவ மதம் அறிமுகமான போது, கிறித்துவ மத வழிக் கடவுள் கோட்பாடு மட்டுமின்றி, அம்மதத்தைப் பரப்பிய ஐரோப்பியப் பண்பாடு, உணவு, உடை, பழக்க வழக்கம்,

பேச்சு, மனப்போக்கு ஆகியவற்றிலும் உடும்புப் பிடியாகத் தொற்றிக் கொண்டது.

இசுலாமிய, கிறித்துவ மதங்களைப் போலவே, வட இந்தியாவில் இருந்து தென்னிந்தியா போந்த, ஆரிய இந்து மதம், தனக்குரிய மொழி, சமயம், வழிபாடு, பழக்க வழக்கங்களைத் திணித்து நிலைப்படுத்தியது கி.பி. மூன்றாம் நூற்றாண்டளவில், தமிழர் மரபு, மதம், மொழி, வழிபாடு, பண்பாடு, பழக்க வழக்கம் ஆகியவற்றை இடம் பெயரச் செய்தும், அழித்த வட இந்திய மரபு, மதம், மொழி, வழிபாடு, பண்பாடு, பழக்க வழக்கம் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. பதினேழு நூற்றாண்டுகள் ஏற்பட்ட கலப்பு ஆதிக்கம் என்பதால் தமிழர்க்குரியது எது, உண்மை, அயன்மை எது என்று அடையாளம் காண முடியவில்லை. என்றாலும் கில்பொட்கிலேட்டர், எமனோ, பரோ, மறைமலையடிகள், காசு பிள்ளை தேவநேயப் பாவாணர், தந்தை பெரியார் முதலானோர் இருபதாம் நூற்றாண்டில் அடையாளம் கண்டு எடுத்துக் காட்டினர்.

தற்காலத்துத் தமிழர் பண்பாட்டை அடையாளம் காணுதல் எளிது இல்லை. உணவு, உடை, பழக்க வழக்கங்கள் ஆகியன சிற்றூர்ப் புறங்களில் மாறாமல் ஓரளவு இருந்து வருகின்றன; நகரங்களில், இவை உயிருக்கு ஊசலாடி வருகின்றன; ஒவ்வொன்றாக மடிந்தும் வருகின்றது. எஞ்சி இருப்பது 'தமிழ்' என்ற மொழி மட்டுமே. இதுவும் கூடப் பல மொழிகளின் தொடர் ஆதிக்கத்தாலும், கலப்பாலும் அல்லாடிக் கொண்டிருக்கிறது.

தமிழ் ஈழத்தில் மட்டுமே, தமிழ் தனக்குரிய கௌரவத்தை அடையப் போராடிக் கொண்டிருக்கிறது தற்போது, உலகத் தமிழர்களை அடையாளப் படுத்தும் ஒரே அம்சமாகத் 'தமிழ்' என்ற மொழியே பண்பாட்டு அடையாளமாக இருந்து வருகிறது

**இன்றியமையாத் துணை நூல் :**

M.N. Srinivas, Social Change in Modern India, (Sanskritization and Westernization) Orient Longman, 1989.

## II

# தேர்தல்

21 ஆம் நூற்றாண்டு வாயிலில் உலகம் நின்று கொண்டிருக்கும் தருவாயில் இந்தியா பின்னிட்டு நிற்பதற்குக் காரணங்கள் பல உள்ளன. எனினும் நம் அரசு அமைப்பும் அதற்குக் காரணமான அரசியல் சாசன அமைப்பும் பெருங் காரணங்கள். இந்த அறிவும் உணர்வும், கண்கெட்ட பிறகு கதிரவன் வணக்கம் என்பது போல அண்மையில் வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன.

தேர்தல் ஆணையர் திரு டி. என். சேசனின் THE DEGENERATION OF INDIA' என்ற நூலும், சுயசிந்தனை அரசியல் வாதியான திரு சி. சுப்ரமணியம் தினமணிக்கு அளித்த நேர்முகமும் (தினமணி - 5,6/5/95) காலந்தாழ்ந்தாவது நாம் கண் விழித்திருக்கிறோம் என்பதற்குச் சாட்சியங்கள்.

இந்தியா தனக்கே உரிய ஆன்மீக மூலதனத்தையும் இழந்து முற்றும் முழுவதுமாக அரசியல் மூலதனத்தையே அரவனைத்து நாளும் செத்துக் கொண்டிருப்பது நல்லவர் எல்லார்க்கும் தெரிந்த செய்தி அனைத்திற்கும் ஆதிமூலம் அரசியலே என்றாகி விட்டது. இந்த அரசியலுக்கு ஆன்மா 'கட்சிகள்' ஆகும் பூதாகரமாக வளர்ந்து இந்தியாவின் மென்னியை இறுகப் பற்றிக் கொன்று கொண்டிருக்கும் கட்சிகள் பற்றி ஒரு வாசகம் கூட நம் புனித அரசியல்

சாசனத்தில் இல்லை. (தினமணி 5.5.95). இது மட்டுமன்று இந்திய மக்களை நூற்றாண்டுகளாக வெட்டிப் பிரித்து வேற்று அரசுகளுக்கு வழித்தடம் அமைத்துக் கொடுத்த கொடுஞ் சாத்தான்கள் ஆன சாதியம், மதபேதம், மொழிப்பன்மை ஆகியவற்றுக்கும் நம் அரசியல் சாசனத்தில் கருத்து வேறுபாட்டிற்கு இடமற்ற தீர்வு கிடையாது. மாறாக மேற்கண்ட கொள்ளிவாய்ப் பிசாசுகளை உணவிட்டு ஊட்டி வளர்க்கும் பல கூறுகள் நம் அரசியல் சாசனத்தில் உண்டு. எனவேதான் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னும் நாம் நமக்குரிய சாதி, மத, மொழி வட்டத்தை விட்டு விலகாமல் இருக்கிறோம் அவற்றுக்கு உள்ளேயே செக்கு மாடுகளாகச் சுழல வைக்கப்பட்டிருக்கிறோம்.

அரசியல் சாசனத் திருத்தம், சேர்க்கை என்ற குடுகுடுப்பைக்காரச் சட்டை ஒட்டு வேலையை விட்டு விட்டு, இந்திய மண்ணின் மணம் கமழக் கூடிய காந்தியத்தை உள்வாங்கிய புதிய அரசியல் சாசனம் ஒன்றைப் படைக்கும் மிக அவசர அவசிய நிலையில் நாம் நிற்கிறோம்.

இந்தியாவில் காடாக மண்டிக் கிடக்கும் ஊழல் களைகளுக்கு மூலதனம் கட்சிகளே. மக்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்கு மாறாகச் சாதி மத வேறுபாட்டுப் பாம்புகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கின்றன. இந்தப் புண்ணியச் செயலுக்குப் புனித நீர் வார்ப்பது நம் தேர்தல் முறையாகும். தேர்தல் தோறும் பேதங்கள் புதுப்பிக்கப் படுவதுடன் அடுத்த தேர்தலுக்கு ஆயத்தமாகப் பேத உணர்வுகள் அழியாமல் புரக்கப்படுகின்றன. எனவே தேர்தல்

முறை மாறினாலன்றி வேறு எந்த முறையாலும் இந்தியாவில் அமைதியையும் வளப்பத்தையும் நம்மால் கொண்டு வர முடியாது.

பெரும்பான்மை மக்களின் கருத்து அறிந்து பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு ஆளப்படும் அமைப்பாக சனநாயகம் வருணிக்கப்படுகிறது. சனநாயகத்தை நிலை நிறுத்தவே கட்சி வழித் தேர்தல் இருந்து வருவதாகப் பேசப்படுகிறது. பின்னே வரும் புள்ளி விவரம் நம் நாட்டில் கடந்த காலத்து நிகழ்ந்து வரும் சனநாயக மோசடியை நிறுவுவது ஆகும். இந்தியாவில் 1952 முதல் நிகழ்ந்த எந்தத் தேர்தலிலும் 49%க்கு மேல் வாக்கு பதிவானதே இல்லை.

49%க்குக் கீழ்ப்பட்ட வாக்குப் பதிவில் ஆளுங்கட்சி கிட்டத்தட்ட பாதிக்குக் கீழே எதிர்க்கட்சிகள் நான்கில் ஒரு பாகம் பெற்று வந்துள்ளன. கொஞ்சம் ஆழமாகப் பார்த்தால் இருபது விழுக்காட்டுக்கும் குறைவான வாக்குகள் பெற்ற கட்சியே இந்தியாவின் மொத்த மக்கள் தொகையை ஆட்சி செலுத்தி வருவது துலக்கமாகும்.

தெளிவிற்காகப் பின்வரும் புள்ளி விவரங்களைக் கூர்ந்து கவனியுங்கள்.

| | |
|---|---|
| மொத்த மக்கள் தொகை | - 100 |
| 18 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர் எண்ணிக்கை | - 60 |
| வாக்கைப் பதிவு செய்தவர் | - 26 |
| வாக்கைப் பதிவு செய்யாதவர் | - 34 |

பதிவு செய்த 26 வாக்கில் ஆளுங்கட்சி பெற்ற வாக்கு - 16

எதிர்க்கட்சி பெற்ற வாக்கு - 10

மேற்கண்ட புள்ளி விவரப்படி உண்மையில் 16 வாக்குகளே பெற்ற ஒரு கட்சி நூறு பேரை ஆளுகிறது. சனநாயகம் என்பது பெரும்பான்மையோர் ஆட்சி. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை சிறுபான்மை வாக்கு எண்ணிக்கை பெற்றவரே பெரும்பான்மை மக்களை ஆண்டு வந்திருக்கின்றனர். இதைத் தவிர்க்க அயல் நாடுகளில் அருமையான முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். அவற்றுள் ஒன்று கட்டாய வாக்களிப்பு முறை இரண்டாவது விதிதாச்சாரப் பிரதிநிதித்துவம் (PROPORTIONAL REPRESENTATION) பிரான்சிலும் பிரெஞ்சுக்காரர்கள் ஆண்ட பல நாடுகளிலும் இரண்டாவது முறை நடை முறையில் உள்ளது ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் முதலான நாடுகளில் கட்டாய வாக்களிப்பு முறை உள்ளது.

நூற்றுக்கு நூறு கற்ற, பண்பட்ட குடியரசு உரிமைகளுக்காக நெடுங்காலம் போராடிய ஐரோப்பிய மக்கள் அறிமுகப் படுத்திய தேர்தல் முறையை மேற்கண்ட மூன்றும் இல்லாத இந்திய மக்களிடையே போதிய ஆயத்தம் செய்யாமல் அறிமுகப் படுத்தியதால் விளைந்த விளைவே இன்றைய நிலை இந்திய மண்ணையும் மக்களையும் உள்வாங்கி, அண்ணல் காந்தி உருவாக்கிய கிராம சுயாட்சி முறையை நுனிக்கொம்பிலிருந்து அடிமரத்தை வெட்டும் இந்தியத் தேர்தல் முறை கொன்றுவிட்டது. மிகுதியான கிராமங்களை உடைய இந்தியாவில் கிராம மக்களின் உரிமைகளுக்கு மதிப்பு அளிக்கும் தேர்தல் முறையும்,


பேதங்களை ஊட்டி வளர்க்காத தேர்தல் முறையும், கட்சி பேதத்தால் மக்களை வெட்டிப் பிரிக்க வாய்ப்பு இல்லாத அமைப்பும் இன்றைய உடனடித் தேவையாகும்.

தற்போது நடைமுறையிலுள்ள 1950 அரசியல் சாசனம் வகுத்துள்ள கட்சி வழித் தேர்தல் முறை முழுவதுமாக ஒழிக்கப்பட வேண்டும் தற்போதைய தேர்தல் முறையே, சாதியத் தலைமைக்கும், மதத்தலைமைக்கும் வழி அமைத்துக் கொடுத்து, நம்மைச் சாதிப் பிளவுகட்கும், மதப் பிளவுகட்கும் அழைத்துச் செல்கிறது. சாதி இல்லாத பெரும்பாலும் ஒரே மதம் ஒரே மொழி உள்ள ஐரோப்பிய அமெரிக்க நாடுகட்கு இது பொருந்தலாம். பிளவுகளும், பிரிவுகளுமே கதியாகிப் போன நமக்கு அது பொருந்தாது. எனவே, கட்சி வழித்தேர்தல் முறையைத் தவிர்த்துக் குடிமக்கள் பங்கேற்கும் முறையொன்று நமக்கு வேண்டும். தமிழர்களைப் பொருத்தவரை இதற்காக அலைய வேண்டாம். நம் பழைய சமுதாயத்திலும் பிற்காலச் சோழர் சமுதாயத்திலும் பின்பற்றப்பட்ட 'குடவோலை முறை' மிகச் சிறந்த, நமக்கேற்ற தேர்தல் முறையாகும். இம்முறைப்படி, போட்டியிட விரும்பும் வேட்பாளர்க் குரிய தகுதிகள் வரையறுக்கப் பெறும். கல்வி, பண்புத் தகுதிகள் அமைக்கப் பெறும். குறைந்த கல்வி +2 என்றும் குறைந்த பண்புத் தகுதி சிறைத் தண்டனை எதுவும் பெறாதவர் என்றும் வரையறுக்கலாம். இத்தகுதி உடையோர் தம் பெயரை இருவரைக் கொண்டு உறுதிமொழியுடன் முன் மொழியச் செய்யலாம். விரும்புவோர் பெயர்களைச் சீட்டில் எழுதிச் சுருட்டி விடவேண்டும் எல்லாச் சீட்டுகளையும் குலுக்கிப் பாற்குடிப் பருவம் மாறாத இரண்டு வயதுக் குழந்தையை

விட்டுச் சீட்டை எடுக்கச் செய்தல் வேண்டும் ஊராட்சிக்கு வேண்டிய தொகைக்கு உறுப்பினர்களை அடுத்தடுத்துக் குழந்தை வழித் தெரிவு செய்து முடிவில் தெரிவு செய்யப் பெற்றோர் பெயர்களை மீண்டும் தனியே குலுக்கிப் போட்டுத் தலைவரையும் தெரிவு செய்தல் வேண்டும். இவ்வாறே வட்ட (TALUK) மாவட்ட (DISTRICT) மாநிலம் (STATE M.L.A.) நாநிலம் (PARLIAMENT M.P.) வரை, திருவுளச் சீட்டு முறை பின்பற்றப் படுதல் வேண்டும்.

மாநில எம் எல். ஏ., நாநில எம் பி, மாநில அமைச்சர், நாநில அமைச்சர் ஆகியோர்க் குரிய கல்வி, பண்புத் தகுதிகள் முன்பே வரையறுக்கப் பெற வேண்டும் குற்றம் செய்தவரைத் திரும்ப அழைக்கும் உரிமையும், அன்னவர் மீண்டும் போட்டியிடும் உரிமையை இழக்கும் அமைப்பும் இருத்தல் வேண்டும்.

திருவுளச் சீட்டு வழி ஆட்சியமைப்புக் கோபுரம்.




* மாநில மன்றத்தினின்று முப்பது பேர் மாநில அமைச்சரவைக்கும்

* பிறிதொரு முப்பது பேர் (எம்.பி.) நாநில மன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

1. இவ்வமைப்பு, இந்தியாவின் வேர்களாக விளங்கும் சிற்றூர் மக்களுக்கு ஆளுவதில் பங்களிப்பும், பயிற்சியும் நல்குவதாக அமையும்

2. கட்சி வழித் தேர்தல் பிரச்சாரங்களால், ஊரில் மங்கி வரும் சாதி, மத, மொழி உணர்ச்சிகள் பொங்கி மக்களையே அழித்து வரும் நிலைமை மாறி ஒழியும்.

3. ஒவ்வொரு தேர்தலுக்கும் மக்கள் செலுத்தும் வரிப் பணத்திலிருந்து ரூ ஆயிரம் கோடி செலவாவதும், வேட்பாளர்கள் கணக்கில் காட்டாமல் கோடி கோடியாகச் செலவழிப்பதும், தம் அரசு செல்வாக்குப் பெறுவதற்காக நாட்டுத் தேர்தலில் தலையிடுவதும், பணத்தைக் கொட்டி இறைப்பதும் நின்றுவிடும்.

4. நோயாளிகள், கர்ப்பிணிகள் அவசர மருத்துவத்திற்குச் செல்ல முடியாமலும், ஆயிரக் கணக்கான அலுவலர்கள், தொழிற்சாலை ஊழியர்கள், கற்கும் சிறார்கள், சிறுமிகள், மாணவ மாணவிகள், சாலைகளில் போக முடியாமலும், அடிக்கடி கட்சிகள் நடத்தும் ஊர்வலக் கோமாளித் தனங்கள் ஒழிந்து போகும்.

5. தேர்தல் முடிந்து வென்ற ஒருவர் மேல், தோற்ற பலரும் சென்மப் பகை கொள்வதும் செயல்படுவதும் தங்கட்காக ஊரைச் சாதி, மத, கட்சி அடிப்படையில் இரண்டாக்குவதும் நிகழ்பவை. இவற்றிற்கு வாய்ப்பில்லாமற் போகும்.

6. தம்பட்டம் அடிப்பது, ஊர் மக்களை வாகனங்களில் திரட்டுவது, காசு கொடுப்பது, பொய் ஓட்டுப் போட வைப்பது, சேலை, விளக்கு என்பன போன்ற

அன்பளிப்புகளை வழங்குவது இவற்றின் மூலம் முழு ஊழல் சூழலுக்கு வித்திடுவது ஆகியன அடியோடு அடிபட்டுப் போகும்.

சோவியத் ஒன்றியத்தினின்று பிரிந்த நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சப்பான், ஆப்பிரிக்க நாடுகள் எனப் பல நாடுகள் பழைய அரசியல் சாசனங்களை வீசி எறிந்துவிட்டுப் புதிய அரசியல் சாசனங்கள் தத்தம் மண்ணிற்கேற்பப் படைக்கத் தொடங்கி விட்டன நம் நாடும் சர்வாதிகாரம் என்னும் அவசரச் சிகிச்சைப் பிரிவிற்குப் போகும் நாள் வருவதற்கு முன்னால், வருமுன் காத்துக் கொள்வது நல்லது நல்லது நல்லது

# III

# எழுத்து

## பகுதி ஒன்று

எழுத்தரும், எழுத்தாளரும் ஒருவரா? அல்லர். இருந்ததை எழுதுபவர் எழுத்தர்; இருக்க வேண்டியதையும் எழுதுபவர் எழுத்து ஆளர். முன்னவர் தொழிலாளி; பின்னவர் பொறியாளி சொன்னதைச் செய்பவர் தொழிலாளி. செய்வதைச் சொல்பவர் பொறியாளி. எனவே எழுத்தாளர் எழுத்தை ஆளுதல் வேண்டும். புதிய உருவாக்கத்தைக் கருவுயிர்க்க வேண்டும். அவர் பொம்மைகளின், பொய்ம்மைகளின் உற்பத்தியாளர் அல்லர். நன்மைகளின் உற்பத்தியாளர். எனவே மெய்யான எழுத்தாளருக்குக் கூடுதல் பொறுப்பு இருக்கிறது.

எழுத்தாளர், தன்னைப் புலப்படுத்திக் கொள்வதற்காக மட்டும் வளப்படுத்திக் கொள்வதற்காக மட்டும் எழுதுதல் கூடாது. அவர் தான் சார்ந்த மண்ணைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவும், வளப்படுத்திக் கொள்வதற்காகவும் எழுதவேண்டும்; எழுத்தை ஆள வேண்டும்.

காரணம் : எழுத்து எனும் படைப்பு ஊருக்குப் பயன்படாத காட்டு மழையன்று; அது நாட்டுமழை. தனக்குத்தானே கொட்டிக் கொள்ளும் கடல் மழையாக இல்லாமல் வயல்மழையாக விளங்க வேண்டும்; விளைவிக்க

வேண்டும். எழுத்து, அதற்கு அடிப்படையான மொழி ஆகிய இரண்டுமே சமுதாயக் கூட்டு விளைச்சலாகும் (Results of the society).

மானுட நடப்பு (INSTITUTIONIZED BEHAVIOUR OF MAN) நான்கு வகைப்படும்.

1. மானுட இயல்புணர்வு
2. குழு, சமூகம் உருவாதல்
3. மானுடம் அதீத சக்திகளை வழிபடுதல்
4. கலை உணர்வு வெளிப்படுதல்

## மானுட இயல்பு உணர்வு

வயிற்றுப் பசியும், உடற்பசியும் மானுடனின் அடிப்படைத் தேவைகள். வயிற்றுப் பசி தோன்றிய நாள் தொட்டு மனிதனைத் தொடருவது. உடற்பசி அவன் வளர்ந்த நாள் தொட்டு அவனை வாட்டுவது. இவை இரண்டும் அவனை இயற்கையாக உந்துகின்றன அவனது இயக்கம் முழுதும், வாழ்நாள் முழுதும் இவ்விரண்டு பசிகளைத் தீர்ப்பதாகவே அமைகின்றன.

## குழு, சமூகம் உருவாதல்

தன் பசியை நிறைவேற்றிக் கொள்ள இயற்கையிடமிருந்தும், மற்ற மனிதனிடமிருந்தும் உதவி அவனுக்குக் கட்டாயமாகத் தேவைப்படுகிறது. எனவே மனிதனுக்குக் குழு முயற்சி (Group Efforts) இன்றியமையாத தேவை ஆகிறது. தனி மனித நிலையைத் தாண்டி குழு மன நிலையை அவன் அடைய வேண்டி

உள்ளது. இந்நிலையில் பொது ஒத்துணர்வுகளும், பொது நோக்கங்களும் அவற்றைப் புலப்படுத்தவும், புரிந்து கொள்ளவும் தொடர்பு முறைகளும் மனிதக் கூட்டத்தினிடையே உருவாக்கப்பட்டன மொழி இந்தக் கட்டத்திலேயே உருவாயிற்று மொழி ஒரு மனித நிகழ்ச்சி அன்று. அது ஒரு சமூகத்தின் கூட்டு நிகழ்ச்சி ஆகும். மேற்கண்டவற்றைச் சார்ந்தே திருமணம், குடும்பம் முதலாய சமூக நிறுவனங்கள் உருவாயின. ஒருவருக்கு ஒருவர் இணங்கிப்போதல், பாலுணர்வு, முதலான உணர்வுகளின் தேவைக்கு ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொள்ளுதல், இயற்கையிலிருந்து வேண்டியவற்றை உணவிற்காகவும், உடைக்காகவும், உறைவிடத்திற்காகவும் பெற்றுக் கொள்ளுதல்.

## மானுடம் அதீத சக்திகளை வழிபடுதல்

பண்டைக்கால சிந்தனை ஆற்றல் குறைந்திருந்த மனிதனுக்குக் கதிரவன், நிலா, விண்மீன்கள், மழை, இடி, மின்னல், நோய்கள், சாவு, நெருப்பு, குழந்தைப் பிறப்பு முதலாயின புதிர்களாக இருந்தன. அவை அவற்றின் மேல் மனிதனுக்கு அச்சத்தையும் மதிப்பையும் ஏற்படுத்தின. இவையே வழிபாடாகவும், சடங்கு, சம்பிரதாயங்களாகவும் பரிணமித்தன. ஆதி மதம் இந்த ஊற்றுக் கண்ணிலிருந்தே உருவாயிற்று

## கலை உணர்வு வெளிப்படுதல்

வயிறு, உடல் பசிகளுக்கு மட்டும் தீனி போட்டுக் கொண்டிருந்த நிலையிலிருந்து சில தேவைகளால் மானுடவினம் வளர்ந்தது. அதனால், மாற்றம் விளைந்தது.

சிறுசிறு கலை உணர்வுகளும் அவனிடம் அரும்பின. அவைகூட அவனது தேவைகளை ஒட்டியே தொடக்கக் காலத்தில் தோன்றின. அவன் குழுவாக, கூட்டமாகச் சேர்ந்து எழுப்பும் கும்மாளம் இசையாயிற்று; பாட்டாயிற்று. அதற்குத் தக அவன் அடித்த கூத்து ஆட்டம் ஆயிற்று எண்ணிய எண்ணங்களை நேரில் சந்திக்க முடியா. அடுத்தவர்க்கு எடுத்துச் சொல்ல அவன் மேற்கொண்ட முயற்சி பட எழுத்து ஆயிற்று. பட எழுத்துகள் காலப் போக்கில் பாட்டிலக்கியமாகவும், ஏட்டிலக்கியமாகவும் பரிணாமம் கொண்டன.

ஆக, எழுத்தாளரின் எழுத்து சமுதாயத்தை வெட்டிப் பிறந்தது அன்று; சமுதாயத்தை ஒட்டிப் பிறந்தது ஆகும். கருவோடு தொடர்புடைய சமுதாயக் கொப்பூழ்க் கொடி வெட்டப் பட்டிருக்கலாம். ஆனால் கொப்பூழை அவர் வெட்டி எறிந்து விட முடியாது

ஏனைய எல்லாரையும் விடப் படைப்பாளிக்குச் சமுதாயப் பொறுப்பு மிகுதியாக இருக்கிறது; இருக்க வேண்டும். அதன் வெளிப்பாடே இந்தச் சிற்றிதழ்கள்.

தமிழில் வெளிவந்துள்ள, வெளிவந்து கொண்டிருக்கிற சிற்றிதழ்கள் ஏறத்தாழ 160 ஆகும். இவற்றுள்

70% இலக்கியம் தொடர்பானவை

20% சாதி தொடர்பானவை

10% அரசியல் தொடர்பானவை

ஏனைய எல்லாரையும் விட எழுத்தாளர்களுக்குச் சமுதாய அக்கறை மிகுதியாக இருப்பதை எழுபது விழுக்காடு சிற்றிதழ்கள் என்ற எண்ணிக்கை உறுதிப்படுத்துகின்றது மானுடன் தொடக்க கால வயிற்றுப்பசி, உடற்பசி ஆகியவற்றைக் கடந்து உள்ளப் பசியைத் தோற்றுவித்து, தீனியிட்டுச் சுகம் காணத் தொடங்கியதைக் கலைகளின் படைப்பும் வளர்ச்சியும் காட்டுகின்றன இவற்றின் வளர்ந்த பரிணாமம் இலக்கியமாகும் இதற்கு அடுத்த பரிணாமம் அறிவியலாகும்.

தமிழ்ச் சிற்றிதழ்களின் தொடக்கம் 1930 தொடங்கி இன்று வரை தொடர்கதையாகி வருகின்றது இவ்விதழ்களைப் பறவைப் பார்வையில் பின் வருமாறு பொருட் பாகுபாடு செய்யலாம்.

1. இலக்கியம் தொடர்பானவை
2. பெரியாரியம் தொடர்பானவை
3. காந்தியம் தொடர்பானவை
4. மார்க்சிசியம் தொடர்பானவை
5. அம்பேத்காரியம் தொடர்பானவை

சிற்றிதழ்களில் பேசப்பட்ட பொருள்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. தமிழ்
2. தமிழர்
3. சாதி

4. கட்சி

5. மதம்

6. பொருளியம்

7. அரசியம்

8. இலக்கிய இயம்

சிற்றிதழ்கள் வெளிவந்த காலகட்டத்தைப் பகுத்துப் பார்க்கும் போது 1970-80 களில் 30 7% சிற்றிதழ்கள் வெளிவந்துள்ளன. 1980-90களில் அதற்கு அடுத்த படியாக 11.3% சிற்றிதழ்கள் வெளிவந்துள்ளன 1970-80 களில் சிற்றிதழ்கள் மிகுதியாக வெளிவந்தமை சிந்தனைக்குரியது. ஒருக்கால் தமிழர்களின் மொழி, இன நம்பிக்கை நட்சத்திரமாக மின்னிய திராவிட இயக்கத் தோல்வியும் (1967க்குப் பிறகு) கானல் நீராக மெலிந்து நீர்த்துப் போன பொதுவுடைமை இயக்கத் தோல்வியும் மொழி, இன, வர்க்கப் புரட்சி நிகழ்த்த முடியாமல் போன சூழலில் எழுந்த சாதியமும் காரணங்கஙளோ என்று ஐயுற வேண்டியுள்ளது. இக்காலக் கட்டத்தில் எழுந்த 44க்கு மேற்பட்ட சிற்றிதழ்களின் தோல்வியால் ஏற்பட்ட ஆத்திரமும் சாதிய மறுவுயிர்ப்பிற்குப் பாடப் பெறும் தோத்திரமும் மேலோங்கி இருப்பது மேற்கண்ட ஐயத்தை ஏற்படுத்துகின்றது.

இலக்கிய வகைமை வரலாற்றில் சிற்றிதழ்கள் அறிமுகப்படுத்தி அரங்கேற்றிப் புதுக்கவிதை வசன கவிதை ஆகியவற்றைப் பரவலாக்கியதைத் தனித்துச் சுட்டிக் காட்ட வேண்டும். பெருஞ்சித்திரனாரால் நடத்தப் பெற்ற தென் மொழி ஒரு தமிழியக்கத்தையே தமிழ் வாசகர் நடுவில் உண்டாக்கியதையும் தமிழகப் பொதுவுடைமை இயக்கம்

தாமரை எனும் ஏடு வழி ஏற்படுத்திவிட்ட பொதுவுடைமை உணர்வையும் சிறப்பாகச் சுட்டிக் காட்ட வேண்டும். எழுத்தாளர்களுக்குச் சமூகப் பொறுப்பு கூடுதலாக உண்டு என்பதைத் தென் மொழி, தாமரை முதலான ஏடுகள் இளைஞர்கள் நடுவே விரிவாக ஏற்படுத்தின.

1980க்குப் பிறகு முகம் காட்டி வெளிவந்த சிற்றிதழ்களி ல் மொழி பெயர்ப்பு ஆதிக்கம் சற்றே கூடுதலாக உள்ளது என்றே கருத வேண்டியுள்ளது. தமிழர்களுடைய அரசியல் பொருளாதாரச் சமுதாயச் சிக்கல்களுக்குத் திறவுகோல் அக்கரையில் இருப்பதாக இவ்வெழுத்துகள் காட்டுகின்றன. ஒரு காலத்தில் இந்த அக்கரை இங்கிலாந்து அமெரிக்காவாக இருந்தது பின்னர் சோவியத் அக்கரையாக இருந்தது. அதன் பின்னர் வடஅமெரிக்கக் கறுப்பர் எழுத்தும், தென்னமெரிக்கரின் பழுப்பு எழுத்தும் முன்னோடியாகக் கடன் வாங்கப்படுகின்றன. வெள்ளை அமெரிக்கர், கறுப்பு அமெரிக்கர், பழுப்பு அமெரிக்கர் என வெள்ளை, கறுப்பு, பழுப்பு என நிறம் மாறுவதுபோலத் தோன்றினாலும் ஏதோ ஓர் அக்கரையை, அமெரிக்காவை வேதப் புத்தகமாகத் தொழும் போக்குத் தமிழ்ச் சிற்றிதழ்களிடம் காணப்படுகின்றது. விடுதலை பெற்ற 50 ஆண்டுகளுக்குப் பின்னும் அமெரிக்க, சோவியத் தென்னமெரிக்க ஆயத்த சட்டைகளைக் கண்மூடிப்போட எடுத்துக்கொண்ட முயற்சி நம் தோல்விக்குப் பெருங்காரணம் என்று தோன்றுகிறது

1. இங்கிலாந்து அரசியல் சாசனத்தை அப்படியே காப்பியடித்துத் தேர்தல் கட்சி வழி ஆட்சி முறையை ஏற்படுத்தியது மாபெருந்தவறு.

2. ஒரே கடவுள், ஒரே மதம், ஒரே இனம் ஆகியவற்றின் பின்புலத்தில் எழுந்த மார்க்சிய அணுகு முறையை அல்ல முடிவை அப்படியே ஏற்றுக்கொண்டு சாதியக் கொடுமையை மறந்து பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்த நினைத்தது அடுத்த பெருந்தவறு

3. மானுட குலத்தை முதலாளி, தொழிலாளி என இரண்டு வர்க்கமாக மட்டும் பார்த்தது, இந்தியச் சூழலில் பார்த்தது எப்படி தவறோ அது போல, சிக்மன் ஃபிராய்டையும் தீவிரப் பெண்ணியத்தையும் (Radical Feminism) முன்னிறுத்தி வயது வேறுபாடு பாராமல் ஆணாகவும் பெண்ணாகவும் பார்த்தல், பார்க்க வைத்தல் அடுத்த பெருந்தவறு.

பெண் குழந்தைக்கு ஆண் என்பதால் அப்பா மேலும், ஆண் குழந்தைக்குப் பெண் என்பதால் அம்மா மேலும் காதல் இருப்பதாக ஃபிராய்டு கூறினார். தமிழ்ச் சமுதாய மரபு அப்பாவை ஆணாகப் பார்ப்பதன்று. தந்தையாகப் பார்ப்பது

நம்முடைய அரசியல் பொருளாதார சமுதாயச் சிக்கல்களுக்கு தான் வரலாற்று உண்மை. தற்போதைய முடிச்சுகளை எல்லாம் அவிழ்க்க முடியாமல் போட்டுவிட்டவர்களே அவர்கள் தாம் இந்தியத் தமிழர் முடிச்சும், ஈழத்தமிழர்கள் முடிச்சும் வெள்ளைக்காரர்களின் நன்கொடைகளே. எனவே நமக்கு உரிய சிக்கல்களுக்கு உரிய தீர்வைத் தேடுவதும், தெளிவிப்பதும் இன்றைய எழுத்தாளர்களின் முதன்மையான கடமையாகும் இலக்கியப் படைப்பு என்பது நமக்குப் பொழுது போக்கு அன்று. நம்

சமுதாயத்தை மேம்படுத்த அது ஒரு கருவி. நம் சமுதாயத்தை விழிப்புறுத்த அது ஒரு மணியோசை; விடியற்காலப் பூபாள இசை.

சிற்றிதழ்கள் ஏராளம் விற்காமல் இருக்கலாம். அப்படித்தான் இருக்கும்; அப்படித்தான் இருக்க வேண்டும். சிற்றிதழ்களை நடத்துகிறவர்கள் தெருவெங்கும் மிட்டாய் விற்கும் குச்சி மிட்டாய்க்காரர்கள் அல்லர்; அவர் க ள் சிந்தனையாளர்கள். சிந்தனையாளா க ள் பலராக இருத்தல் இயலாது சிலராகவே இருத்தல் வேண்டும். கொடுங்காட்டை எரிக்க கோடா னுகோடி நெருப்புத் துண்டங்கள் தேவையில்லை. ஓரிரண்டு போதும். ஒன்றே கூடப் போதும்.

நீங்கள்தான் அந்த ஒன்று.

நீங்கள்தான் அந்த ஒன்றிரண்டு.

## பகுதி இரண்டு

அகத்திணைகளில் அகப் புறத் திணைகளாகக் கருதப் பெறுவன 'கைக்கிளையும், பெருந்திணையும்' ஆகும். 'கைக்கிளை' என்பது ஒரு தலைக் காமம் 'பெருந்திணை' என்பது பொருந்தாக் காமம் இவ்விரண்டையும் இலக்கியப் பொதுப் பொருள் ஆக்குதல் பொது மரபாகப் போற்றப் படக் கூடாது என்பது முன்னோர் கூறிய கடைப்பிடி ஆகும். எனவேதான், சங்க இலக்கியப் பாடல்களில் "முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை' என ஐந்து திணைப்பாக்கள மிகுதியாக இடம் பெற்றன. ஓரிரண்டே கைக்கிளை, பெருந்திணைப் போக்கின இவற்றையும் இழிந்தோர் வழக்காகவே முன்னோர் நோக்கினர்

கலித்தொகையில் இடம் பெற்றுள்ள 'கூனன் - குறளி' பாடலும், அதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையும் இக்கருத்தை உணர்த்துவனவாகும். 'அடியோர் பாங்கினும்' (தொல், அகத்திணை 23) எனவரும் நூற்பாவிற்கு இளம்பூரணார் உரை எழுதும்போது கலித்தொகைப் பன்னிரண்டாம் பாடலைக் காட்டி, எழுதும் குறிப்புக் கவனத்திற்குரியது.

"தீய காமம் இழிந்தோர்க்கு உரிமையும்
இதுவும் அடியோர் தலை வராக வந்த கைக்கிளை"

'அடியோர்' எனவே இருபால் தலைமக்களும் அடங்கிற்று; 'கடிவரை இல' என்றதனால் அவரும் பரத்தையரும் உளர் என்று கொள்க!

பிறப்பு வழிச் சாதிப் பாகுபாடற்ற சமுதாயத்தில், 'உயர்ந்தோர், இழிந்தோர்' எனும் குறியீடுகள், 'மேல் சாதியினர், தாழ் சாதியினர்' என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டிருத்தல் இயலாது பண்பால் வரும் பெருமையே மானுடத் தரத்தைத் தீர்மானித்தது "மேல் இருந்தும், மேல் அல்லார் மேல் அல்லார்; கீழ் இருந்தும் கீழ் அல்லார் கீழ் அல்லவர்' (திருக்குறள் : பெருமை 973)

"அடியோர், வினைவலர்" எனும் குறியீடுகளும் பிறப்பால் தாழ்ந்தோரைக் குறிப்பன அல்ல. தொழிலால், தாழ்ந்தோரைக் குறிப்பன. பின் நாளில், சிவ அந்தணக் குலத்தினரான, சுந்தரர்தம் பெற்றோர், தம்மை 'அடிமையர்' எனச் சிவன் கோயிலுக்கு ஒப்பளித்ததை நினைவு கூர்க.

பொது வேசியர், 'தாசியர்' (அடிமையர்) எனக் குறிக்கப்பட்டதையும் நினைக.

'அறம் பொருள் வழாமை நிகழ்த்துதல் அவருக்கு அரிது என்பது பற்றி இவற்றை அகம் புறம் என்றார்'.

மேற்கண்ட குறிப்பு, "கைக்கிளை ஒழுக்கம் போற்றுதற்குரியது அன்று" எனும் கருத்தைப் புலப்படுத்தி நிற்கிறது.

இன்று வெளிவரும் சிறுகதைகள், திரைப்படக் கதைகள் பெரும்பாலானவை "கைக்கிளை, பெருந்திணை" என்பனவற்றையே முன்னிலைப்படுத்துதல் ˙ வெளிப் படையாகும் (சான்று ˙ முதல் மரியாதை, சிந்து பைரவி, அரங்கேற்றம் ஆகிய புகழ்பெற்ற திரை இயக்குநர்களின் படைப்புகள், இலக்கியச் சிந்தனை அமைப்புகள்; பரிசு பெறும் சில கதைகள்). இம்மாற்றம், சமுதாயம் உள்ளார்ந்து மாறியிருப்பதைக் காட்டுவதாகும்

## காமமும் வன்முறையும்

"அகம், புறம்" எனச் சங்க காலத்து 'அகம்' முதனிலையிலும், 'புறம்' அடுத்த நிலையிலும் போற்றப் பெற்றன உடல் சார்ந்த பண்புகளே பண்டைய சமுதாயங்களில் முன் நிற்பது இயல்பு. இவ்விரு பகுப்புகளும் காலப்போக்கில் 'இன்பம், பொருள், அறம்' என்று மாறின. 'இன்பமும், பொருளும், அறனும் என்றாங்கு' (தொல். களவியல் 1).

'அகம், புறம்' என்ற 'காதல், வீரம்' எனும் உடல் சார்ந்த பண்புகள், மானுடம் வளர, வளர, உளம் சார்ந்த பண்பான அறத்திற்கு இடம் கண்டது; 'உடைமை', சமுதாய அமைப்பில் தோன்றி விட்டமையால் 'பொருள்' என்பதும் இடம் பெற்றது. எனினும், முன்பிருந்த 'அக' ஆதிக்கத்தைச் சமுதாயம் இழந்து விடாமையால், இன்பம் முன்னிறுத்தப் பெற்று, 'இன்பம் பொருள் அறன்' எனப் போற்றப் பெற்றது.

திருவள்ளுவர் காலத்தில் இன்பம் கடைநிலைக்குத் தள்ளப் பெற்று "அறம், பொருள், இன்பம்" என்ற வரிசை வந்துள்ளது. இன்றைய தமிழ்ப் படைப்பின் போக்கைக் கூர்ந்து கவனித்தால் 'காமம் வன்முறை' (Sex & Violence) முன்னிலை வகிக்கின்றது. திரைப்படங்கள், இதனை உறுதி செய்கின்றன. இவ்விலக்கியப் போக்கும், சமுதாய மாற்றத்தைக் குறிப்பதே ஆகும் 'காமம், வன்முறைக் காலம்' (Era of sex and Violence) என்றே இவ் வூழியைக் குறிக்கின்றனர். (பார்க்க : குறிப்பு)

சமண, பௌத்த வரவும் செல்வாக்கும், இன்ப விழைச்சையும், போர் விழைச்சி யையும் பின் தள்ளின அமைதி, அறத்தை முன்னிறுத்தின. "சைனதருமம், பௌத்த தருமம்" என்றே அவை அழைக்கப் பெற்றன. 'தருமம் சரணம் கச்சாமி' என்பது பௌத்த வாக்கு.

## தமிழ் மரபு

இச்சூழலில், அகப்பொருளைப் பாடும்போது "தலைவன் தலைவி பெயர்களைக் குறித்தல் கூடாது" என்ற

ஒரு மரபு பண்டைய தமிழில் பின்பற்றப்பட்டது என்பதைத் தொல்காப்பியர்

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப பெறாஅர்" (தோல். 55)

என வரையறுப்பார். உரையாசிரியர்களும் இந் நூற்பாவின் மையக் கருத்தில் மாறுபடாமல் உரை செய்துள்ளனர் இளம்பூரணர் உரையும், நச்சினார்க்கினியர் உரையும் இதற்குச் சான்று பகருகின்றன. பிற்காலத்துத் தொல்காப்பியத்திற்கு விளக்கம் தந்த நாவலர் சோமசுந்தர பாரதியார், புலவர் குழந்தை, முனைவர் சி. இலக்குவனார், அறிஞர் மு. அருணாசலம் பிள்ளை ஆகியோரும் இக்கருத்தினரே!

சங்க இலக்கியங்களும் திணைப் பெயரால் கூறுதல் அன்றி ஒருவனையும், ஒருத்தியையும் விதந்து கூறுதலைப் போற்றாது. அவ்வாறு போற்றி நிற்கும் ஓரிரு பாடல்களை 'அகப்புறம்' என்று (அகநானூறு 148, 236) குறித்தனர். நக்கண்ணையார் பாடலைப் புறத்திணையில் கொண்டு சேர்த்தனர்.

இம்மரபை இலக்கிய மரபாகப் பார்த்தல் ஒரு முறை. சமுதாயவியல் பார்வையில் பார்த்தலும் கூடும். நல்லொழுக்க மரபுகளுக்கு முன்னுரிமை கொடுத்த சமுதாயங்கள், தனி ஒருவர்தம் அந்தப்புர அக வாழ்க்கையில் மூக்கை நுழைப்பது இல்லை, இக்கருத்தினை ஒட்டியே திருவள்ளுவர் 'புறம் கூறாமை' எனும் தனி அதிகாரம் வகுத்தனர். "தலைவன், தலைவியர்தம் தனிப்பட்ட காதல்

வாழ்க்கையைத் தெருச் செய்தியாக விளம்பரப்படுத்தக் கூடாது' என்பது முன்னையோர்தம் கருத்தாகப் போற்றப் பெற்றிருத்தல் வேண்டும். அதனால்தான் 'அலராதல்' என்பதை 'அலர் தூற்றல்' என்று முன்னோர் குறித்தனர்.

தொல்காப்பியத்திற்கு முதல் பேருரை எழுதிய இளம்பூரணர் அகம் என்பதற்கு அளிக்கும் விளக்கமும் இங்கே இணைத்து எண்ணத் தக்கது.

## மரபு மீறல்

உயர்ந்த சமுதாயத்தின் உயர்ந்த ஒழுக்க மரபு இது இம்மரபு சமுதாயம் சீரழியும்போது மாறும் என்பதைத் தற்போதைய தமிழ்ச் சமுதாயப் போக்கும், தமிழில் பெருகி வளர்ந்துள்ள 'துப்பறி ஏடுகளின்' பெருக்கமும் உறுதி செய்கின்றன. முன்பு திரை உலக மக்களின் சொந்த வாழ்க்கையை அற நோக்கு இல்லாமல் பொருள் நோக்கிலும், அதற்கேற்ற அச்சுறுத்தும் நோக்கிலும் மஞ்சள் இதழ்கள் (இந்துநேசன் போன்ற ஓரிரண்டு) தமிழில் வந்து கொண்டிருந்தன. அவை மஞ்சள் நிறத் தாளில் அச்சடிக்கப்பட்டமையால் 'மஞ்சள் ஏடுகள்' என்றே அழைக்கப்பட்டன அண்மைக் காலமாக இப்பட்டியலில் பல ஏடுகள் மற்றவர் தனி வாழ்க்கையைத் தெருவிற்குக் கொண்டு வருதலில் முன்னணி வகிக்கின்றன. மெய்யான செய்திகளைத் தெருவிற்குக் கொண்டு வருதல் பயனுள்ளதாகலாம். ஆனால், பெரும்பாலும் பொய்யான செய்திகளைச் சட்டத்திலிருந்து தப்பும் முகமாக வினாக் குறியிட்டும், வதந்தி எனத் தலைப்பிட்டும் இவ்வேடுகள் வழங்கி வருகின்றன. இவ்வேடுகளின் செல்வாக்கால்

ஏனைய இதழ்களும்கூட இது போன்ற செய்திகளைப் ‘பேசப்படுகிறது’ முதலான தலைப்பில் வெளியிட வேண்டிய இக்கட்டிற்கு வந்துவிட்டன. ஒருவர்தம் தனி வாழ்க்கையை, அக வாழ்க்கையைப் பொது வீதியில் கொண்டுவரக் கூடாது எனுங் கருத்தில் தலைமக்களின் பெயர் சுட்டப்படக் கூடாது எனும் மரபு போற்றப்படுவதற்கு மாறாகப் புது வரவும் தோன்றிவிட்டது. இம்மரபால் சமுதாயத்திற்கு ஏற்படும் நன்மை, தீமை சீர்தூக்கிப் பார்க்கப் பெற வேண்டும்

**சமுதாய வளர்ச்சி / வீழ்ச்சிச் சமன்பாடு :**

அறம் - Value - VA
இன்பம் Sex - S
பொருள் - Material - M
வன்முறை - violence - VI
நற்சமுதாயம் - Healthy Society - HS
அற்சமுதாயம் - Unhealthy Society - UHS
VA - S - VI = HS
S + VI + M - UHS
அறம் இன்பம் வன்முறை நற்சமுதாயம்
இன்பம் வன்முறை பொருள் அற்சமுதாயம்
∴ தமிழ்ச் சமுதாயம் அற்சமுதாயம்
S + VI + M = UHS

**குறிப்பு : பார்க்க :** போதை + செக்ஸ் + க்ரைம்
இதுவே தமிழ் சினிமா
- தினமணிக்கதிர், பிப். 4, 1996.

# IV

# திரையுலகம்

நான் வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது அமெரிக்கா செல்லும் வாய்ப்பு அமைந்தது. அமெரிக்கா சென்றால் உலகத் திரையுலகத் தலைநகரான ஹாலிவுட்டைப் பார்க்காமல் வரலாமா? பார்க்கச் சென்றேன் இலாஸ்ஏஞ்சல் என்ற பெருநகரத்தின் கோடம்பாக்கம் அது. சுற்றுலாப் பேருந்தில் ஏறி ஹாலிவுட் பயணமானேன். திரை நகருக்குள்ளே செல்லும் முன், உந்து ஓரிடத்தில் தேநீருக்காக நிறுத்தப் பெற்றது அங்கே இறங்கினேன். ஓரிடத்தில் நிறைய நகர வரைபடங்கள் தரையில் பரப்பப்பட்டிருந்தன விற்பனைக்குப் பக்கத்தில் ஆள் நின்று கொண்டிருந்தார். வரைபடத்தைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன் ஹாலிவுட் திரைநகர விளக்கப்படம். மர்லின் மன்றோ முதலான புகழ் பெற்ற நடிகர்கள் வாழ்ந்த/வாழும் வீடுகள் தெருக்கள் அப்படத்தில் சுட்டிக் காட்டப் பெற்றிருந்தன எனக்கு வியப்பு, சினிமா மோகம் அமெரிக்காவிலுமா? விற்பனையாளரிடம் தயங்காமல் கேட்டும் விட்டேன். அவருடைய விடை தூக்கி வாரிப் போட்டது, எவரெஸ்ட் சிகரத்திலிருந்து என்னை உருட்டிவிட்டது போல மனம் படுகாய முற்றது. அவர் சொன்னது இதுதான். "திரைநகர வரைபடம் எங்களுக்காக அல்ல; உங்களைப் போன்ற இந்தியர்களுக்குத்தான்"

சில ஆண்டுகளுக்கு முன் புதுதில்லி அரசுப் பணி தேர்வாணையத்தில் (UPSC) மொழிபெயர்ப்பாளரைத் தெரிவு செய்வதற்காக அழைக்கப்பட்டுச் சென்றிருந்தேன். நேர்முகம் இன்னும் தொடங்கவில்லை. வல்லுநர்கள் மனந்திறந்து நாட்டின் பலவேறு நடப்புகள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

அனைவரும் வேறுவேறு மாநிலத்தவர் என்னைத் தவிர, குழுத் தலைவர் என்னைப் பார்த்துக் கேட்டார், "மதராஸிகள் ரொம்பப் புத்திசாலிகள் என்று சொல்கிறார்கள் ஆனால் உங்கள் மாநிலத்தை ஆள ஆட்களைச் சினிமாவில் தேடுகிறீர்களே". இரண்டாவது முறையாக என்னை எவரெஸ்ட்டிலிருந்து உருட்டி விட்டது போல இருந்தது. இன்னும் காயம் ஆறவில்லை.

நம் சாதனைப் பட்டியல் இதோ!

இந்தியாவிலேயே ஆண் நடிகர் ஒருவரை முதன்முதல் முதலமைச்சராகக் கொண்ட மாநிலம்

திரைப்படக் கதாநாயகியாக இருந்தவரை முதன்முதல் பெண்முதல்வர் ஆக்கிய மாநிலம்

எதிர்க்கட்சித் தலைவராக ஒரு நடிகையை முதன்முதல் பெற்றிருந்த மாநிலம்

மாநிலத் தலைநகர நாடாளுமன்றத் தொகுதிக்கு முன்னாள் நடிகை ஒருவரை எம்பியாகத் தெரிவு செய்த மாநிலம்

நடிக நடிகையரின் பெயர்களில் கோயில்கள், மதங்கள், கட்சிகள் ஆகியவற்றை உலகுக்கே வழங்கிய, வழங்கிக் கொண்டிருக்கும் மாநிலம்.

இந்தியாவின் மொத்தத் திரையரங்குகள் 13000; அவற்றுள் ஐந்தில் ஒரு பகுதி 2500 திரையரங்குகளைப் பெற்றுள்ள ஒரு பெரும் மாநிலம்.

அடுத்த முதலமைச்சரையும், இந்தியத் தலைமை அமைச்சரையும், குடியரசுத் தலைவரையும், தலைமை நீதிபதியையும் திரையுலகிலிருந்தே தெரிவு செய்யத் துடித்துக் கொண்டிருக்கும் மாநிலம்

நம் திரைப்பட மோகம், எந்த அளவு சோக உச்சிக்கே சென்றுவிட்டது என்பதற்கு இரு சான்றுகள் நடிகர் ஒருவர் தம் இறந்த நாளை ஒட்டி 23 நாட்கள் நோன்பிருந்து, சேலத்திலிருந்து நடந்தே சென்னைக்கு வந்து விதவை மனைவியைத் தரிசித்து ஆசி பெற்றனர் ஒரு குழுவினர்.

மதுரையில் நடிகர் பெயரில் கோயில் எழுப்பி கோயிலுள்ளே நடிகர் தம் பிரதிஷ்டை செய்து நாற்பது நாள்கள் அய்யப்பப் பக்தர்கள் போல நோன்பிருந்து, இருமுடி சுமந்து, சாமியே அய்யப்பா' என்பது போல நடிகர் பெயரை உற்சாடனம் செய்து கொண்டே சென்னை வரை புனிதப் பயணம் மேற்கொண்டனர் (இந்தியன் எக்ஸ்பிரஸ் 30.12.1991) இன்னொரு குழுவினர்.

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா என்பது பழைய மொழி. திரையரங்கு இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா என்பது புது மொழி; திரையரங்கில்லாத் தெருவில்

குடியிருக்கக் கூடாது என்பது தற்போதைய நகர்மொழி. இந்நிலையில் 1980 வாக்கில், தொலைக்காட்சி வந்து சேர்ந்தது தெருவில், ஊர்கோடியில், அடுத்த ஊரில் இருந்து தொண்டாற்றி க் கொண்டிருந்த திரைப்படம், வீட்டு அடுக்களைக்கே வந்துவிட்டது. விளைவு? இந்து நாளிதழ் சொல்லுகிறது. சென்னை, தில்லி, பம்பாய், கல்கத்தா, பெங்களுர், ஐதராபாத், திருவனந்தபுரம், கான்பூர் ஆகிய பெருநகரங்களில் தொலைக்காட்சி பார்ப்போர் விரும்பிப் பார்க்கும் காட்சிகளை வரிசைப்படுத்துகிறது. ஏனைய நகர மக்கள் மகாபாரதக் கதைக்கு முதன்மை கொடுக்க, தமிழ் இரசிகர்கள் திரைப்படம், ஒளியும் ஒலியும், திரைமலர் ஆகியவற்றையே மெத்த இரசிக்கின்றனர். எனவே தொலைக்காட்சி வரவு, நம்மைப் பொறுத்தவரை திரைப்படம் பார்த்தலைப் பன்மடங்கு ஆக்கிற்று

திரையரங்கம், தொலைக்காட்சி ஆகிய இரண்டும் வெற்றி கொண்ட நிலையில் 'வீடியோ' வந்துசேர்ந்தது. விரும்பும் படங்களை, விரும்பும் நேரங்களில், விரும்பும் தடவைகள் பார்த்துக் கலையை வளர்ப்பதில் அசுர வேகம் காட்டத் தொடங்கி விட்டனர் நம் மக்கள்

இந்நிலையில் நம் பிள்ளைகள் நம் கைவசம் இல்லை; பகலெல்லாம் தெருவில், பள்ளியில், கல்லூரியில். இரவெல்லாம் தொலைக்காட்சி/திரையரங்குகளின் முன்பு நிற்கிறார்கள். இக்கா வ் (ICAVE - International Coalitiion Against Violent Entertainment) எனும் உலகப் பொதுஅமைப்பு, இருபத்தைந்து நாடுகளில் திரைப்படங்களையும், மக்கள் மேல் நிகழும் பாதிப்பையும்

ஆராய்ந்தது. படங்களில் இடம் பெறும் வன்முறைக் காட்சி, இளைஞர்களின் மனத்தில் பதிகிறது. பதினெட்டு வயதாகும் இளைஞர் தொலைக்காட்சி, திரைப்படம் பார்த்ததன் மூலம் இரண்டு இலட்சம் வன்முறைக் காட்சிகளைப் பார்க்கிறார். (Indian Express 14.1.91) மனநல மருத்துவர், நம் இளைஞர்கள், படக்காட்சிள் மூலம், பதற்றப்படும் மனநோய்க்கு ஆளாகின்றனர் அப்பா அம்மாவை எதிர்ப்பது, அதிகாரிகளை எதிர்ப்பது, ஆசிரியரை எதிர்ப்பது, அடக்கமாய் இருப்பதை அடிமையாய் இருப்பதாக நினைப்பது போன்ற கண்மூடி 'எதுவாயினும் எதிர்ப்பது' என்ற மனநிலைக்குள்ளாகியுள்ளனர். இம்மனநிலை, திரைப்படங்களின் நன்கொடை.

திரைப்படங்கள் அண்மைக்காலங்களில் பால் உறவு வெறி, வன்முறை வெறி என்ற இரண்டைச் சமுதாயத்தில் வேகமாகப் பரப்பி வருகின்றன. இவையிரண்டுமே உலகியல் மெய் நடப்புக்கு மாறாக இருக்கின்றன எனவே இளைஞர்கள், கற்பனைக் கனவுகளில் மிதக்க வைக்கப் பெறுகின்றனர்.

படத்தில் முன்பே வந்துவிட்ட அதே மாதிரியில் மீண்டும் காதல் முதல் சந்திப்பு, கற்பழிப்பு, திருட்டுக் காட்சிகளைக் காட்டாமல், புதிய உத்தியில் காட்ட விரும்புகிறார் பட இயக்குநர், முழு க் கமுழுக்கக் கற்பழிக்கவும், திருடவும் புதியபுதிய உத்திகளைக் கண்டு பிடித்துத் தம் படங்களின் மூலம் அறிமுகப்படுத்துகின்றனர். பக்குவப் படாத நம் இளைஞர்கள் ஒருமுறைக்குப் பலமுறை படம் பார்த்து மனப்பாடஞ் செய்து கொண்டு அங்கங்கே

அமுல்படுத்துகின்றனர். நம்நாட்டில் பாலியல் வன்முறைகள் நூறு சதவிகிதம் மிகுந்துள்ளதாகப் புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கிறது. திருட்டு வழக்குகளில் பிடிக்கப்பட்ட சிறுவர்கள், இளைஞர்கள் தாம் பின்பற்றிய திருட்டு யுக்திகளைத் திரைப்படங்கள் வழி அறிந்து கொண்டதாக வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

1991 ஜனவரியில் (10-20) சென்னை அனைத்துலகத் திரைப்பட விழா நிகழ்ந்தது. 45 நாடுகளில் உருவான 120 படங்கள் திரையிடப் பெற்றன. மிகச் சிறந்த கலைப்படங்கள் வெளியிடப் பெற்ற அரங்குகளில் 30 சதவிகித இருக்கைகள் கூட நிரம்பவில்லை தென்கொரியப் படங்களில் சில மணித்துளிகள் நிருவாணக் காட்சிகள் இடம் பெற்றிருந்தன. அரங்குகள் நிரம்பிவழிந்தன ஆறு ரூபாய்ச் சீட்டு 105 ரூபாய்க்கு மேலும் விற்பனை. இதிலிருந்து நம் கலையார்வத்தைக் கணித்துக் கொள்ளலாம்

ஒன்று வானத்து வட்ட நிலாவைப் போல வெட்ட வெளிச்சமாக விளங்குகிறது. நம் மக்கள், அபரிமிதமாகத் திரைப்படங்களால் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். அது மன நோயாகவும் இருக்கலாம்; விடமுடியாப் பழக்கமாகவும் (addiction) இருக்கலாம். இதிலிருந்து இவர்களை எப்படி மீட்பது? மீட்பது எளிதன்று மாறாகத் திரைவெறியை ஆக்கப்பூர்வமாக மாற்றுதலும், சிந்தித்தலும் நடைமுறைப் படுத்தலுமே நம் முன்னுள்ள அவசர வழிகள்.

படிக்காதோர், படித்தோர், ஆண், பெண், ஏழை, பணக்காரன், மேல்சாதி, கீழ்சாதி என வர்க்கப் பேதமற்றுச்

சினிமாப் பைத்தியம் நம்மைப் பற்றிக் கொண்ட நிலையில், சமுதாய அக்கறை உள்ளவர்களுக்கு மிகமிகப் பொறுப்பு உள்ளது. திரைப்படத் துறையைச் சார்ந்த தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், நடிக நடிகையர் ஆகியோர், மக்களிடமிருந்தே தம் மாடி வாழ்வைப் பெறுகின்றனர். எனவே அவர்களுக்குப் பொறுப்பில் பெரும் பங்குண்டு. தமக்குச் சோறிடும் மக்களுக்குத் துரோகம் செய்யலாமா? பணமும், புகழும் வசதியும் பதவியும் வாய்ப்பும் தருபவர்கள் படம் பார்க்கும் மக்கள்தாமே!

திரையுலக வல்லுநர் பலர் திரையுலக வழி, சமுதாய நன்மையை முன்னிறுத்தினார்கள். சமுகப் பொறுப்புணர்ச்சி குன்றிப்போய், முழுக்கமுழுக்கப் 'பணம் பணம்' பண்ணுங் கொலைத் தொழிலாகவும், விலைத் தொழிலாகவும் கலைத் துறையை ஆக்குவது சமுதாயத் துரோகம், குற்றம்.

பத்திரிக்கைகள், வானொலி, புத்தகங்கள், மேடைகள் அடைய முடியா எல்லையைப் பரப்பைத் திரைத்துறை பிடித்துக் கொண்டுள்ளது. இது திரைத்துறையினர்க்கு மிகப் பெரும் வாய்ப்பு. நம்நாட்டில், திரைத்துறை ஐரோ-அமெரிக்க நாடுகளைப் போல வெறும் பொழுதுபோக்கு மட்டுமன்று. அது மக்கள் சக்தியாகவும், அரசியல் சக்தியாகவும் விசுவரூபம் கொண்டுள்ளது. இந்நிலையில், திரையுலகம் மனம் வைத்தால், நம் சமுதாயத்தைத் தலைகீழாக மாற்றி அமைத்துவிட முடியும். போர்க்காலத்தில் நாட்டைப் பெரிதாக எண்ணும் வணிகப் பெருமக்கள், இலாபத்தை முன் நிறுத்தாமலும், நட்டத்திற்கு ஆட்படாமலும் ஒத்த ஒருங்கிணைந்த நல்ல முடிவுகளை

எடுத்துச் செயல்படுவார்கள். அதுபோலவே, படுபாதாளத்தில் கிடக்கும் நம் சமுதாயத்தை எடுத்து நிறுத்தத் திரையுலகினர் நினைத்தால் முடியும்!

காதல் என்ற போர்வையில் காமக்களியாட்டங்களைக் காட்ட வேண்டா.

முற்றுமாகக் கற்பழிப்புக் காட்சிகளை நிறுத்தி விடலாம்.

சண்டை என்ற பெயரில் சிறிதும் நடப்பில் இல்லாத வன்முறைக்காட்சிகளைத் தவிர்க்கலாம். முற்றுமாகத் தவிர்த்தாலும் தவறில்லை. ஒரு சிறு உரிமையை நிலைநாட்டக்கூடக் குத்துச்சண்டை, கம்புச் சண்டை கற்றுக் கொள்ள எல்லாராலும் முடியுமா? கூட்டாகவும் கூட்டமாகவும் இணைந்து நீதி கேட்க வைத்தலே நீதி. புதுப்புது உத்தி என்ற பேரில், திருடுவதற்கும், பெண்ணைச் சந்திப்பதற்கும், தீண்டுவதற்கும் வழிமுறைகளைக் காட்சிப் படுத்தலைத் தவிர்க்கலாம்

கல்வி நிறுவனங்களைக் கதைக்களஞ்சியங்களாகவும், ஆடல் மேடைகளாகவும் ஆக்குதலைத் தவிர்க்கலாம்.

# தமிழரால் முடிந்தால் தமிழால் முடியும்



க.ப. அறவாணன்